https://tamileelamarchive.com/

செப்ரெம்பர் 2006

# எரிமலை
# ERIMALAI

பூக்களிடம்
தொலைந்துபோன
இயல்பைப்போல...
நேற்றுப்பிடுங்கியெறியப்பட்ட
பெருமரத்தின்
மொட்டுக்களையும்
பிஞ்சுகளையும் குறித்த
துயர்மிகும்
சொற்கள் மட்டுமே
இப்போது
எம்மிடமுண்டு



https://tamileelamarchive.com/



https://tamileelamarchive.com/

எரிமலை



முகமாலைத் தாக்குதலில்
முன்னேறும் புலிகள்

## கட்டுரைகள்


அருஷ் ........ 04

சூ.யோ.பற்றிமாகரன் ........ 08

கலாநிதி க.சோமாஸ்கந்தன் ........ 24

நவீனன் ........ 46


## நேர்காணல்


றொபேட் ஜெயானந்தன் ........ 40


## சிறுகதைகள்


ஆதிலட்சுமி சிவகுமார் ........ 32

மாமுனை மனோ ........ 38

கா.ஜனனி ........ 43

சுகிதராஜன் ........ 49

அமரர் சந்திரா அற்புதலிங்கம் ........ 56





நேர்காணல்



றொபேட் ஜெயானந்தன் 40

## கவிதைகள்


அன்பரசன் ........ 11

ஆதவன் ........ 12

தமிழ்வாணன் ........ 14

கந்தையா நவரேந்திரன் ........ 15

ந.கிருஷ்ணசிங்கம் ........ 16

மாமுனை மனோ ........ 19

அ.பிரியன் ........ 21

அம்புலி ........ 28

யாத்ரிகன் ........ 35

ஆதிலட்சுமி சிவகுமார் ........ 36




https://tamileelamarchive.com/



"

எதிரி ஈவிரக்கமற்றவன்,
போர் வெறிகொண்டவன்;
எமது தாயகத்தைச் சிதைத்து,
எமது இனத்தை அழித்துவிடுவதையே
இலட்சியமாகக் கொண்டவன்.
அவனது இதயக்கதவுகள் திறந்து
எமக்கு நீதி கிடைக்குமென,
நாம் எதிர்பார்க்க முடியாது.

"

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்

https://tamileelamarchive.com/




# போர் தொடங்கிவிட்டது

நான்கு வருடங்களுக்கு செய்யப்பட்ட உடன்படிக்கை அமுலில் இருப்பதாக சம்பந்தப்பட்ட இருபகுதியினரும் கூறிக்கொண்டாலும் அமைதி உடன்படிக்கை செயலிழந்து விட்டதாகக் கொள்ளலாம். தமது இயலாத்தன்மையை வெளிப்படுத்தும் விதத்தில் போர்நிறுத்தக் கண் காணிப்பு குழுவினர் தமிழர் தாயகத்தில் இருந்து சிறீலங்கா தலைநகர் கொழும்பிற்கு சென்றுவிட்டனர். அவர்களால் நிலைமையை கட்டுப் படுத்த முடியாதுள்ளது. நாங்கள் அமைதிப்படையல்ல வெறும் கண் காணிப்பு குழு மாத்திரமே என்று அவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள். அவர் கள் போர் நிறுத்தத்தை கண்காணிப்பதை நிறுத்திவிட்டார்கள். போரைக் கண்காணிக்கத் தொடங்கிவிட்டார்கள். கண்காணிப்புக் குழுவினரின் செயலிழப்பிற்கு இரண்டு காரணமுண்டு கட்டளையிடுவதற்கும் கட்டுப் பாட்டில் கொண்டுவருவதற்கும் அவர்களுக்கு உடன்படிக்கையில் இடமளிக்கப்படவில்லை. இதை நன்கு அறிந்த சிறீலங்கா அரசு அவர் களை துச்சமாக மதித்ததோடு தான்தோன்றித்தனமாக நடக்கத் தலைப் பட்டுள்ளது.

இரண்டாவது பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் சேர்த்ததானது 2002ம் ஆண்டின் அமைதி உடன்படிக்கையை ஆட்டம் காணச் செய்துள்ளது. சிறீலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் சமபங்கினர் சமவலிமை உள்ளவர்கள் என்பது உடன்படிக்கையின் அடிப்படைக்கருத்து. ஒருபகுதியின் அந்தஸ்த்தை குறைத்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் சமபலக் கோட்பாட்டை வலுவிழக்கச் செய்துள்ளது. இதை கண்காணிப்பு குழுவின் உல்ப் கென்றிக்ஷன் வெளிப்படையாகக் கூறியுள்ளார். தாம் இது பற்றி எடுத்துக் கூறியும் ஐரோப்பிய ஒன்றியம் இதை ஏற்க மறந்து விட்டதாகவும் அவர் கூறியுள்ளார். புலிகள் பற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரகடனம் சிறீலங்கா அரசுக்கு சாதகமாக அமைந்துள்ளது. தான் நாட்டின் இறை மைக்காக போரிடும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்பு என்றும் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்றும் பிரசாரம் செய்வதற்கு சிறீலங்கா அரசிற்கு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. அது மாத்திரமல்ல போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி புலிகள் மீது தாக்குதல் நடத்து வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

14 நாள் முன்னறிவித்தல் கொடுத்த பின் போர்ப் பிரகடனம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை அமைதி உடன்படிக்கையில் உள்ளடக் கப்பட்டுள்ளது. இதை அரசு மதித்து நடக்கவில்லை என்று புலிகளின் நிலைகள் மீது வான்தாக்குதல்கள் நடத்தப்பட்டனவோ. அன்றே அரசு போரை தொடங்கிவிட்டது என்று உறுதியாகக் கூறலாம். இன்று அமைதி உடன்படிக்கை செல்லாக்காசாகிவிட்டது. தனது இஸ்ரத்திற்கு இராணு வம் நெடுஞ்சாலை நுழைவாயில்களை மூடுகின்றது. போக்குவரத்துக் களை தடை செய்கின்றது. பொருளாதாரத் தடைகளை போடுகின்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களின் மீது வலிந்த தாக்குதல்களை அரச படைகள் மேற்கொள்கின்றனர். எறிகணை வீச்சு பலகுழல் எறி கணைத்தாக்குதல் விமானக்குண்டுவீச்சு என்பவற்றில் பெரும் எண் ணிக்கையில் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். சர்வதேச தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் படையினரின் நேரடிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளனர். உள்நாட்டு அகதி கள் எண்ணிக்கை பல இலட்சத்தை தாண்டி விட்டது. மன்னார் மாவட் டத்தின் பேசாலை வங்காலை மக்களொட்டுமொத்தமாக இந்தியாவிற்கு சென்று விட்டனர். படையினரால் காணாமற்போவோர் எண்ணிக்கை நாளாந்தம் ஏறிக்கொண்டு போகின்றது இதில் கத்தோலிக்க மதகுரு மாரும் அடங்குவர்.

ரோமாபுரி எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னன் போல் சிறீலங்கா சனாதிபதி தனக்கு பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இருப்பதா கவும் இனப்பிரச்சினையை பேசித்தீர்க்கலாம் என்றும் சர்வதேச ஊட கங்களுக்கு கூறுகின்றார். இவர் யாரை ஏமாற்றுகின்றார் என்று சாத்திரம் பார்க்கத்தேவையில்லை இன்று அதாவது ஆகஸ்ற் இறுதி வாரத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர், தோப்பூரை கைப்பற்றுவதற்கு பெரும் எடுப்பில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு கடும்போர் நடக்கின்றது. இதை இராணுவத்தளபதி லெப் ஜெனரல் சரத்பொன்சேகா, ஏ.பி. செய்திநிறுவனத்திற்கு தெரிவித்துள் ளார். ஆனால் முப்படைகளின் பொறுப்பதிகாரியான மகிந்த இராஜ பஹ்ஷ பேச்சுவார்த்தை பற்றிப் பேசுகிறார். மாவிலாறு, மணலாறு, முகமாலை, மண்டைதீவு, வவுணதீவு, வாகரை இப்படிப் பல கள முனைகளில் போர் நடக்கின்றது. தமிழீழமே குறியாக போரிடுகிறோம். இது தற்காப்பு போர் என்றாலும் நாம் எதிரிக்கு கொடுக்கும் அடிபல மாகத்தான் இருக்கும்.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு
செப்ரெம்பர் 2006
இருபத்தைந்தாம் ஆண்டு
தாய்மண் வெளியீடு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பிரான்ஸ்

https://tamileelamarchive.com/

# யாழில் தமது இருப்புக்காக போராடும் சிங்களப்படை



வேல்ஸ் இல் இருந்து அருஷ்

"மிகச்சிறந்த போர்வீரர்கள் இழப்புக்களில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்வதுடன் எதிரியை வீழ்த்துவதற்குரிய சரியான நேரத்திற்கும் காத்திருப்பார்கள்"

..... Sun Tzu

மாவிலாறு நீர் பிரச்சனையை கொண்டு தனது இராணுவ, அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முயற்சித்த அரசு இன்று பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இராணுவத்தின் இரண்டாம் நிலை தளபதி யான மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராட்சி தலைமையில் 3,000 வீரர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவநடவடிக்கை 26 நாட்களாகியும் இன்று வரை இலக்கை அடையவில்லை. போர்நிறுத்தத்தை தனக்கு கேடயமாகப் பயன்படுத்திக்கொண்டு மட்டுப் படுத்தப்பட்ட இராணுவநடவடிக்கை என்ற பெயரில் தனது நீண்டகால இராணுவ நலன் களை எட்டமுற்பட்டுள்ளது அரசு.

அதாவது தெரிவு செய்த நிலைகள் மீது படைநடவடிக்கைகளையும், விமானத்தாக்கு தலையும் மேற்கொள்வதும் இவை ஒரு முழு அளவிலான போராக மாறி தனக்கு பாதக மாக களம் மாறின் போர்நிறுத்தத்தை பற்றிப் பிடிப்பதும் தான் அரசின் திட்டம். எனவே தான் தனது ஒவ்வொரு படைநடவடிக்கை களின் போதெல்லாம் அரசு போர்நிறுத்தம் தொடர்பாக பேசத்தவறுவதில்லை.

மூதூரை புலிகள் கைப்பற்றியதும், 122 மிமீ பீரங்கி தாக்குதல் மூலம் திருமலை துறைமுகத்தை செயலிழக்க செய்ததும் கிழக்கு பாதுகாப்பு தொடர்பான அரசின் நம்பிக்கையை சிதைத்துவிட்டது. கேந்திர, பொருளாதார முக்கியத்துவமானதும் யாழ் இராணுவத்தின் பிரதான வழங்கல் பின் தளமுமான திருமலைத் துறைமுகம் புலி களின் தாக்குதல் எல்லைக்குள் சிக்கியது அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி விட்டது. இது தொடர்பாக ஆரம்பத்தில் இந் தியாவிடம் முறையிட்ட மகிந்தா அண்மை யில் இணைத்தலைமை நாடுகளிடமும் முறையிட்டு உள்ளார். இந்த முறைப்பாடா னது திருமலையில் புலிகளின் பகுதிமீது ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வ தற்கான அனுமதி கோரல் போன்றே உள் ளது.

புலிகளின் கவனம் ஒரு திசையில் செறி வாகுவதை தடுக்க மேலும் ஒரு களத்தை திறப்பதற்கு முயன்றது அரசு. அது தான் வடபோர்முனை, முகமாலையில் மூண்டது பெரும்சமர், திருமலையை தக்கவைக்க வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட சமர் இராணு வத்தின் வடபகுதி கட்டளை மையமும் வழங் கல் தளமுமான பலாலி கூட்டுப்படை தளத்தை முடக்கிவிட்டது. முகமாலைப் பகுதி ஊடான இராணுவநகர்வு முறியடிக் கப்பட்டதுடன் புலிகள் முகமாலை முன்ன ரங்க படைநிலைகளை கைப்பற்றி இராணு வத்தை பின்நகர்த்தி விட்டார்கள்.

முகமாலைச் சமர் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க புலிகளின் வான்படை தாக்கு



மண்டைதீவுத் தரையிறக்கம்



முகமாலைத் தாக்குதல்



முகமாலைத் தாக்குதல்

https://tamileelamarchive.com/



27 கி.மீ தூரவீச்சுடைய 130 மி.மீ பீரங்கி

தல் விமானம் பலாலி தளத்திற்குள் ஊடுருவி உந்துகணை தாக்குதல் மூலம் கட்டுப்பாட்டு கோபுரத்தையும், பெல் 212 ரக உலங்கு வானூர்தியையும் தகர்த்துவிட்டு பாதுகாப்பாக தளம் திரும்பிவிட்டது. இந்த அதிர்ச்சியில் இருந்து சிங்களப்படைகள் மீளமுதல் பூநகரியின் கல்முனை தளத்தில் இருந்த கிட்டு பீரங்கி படையணி தனது 130 மி.மீ பீரங்கிகள் மூலம் பலாலித்தளத்தின் வழங்கல் தொடர்பை துண்டித்துவிட்டது. அதாவது எறிகணை வீச்சால் விமான ஓடுதளம், காவல்நிலைகள், களஞ்சியங்கள் என்பன சேதமாகியதுடன் விமானங்களும் தரையிறங்க முடியாது போய்விட்டது.

இதனிடையே சனிக்கிழமை (12.08.06) அதிகாலை புலிகளின் ஈரூடக படையணி (Marines) கடற்புலிகளின் துணையுடன் மண்டைதீவில் தரையிறங்கி மண்டைதீவு, அல்லைப்பிட்டி படைத்தளங்களையும், ஆட்டிலறிதளத்தையும் அழித்துவிட்டு தளம் திரும்பிவிட்டது. இந்த நடவடிக்கை புலிகளின் பின்தளத்தின் இயங்கு தன்மைக்கு முக்கியமானது. ஏனெனில் இத்தளமானது விடுதலைப் புலிகளின் பூநகரி பீரங்கித் தளத்தை செயலிழக்கச் செய்யவும், பலாலி நோக்கி முன்னேறும் விடுதலைப் புலிகளுக்கு பின்புறமாக இருந்து தாக்குவதற்கும் ஏதுவாக போர்நிறுத்த காலத்தில் அரசால் உருவாக்கப்பட்டது. இந்தத் தளங்களை பற்றிய தகவல்கள் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக தளத்தை சுற்றியுள்ள மண்டைதீவு, அல்லைப்பிட்டி மக்களை வெளியேற்றும் நோக்குடன் அல்லைப்பிட்டி படுகொலையையும் சிங்களப் படைகள் கொடூரமாக நிறைவேற்றி இருந்தன.

தனது பாதுகாப்பு வியூகங்கள் மிகுந்த சிக்கல் நிலையை அடைவதை அறிந்த அரசு அதன் முன்னணிப் படைப்பிரிவுகளான 53, 55 படையணிகளை களமிறக்கி புலிகளை பின்னே தள்ள பெரும் முயற்சி எடுத்துள்ளது. அதாவது நாகர்கோவில், எழுதுமட்டுவாள், கிளாலி அச்சில் உள்ள முகாம்கள் தான் யாழ் குடாவின் பாதுகாப்பு வேலிகள் இவை தகர்ந்து போனால் குடாநாட்டின் மீதான இராணுவத்தின் பிடி தளர்ந்துவிடும். எனவே தான் இந்த இராணுவநிலைகளை சர்வதேச இராணுவ ஆலோசகர்களின் உதவியுடன் ஆனையிறவுக்கு ஈடாக பலப்படுத்தி இருந்தது அரசு.

புலிகளுக்கும் இது நன்கு தெரியும் அதாவது இந்த நிலைகளை பாதுகாக்க அரசு என்ன விலையை வேண்டுமானாலும் கொடுக்கும் என்பது. எனவே முதலில் எதிரிக்கு சார்பான களத்தில் புலிவீரர்களை களமிறக்கி இழப்புக்களை சந்திப்பதைவிட தமக்கு சாதகமான களத்தில் வைத்து எதிரியின் படைவலுவை அழித்துவிடும் உத்தியையே புலிகள் கையாண்டு உள்ளார்கள். சிங்களத்தின் இந்த இரு முன்னணி படையணிகளினதும் இழப்பு அதன் போரிடும் வலுவை வெகுவாக குறைத்துவிடும். அதாவது மீண்டும் ஒரு தீச்சுவாலைக்கு ஒப்பானது இச்சமர். சிங்கள அரசுக்கு இது தெரிந்தாலும் இந்த முன்னணி நிலைகளையும் அதற்கான சமரையும் இராணுவம் தவிர்க்க முடியாது.

சிங்கள இராணுவத்தில் மொத்தமாக 9 (21, 22, 23, 51, 52, 53, 54, 55, 56 Divisions) படையணிகளை கொண்ட 111,000 (இதில் 42,000 பின்னிருப்பு படையினரும் அடக்கம்) வீரர்கள் உள்ளன. ஆனால் இவற்றில் மூன்றாம் ஈழப்போரில் விசேட படைகள், கமாண்டோக்கள் ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட 53வது படையணியே வலிமை மிக்கது, இந்தப் படையணி அமெரிக்க சிறப்பு படைணினரின் பயிற்சி பெற்ற படையினரையும் கொண்டது. இதற்கு அடுத்ததாக 55 ஆவது படையணியும் சிறப்பு பயிற்சி பெற்ற படையணி. ஏனைய அணிகள் பெரும்பாலும் கைப்பற்றப்பட்ட பகுதிகளை பாதுகாப்பதில் தான் ஈடுபடுத்தப்படுவதுண்டு. எனவே வட -



முகமாலைத் தாக்குதல்



முகமாலைத் தாக்குதல்



முகமாலைத் தாக்குதல்

https://tamileelamarchive.com/

போர்முனையின் வாசலில் வைத்து இந்த இரு படையணிகளையும் சிதைத்துவிட்டால் சிங்களப் படைகளின் போர்வலுவும், மனோ வலுவும் குன்றிவிடும்.

வடபோர்முனையானது யாழ்குடா, மன்னார், வவுனியா மற்றும் மணலாறு பிரதேசங்களை உள்ளடக்கியது. இராணுவத்தின் பெரும் படைவலு இதை சுற்றித்தான் குவிக்கப்பட்டு உள்ளது. அதாவது யாழில் 51, 52, 54 படையணிகளும், 53, 55 களின் ஒரு பகுதியும் உள்ளன. மன்னார், மணலாறு வவுனியா பகுதிகளில் 21, 56 படையணிகளும் 22 இன் ஒரு பகுதியும் உள்ளன. மொத்தமாக 7 படையணிகளும் ஏறத்தாள 55,000 படைவீரர்களும் வடபகுதியை மையமாக்கொண்டே நிறுத்தப்பட்டு உள்ளனர். எனவே வடபோர் முனையில் நிகழ்த்தப்படும் சமர் இராணுவத்தின் உச்சபலத்துடன் மோதும் களமாகவே இருக்கும் என்பதுடன் இந்த போர்முனைகளில் ஒன்றையாவது இராணுவம் இழந்தால் போரை இழந்ததிற்கு சமனாகிவிடும்.

இதுதான் முகமாலைச் சமரின் உக்கிரத்திற்கான காரணம், ஒரு வாரம் நிகழ்ந்த சமரில் 485 படையினரை அரசு இழந்ததுடன் 1500 பேர் காயமடைந்து உள்ளனர். ஒரு பிரிகேட்டை விட அதிகளவு படையினர் களத்தை விட்டு அகற்றப்பட்டு உள்ளனர். அரசு 14 அதிகாரிகள் உட்பட 155 படையினர் பலியாகியதாகவும், 2 அதிகாரிகளும் 21 படையினரும் காணாமல் போனதாகவும் 43 அதிகாரிகளும் 685 படையினரும் காயமடைந்ததாகவும் கூறியுள்ளது. ஆனால் இடைவிடாது கொழும்பில் ஓடிய அம்புலன்ஸ் வண்டிகளும், இரவோடு இரவாக அனுராதபுரத்தில் இரகசியமாக எரிக்கப்பட்ட படையினரின் சடலங்களும் அரசின் கூற்றுக்களை பொய்யாக்கி உள்ளன. புலிகள் தரப்பில் 88 வீரர்கள் வீரச்சாவடைந்தனர், முன்னைய சமர்களுடன் ஒப்பிடும் போது புலிகளின் இழப்பு குறைவானது இது அவர்களின் போரிடும் திறனின் வளர்ச்சியையும், கனரக ஆயுதங்களின் நேர்த்தியான கையாழுகையையும் காட்டுகிறது.

ஆயுத இழப்புக்களை பொறுத்தவரையில் 06 செக்கோஸ்லாவாக்கிய நாட்டு தயாரிப்பான பிரதான T-55 ரக யுத்த தாங்கிகளுடன் பல ஆட்டிலறிகளையும் 01 பெல் 212 உலங்குவானூர்தியையும் வடபோர்முனையில் இதுவரை இராணுவம் இழந்துள்ளது.

தற்போது அரசிற்கு உள்ள மிகுந்த நெருக்கடியான விடயம் யாழ்குடாவை தக்க வைப்பது தான். இதன் இழப்பு அரசிற்கு அரசியல் ரீதியாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதுடன் இராணுவ ரீதியாகவும் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிடும். எனவே தான் யாழ்குடாவை கைப்பற்ற 1995 இல் இராணுவம் இழந்ததை விட அதை தக்கவைப்பதற்கு பலமடங்கு படையினரையும், ஆயுத தளபாடங்களையும் இன்று வரை அரசு இழந்து கொண்டிருக்கிறது. 1997 இல் அரசால் ஆரம்பிக்கப்பட்ட ஜெயசுக்குறு படைநடவடிக்கை கூட தரைப்பாதையை திறந்து யாழ்குடாவில் உள்ள படையினரின் விநியோகப் பாதையை சீராக்கி ஆக்கிரமிப்பு படைகளை தக்கவைப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது.

இதைப்போலவே யாழ்குடாவை தக்க வைப்பதற்கு அரசு மேற்கொண்ட சமர்களும், எதிர்கொண்ட சமர்களும் ஏராளம் ஜெயசுக்குறு, சத்ஜெய, ஓயாத அலைகள் - 2, ஆனையிறவு - பரந்தன் தளம்மீதான புலிகளின் ஊடுருவித்தாக்குதல், ஓயாத அலைகள் - 3, ஆனையிறவுச்சமர், தீச்சுவாலை என தரையில், கடலில், வானில் நடந்த சமர்களின் பட்டியல் நீளம். அரசு இழந்த படையினரும், ஆயுதத்தளபாடங்களும் மிக மிக அதிகம். ஆனால் யாழ்குடாவை நீண்டகாலம் தக்க வைப்பதற்கு சிங்கள அரசுகள் ஆரம்பித்த எந்தச் சமரும் அரசிற்கு வெற்றியைக் கொடுக்கவில்லை மாறாக ஒவ்வொரு சமரையும் அரசு இழந்தது தான் யதார்த்தம்.

இப்போது மீண்டும் யாழ்குடாவின் வாசலில் மூண்டுள்ள சமர் ஒரு முனைச்சமராக மட்டுமல்லாது இராணுவத்தின் பிரதான வழங்கல் தளங்களான பலாலி, திருமலை தளங்களின் இயங்கு தன்மையையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. இராணுவமும் தமது இருப்பைத் தக்கவைக்க தனது முழுவளங்களையும் பயன்படுத்திப் போராடுகின்றது. இது இராணுவத்தின் யாழ் மீதான ஆக்கிரமிப்பை தக்க வைப்பதற்கான போராட்டம் மட்டுமல்ல சிங்களப் படைகளின் ஒட்டுமொத்த பலத்தையும் தக்க வைப்பதற்கான சமரும்கூட. ஆனால் உலகின் கடந்த கால வரலாறுகளில் ஆக்கிரமிப்பாளர்கள் வென்றதுமில்லை, பேரழிவை சந்திக்காமல் அவர்களின் போர்வெறி அடங்கியதும் இல்லை. சிங்கள அரசிற்கும் இதுவே பொருத்தமும் ஆகும்.



மாவிலாறு அணைக்கட்டு



மாவிலாறு அணைக்கட்டு அருகே விடுதலைப்புலிகளின் காவலரண்



ஒளிப்படங்கள்: ஈழவிஷன்

https://tamileelamarchive.com/

# சின்னத்தம்பி சிவமகாராஜா அவர்களுக்கு மாமனிதர் விருது வழங்கிக் கௌரவிப்பு

23 ஓகஸ்ட் 2006

முன்னாள் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், நமது ஈழநாடு பத்திரிகையின் நிர்வாக இயக்குனருமான சின்னத்தம்பி சிவமகாராஜா அவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு திரு.வே.பிரபாகரன் அவர்கள் தமிழீழத்தின் அதியுயர் விருதான மாமனிதர் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை தமிழீழத் தேசியத்திற்காக உழைத்த அவருடைய உயரிய பணியை கௌரவிக்குமுகமாக தமிழீழத்தின் அதியுயர் விருதான மாமனிதர் விருது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.



மாமனிதர் சின்னத்தம்பி சிவமகாராஜா

இது தொடர்பாக
தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால்
வெளியிடப்பட்ட செய்தி

சுயவாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, பொதுநல வாழ்வை இலட்சியமாக வரித்து, அந்த இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த உயர்ந்த மனிதரை இன்று நாம் இழந்துவிட்டோம். தமிழின விடுதலைக்காக ஒளிர்ந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்துவிட்டது. எதிரியின் கோரமான தாக்குதலுக்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார். இந்த இலட்சிய மனிதரை இழந்து எமது தேசம் இன்று ஆறாத்துயரில் மூழ்கிக்கிடக்கிறது.

திரு.சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நல்ல மனிதர். அசாத்தியமான குண வியல்புகள் கொண்டவர். எளிமையும் இனிமையும் இணைந்த ஒரு இனிய மனிதர். அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்வார். அனைவரையும் கவர்ந்துகொண்ட ஒரு புரட்சிகரமான அரசியல்வாதியும் சமூக சேவையாளருமாவார்.

இவர் ஒரு சிறந்த தேசபக்தர். எமது மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தவர். தமிழரின் வாழ்வு சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு சிதைந்து போவதை அவர் அறவே வெறுத்தார். இந்த இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்கள் முற்றாக விடுபட்டு, விடுதலை பெற்று, சுதந்திரமாக, நிம்மதியாக, கௌரவமாக வாழ்வதையே தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரித்துக் கொண்டார். இந்த இலட்சியப்பற்று அவரை எமது விடுதலை இயக்கத்தோடும் இறுகப்பிணைத்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் போராட்ட இலட்சியத்தையும் முழுமையாக நேசித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தார்.

அரசியல், ஆன்மீகம், கூட்டுறவு, ஊடகம் எனப் பல்வேறு பெரும் தளங்களில் இவர் செயற்பட்டார். இவரது செயற் தளம் அகன்று விரிந்திருந்தது. யாழ். மண்ணோடும் அந்த மண்ணில் மக்களோடும் ஒன்றியதாக அவரது வாழ்வு சுற்றித்திரிந்தது. எதிரியின் அகோர ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள யாழ். மண்ணில் நின்றவாறு, எதிரியின் அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அசைந்து கொடுக்காமல் யாழ். மக்களுக்கு என்றுமே காப்பரணாக நின்றார்.

போர் நெருக்கடிமிக்க நாட்களில் அந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்தார். ஆக்கிரமிப்புப் படைகளின் அழிவுகளையும் அட்டூழியங்களையும் நெஞ்சுறுதியுடனும் நேர்மைத்திறனுடனும் உலகிற்கு வெளிக்கொணர்ந்தார். மக்களிடத்தில் விடுதலை உணர்வையும் தேசப்பற்றையும் தட்டியெழுப்பினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக யாழ். மண்ணில் 'நமது ஈழநாடு' என்ற பத்திரிகையை ஆரம்பித்து, அப்பத்திரிகையின் நிர்வாக இயக்குனராக இருந்து அந்தப் பத்திரிகையின் இன்றைய வளர்ச்சிக்குப் பங்களித்தார். இவர் ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றிய மக்கள் பணி அளப்பரியது.

திரு. சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப் பணியை கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். 'சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்து விடுவதில்லை'. அவர்கள் எமது தேச ஆன்மாவில் என்றும் நீங்காத நினைவுகளாக காலமெல்லாம் நிலைத்திருப்பார்கள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே.பிரபாகரன்.
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

https://tamileelamarchive.com/



பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

# சிறீலங்காவின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ள சில உண்மைகள்

■ தமிழீழ விடுதலைப்புலிகள் தேச நிர்மாணச் செயற்பாட்டிலேயே ஈடுபட்டுள்ளனர்.

■ இடைக்கால நிர்வாகங்கள் பலவற்றுக்கு ஊடாகவே செல்ல வேண்டும்.

■ நம்பிக்கையுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையே வழி.

■ சமாதான முயற்சிக்கு சக்தியளிக்க வேண்டுமென்ற எண்ணமே இன்றைய அரசுக்கு இருந்ததில்லை.

சூ.யோ.பற்றிமாகரன் MA (Politics of Democracy) BSC BA Diploma ( Housing) Special Diploma (Oxford)

சிறீலங்காவின் மூத்த அரசியல் விஞ்ஞானப் பேராசிரியரும் கொழும்பு பல்கலைகழகத் தினுடைய அரசியல் விஞ்ஞான பீடத் தலை வரும் கொழும்பில் உள்ள கொள்கைகளை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்யும் மையத்தின் நிறுவனர்களில் ஒருவருமாகிய பேராசியர் ஜயதேவ உயன்கொட அவர்கள் றீடி .கொம் கணனி வலையின் முகாமைத்துவ ஆசிரியர் சீலா பாட்க்கு 2006 ஆகஸ்ட்டு 21ம் திகதியும் 25 ம் திகதியும் அளித்த செவ்வி இன்றைய கால கட்டத்தின் முக்கியமான ஆவணங்களில் ஒன் றாகிறது.

பேராசிரியர் ஜயதேவ உயன்கொட ஜனா தா விமுக்தி பெரமுனையின் செயற்பாட்டா ளராக அவருடைய மாணவ பருவத்தில் திகழ்ந்து 70களில் சிறைப்பட்டு பின்னர் விடு தலையானதன் பின் அமெரிக்காவின் ஹவா ய்ப் பல்கலைகழகத்தில் பங்களாதேசில் தேசியவாதமும் அரசஉருவாக்கமும் என்ற தலைப்பில் கலாநிதி ஆய்வை மேற் கொண்டவர். அத்துடன் சிறீலங்கா : நவீனத் துவம் சமூகமாற்றங்கள் மற்றும் நீதிக்கான கோரிக்கை என்னும் நூலை எழுதியவர். கூடவே சிறீலங்காவில் அமைதியை உரு வாக்குதல் : உள்நாட்டு யுத்தமும் மீளவும் ஒப் புரவாதலும் என்னும் படைப்பையும் வன் முறையின் விடயங்கள் சிறீலங்காவின் அரசி யல் சமுக வன்முறைகளில் ஒரு பார்வை என் னும் படைப்பையும் உருவாக்கியவர். 1999 களில் சிறீலங்கா அரசாங்கத்துடன் இணை வாக அரசியல் அமைப்பு வகைமாதிரி ஒன்றை எழுதுவதில் பங்கேற்றவர். இவர் சமாதான முயற்சிகளில் பங்கேற்றதன் பின்னணியில் சிறீலங்காவின் சமாதான முயற்சிகளை விளக்குவதற்கான திறனாய்வுக் கட்டுரைகள் என்ற தொகுப்பின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்தவர். இந்தப் பின்னணிகளில் சிங்கள தேசிய இனத்தின் சார்பில் குரல்தரவல்ல ஒருவராக பேராசிரியர் ஜயதேவ உயன் கொடவைக் கருதலாம்.

இவரது செவ்வியில் உள்ள அரசியல் விஞ்ஞான அணுகுமுறையிலான பார்வைகள் சில தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்து புத்திஜீவித்துவ நேர்மையுடன் முன்வைக்கப் பட்டு உள்ளது. இவரின் கூற்றுக்களின் வழி சர்வதேச உலகு தெரிந்து கொள்ள வேண் டிய அல்லது மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய உண்மைகளை எடுத்து நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கு.

இன்றைய வன்முறைகளுக்கு எந்தக் காரணிகள் பங்களிக்கின்றன என்ற கேள்வியு டன் செவ்வி தொடங்கியுள்ளது. இதற்கு 2002 பேச்சுவார்த்தை முடிவடைந்ததின் பின் புதிய தொடக்க முயற்சிகள் எடுக்கப்பட்ட போதி

https://tamileelamarchive.com/





மகிந்த ராஜபக்ச

லும் அவை குறித்து தீர்மானிக்காத நிலை நிச்சயமற்ற தன்மையை தோற்றுவித்தது. இதனுடைய செயற்பாடாக வன்முறையும் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தமும் தீர்மானங்களை மேற்கொள்ளும் காரணிகளாகியுள்ளன என பேராசிரியர் ஜயதேவ உயன்கொட பதில் அளித்துள்ளார்.

இதன் வழி சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு காட்டிய கால தாமதங்கள் அலட்சியங்களே இன்றைய அவலங்களின் காரணம் என்ற விளக்கத்துடன் அவரின் செவ்வி ஆரம்பமாவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ்விடத்தில் செவ்வி கண்டவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சே தலைமையிலான புதிய அரசாங்கம் முன்னைய அரசாங்கம் கொண்டிருந்த சிறீலங்காவுக்கான கூட்டாட்சி கட்டமைப்புக்கான எண்ணங்களை ஐதாக்க முயன்றமைதான் இன்றைய வன்முறைகளுக்கான காரணம் என்று சில ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இது வன்முறை மாற்றங்கள் தோன்றியமைக்கான காரணியாகலாமென கருதுகின்றீர்களா? என பேராசிரியர் உயன்கொடவிடம் கேட்டார். இதற்கு "அது சரியல்ல. 2002ல் பேச்சுவார்த்தைகளை தொடங்கிய முன்னைய அரசாங்கத்திடமே தெளிவான அரசியல் நிகழ்ச்சி நிரலோ அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களின் வெளிப்பாடுகளின் அடிப்படையிலான பாதை வரைபோ இருக்கவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் சிறீலங்காவின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தங்களின் இடைக்கால நிர்வாகம் ஒன்றை வைத்திருக்கலாமென்று நினைத்தனர். இத்தகைய நிலை பகிர்வுகளை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்திய தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கம் பின்னைய காலத்தில் விரும்பவில்லை. அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்பார்த்த பரந்தளவிலான பிரதேச சுயாட்சியைத் தாங்கள் கொடுக்க கூடாதெனக் கருதினார். பேச்சுக்கள் 2003ல் முன்னைய அரசாங்கத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் பேசிக் கொண்டிருக்கையிலேயே முறிவடைந்தன. 2002 பேச்சுக்கள் முறிவடைந்த நிலையிலேயே இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்தது. இன்றைய அரசாங்கத்திற்கு புதிதாகப் பேச்சுக்களை தொடங்குவதென்பது சவாலாக அமைந்தது. இன்றைய அரசாங்கம் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு சக்தியளிக்கவோ அல்லது புதிதாக கட்டியெழுப்பவோ எந்த புதிய நடவடிக்கைகளையும் எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை" என பேராசிரியர் உயன்கொட கூறினார். இவருடைய இக் கூற்றுக்கள் ரணில் விக்கிரமசிங்காவுக்கோ அல்லது மகிந்த ராஜபக்சேக்கோ சமாதான வழித் தீர்வினை நடைமுறையில் முன்னெடுப்பதற்கான விருப்பு இருந்ததில்லை என்பதை உலகிற்கு உறுதிப்படுத்தி விடுகிறது.

மேலும் இன்றைய அரசாங்கம் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு சக்தியளிக்கவோ அல்லது புதிதாக கட்டியெழுப்பவோ எந்த புதிய நடவடிக்கைகளையும் எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை என ஏன் கூறுகின்றீர்கள் எனச் செவ்வி கண்டவர் கேட்டதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளினதும் சிறீலங்கா அரசாங்கத்தினதும் அரசியல் தீர்வுப் பார்வைகளை ஆராய்வதன் மூலம் தான் பதிலளிக்க விரும்புவதாக பேராசிரியர் உயன்கொட பதிலளிக்கத் தொடங்கினார். "தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் தீர்வுப் பார்வை அது உள்ளக அரசியல் தீர்வாக இருப்பினும் கூட 1978ம் ஆண்டின் அரசியலமைப்புக்கு அப்பால் பரந்த அளவிலான பிரதேசச் சுயாட்சியினை கொண்டது. ஆனால் இன்றைய அரசாங்கத்தின் தீர்வுப்பார்வை என்பது 1978ம் ஆண்டின் அரசியலமைப்புக்குள்ளான ஒன்று. தற்பொழுதுள்ள சிறீலங்காவின் அரசியலமைப்பு ஒற்றையாட்சியை வலியுறுத்துகிறது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் தீர்வுப்பார்வை மரபுமுறை கூட்டாட்சிக்கும் அப்பாலான ஒன்று. மரபு ரீதியாக கூட்டாட்சி என்பது அரசியலமைப்புச் சட்டகத்துள் உறுதியான மைய அரசையும் அதனுடன் இணைந்த சிறியஅளவிலான பிரதேச தனித்துவங்களை கொண்ட அலகுகளாலும் அமையுமொன்று. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் பார்வையில் மைய அரசை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் வடக்கு கிழக்கின் பிரதேச அலகு மரபுநிலை கூட்டாட்சிக்கும் அப்பால் பரந்த சுயாட்சியை கொண்டதாக எதிர்பார்க்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதேச அலகு தன்னுடைய இராணுவ நிறுவனங்களையும் அமைப்புக்களையும் பேணும் உரிமையுள்ளதாக அமைய வேண்டுமென்கிறார்கள். முழுமையானதும் இறுதியானதுமான தீர்வு அமுல்படுத்தப்படும் வரை சிங்கள அரசியல் வர்க்கத்தால் நடாத்தப்படும் அரசாங்கத்தின் ஒப்பந்தங்களுக்கு எந்த உத்தரவாதமுமில்லை என்பதே தங்களுடைய இராணுவ நிறுவனங்களையும் அமைப்புக்களையும் பேணும் உரிமையுள்ள கூட்டாட்சிக்கான அவர்களின் வாதமாக உள்ளது. இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் உச்சமான பிரதேச சுயாட்சியையும் சிறீலங்கா அரசாங்கம் மிக மிகக் குறைந்த அளவிலான பிரதேச சுயாட்சியையும் கொண்ட நிலையில் மிகப்



வடமுனை போர்க்களத்தில் புலிகள்

ஒளிப்படம்: சங்கதி

https://tamileelamarchive.com/

பெரிய இடைவெளி இரு பகுதிகளுக்கும் இடை இருப்பது தெளிவாகிறது. என பேராசிரியர் உயன்கொட விளக்கினார்.

இவ்விடத்தில் அப்படியாயின் எப்பொழுது இவை இரண்டும் சந்திக்கும் எனச் செவ்வியாளர் கேட்டார். அதற்கு இது மிகவும் கடினம். பேச்சுவார்த்தை இறுதியான பெரிய முடிவுக்கு போவதை விட இடைக்கால நிர்வாகங்கத்தின் ஊடாக செல்ல வேண்டும். நாங்கள் பல தொடர்ச்சியான இடைக்கால நிர்வாகங்களின் ஊடாகவே செல்ல வேண்டும். எனப் பேராசிரியர் உயன்கொட உறுதியாகப் பதிலளித்தார். இதன் வழி தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத்திற்கான செயற்திட்டத்தை சிறீலங்கா கவனத்தில் எடுக்காமல் விட்டமையே இன்றைய அவலங்களின் மூலகாரணம் என்பதை பேராசிரியர் கூறாமல் கூறியுள்ளாரெனலாம்.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் இதுதான் இறுதிக்கட்ட யுத்தம் என்று கருதுவதாகவும் அவருடைய நிலை மேலோங்கியுள்ளதாகவும் இதனால்தான் இன்றைய போராட்டத்தில் அவர் மிகவும் உறுதியாக உள்ளதாகவும் மதிப்பீடொன்று கூறுகிறது. அவர் வாழ்வா அல்லது சாவா என்கிற நிலையில் உள்ளதாக நீங்கள் கருதுகின்றீர்களா? எனச் செவ்வியாளர் கேட்டதற்கு "இல்லை. நான் பிரபாகரனைச் சந்தித்தவனில்லை அதனால் இது பற்றி நிச்சயமாக எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் அறிக்கைகளையும் நடத்தையினையும் பார்க்கும் பொழுது அவர்கள் 1987ல் 1990களில் இருந்த நிலையில் அவர்கள் இல்லை. என்னுடைய சொந்தப் புரிந்துணர்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாகவும் அர்ப்பணிப்புடனும் தேசியத்தைக் கட்டியெழுப்பும் அரசைக் கட்டியெழுப்பும் செயல் முறையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அல்கெய்டா போல அரசியல் இராணுவத் தற்கொலைகளில் அக்கறை காட்டவே மாட்டார்கள்" எனப் பேராசிரியர் பதிலளித்தார். இந்தப்பதிலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேச நிர்ணமான அரசியல் செயல்முறை எனப் பேராசிரியரால் ஏற்கப்படுகிறது. எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் தேசிய விடுதலைப் போராட்டமொன்றை முன்னெடுக்கும் மக்கள் அமைப்பு என்கிற உண்மை மீளவும் பேராசிரியரால் நிறுவப்படுகிறது.

இன்றைய சிங்கள தமிழ் தேசிய இன முரண்பாடு எப்பொழுது முடிவுக்கு வரும் என்கிற எதிர்பார்ப்பு கேள்விக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதேச சுயாட்சியின் உச் சமான செயல்முறைகளை எதிர்பார்ப்பாகக் கொண்டுள்ளார்கள். ஆனால் சிங்கள அரசியல் வர்க்கமோ மிகமிகக் குறைந்த அளவிலான பிரதேச சுயாட்சியையே தனது திட்டமாக கொண்டுள்ளது. இவ்வாறு இரு அந்தங்களில் சிறீலங்கா இனமுரண்பாடு உள்ள சிக்கலான நிலையை இந்தியாவோ சர்வதேச நாடுகளோ உணர்வதாகத் தெரியவில்லை. எனவே சிறீலங்காவின் இனமுரண்பாட்டுக்கு இலகுவில் தீர்வு ஏற்படுமெனக் கூறமுடியாது என்பது பேராசிரியரின் பதிலாக அமைந்தது. இந்தப் பதிலின் வழி சிறீலங்கா அரசியல் வர்க்கம் தமிழர்கள் எதிர்பார்க்கும் அரசியல் அதிகாரப் பகிர்வை எண்ணிக் கூடப் பார்க்காது என்பது பேராசிரியரால் தெளிவாக்கப்பட்டுள்ளது. இங்கு பேராசிரியர் சிங்கள அரசியல் வர்க்கம் என்னும் சொல்லைக் கையாள்வது சிங்கள மக்களின் முடிவாக இல்லாது ஆளும் வர்க்கம் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்காக முடிவுகளை மேற்கொள்கிறது என்பதனை வெளிப்படுத்துகிறது. எனவே சிங்கள அரசியல் வர்க்கத்திற்கு எதிரான தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்பதையும் பேராசிரியர் தன்னை அறியாது தனது செவ்வியில் உறுதி செய்து கொள்கிறார்.

தொடர்ந்து இந்தியாவும் சர்வதேச உலகும் அதனை விளங்கிக்கொள்ளவில்லை என்பதற்கு பேராசிரியர் ஜயந்த உயன்கொட ஆளும் பெரும்பான்மை வர்க்கம் சிறுபான்மை இனத்துக்கு சமத்துவத்தை அளிக்கக் கூடிய தீர்வு ஒன்றை வழங்குவதற்கு இப்பொழுது கூட ஆயத்தமாகவில்லை என்பது முதலாவதாக விளங்கிக்கொள்ளப்படவில்லை என்கிறார். இரண்டாவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அல்லாத தமிழ்க்குழுக்களால் முன்வைக்கப்பட்ட மிகக்குறைந்த அளவிலான சமத்துவத்தை அளிக்கும் திட்ங்களைக் கூட சிறீலங்காவால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும் என்கிறார். இந்தப் பழைய தமிழ் அமைப்புகள் இந்தியர்களால் 1987ல் அமுல் செய்யப்பட்ட சிறீலங்காவின் அரசியலமைப்பின் 13வது பிரிவுக்கு அப்பால் சென்று வளமுள்ள பிரதேச சுயாட்சி ஒன்றை ஒழுங்கு செய்ய வேண்டும் என்கிறார்கள் என விளக்கமளிக்கும் பேராசிரியர் உயன்கொட சிறீலங்கா அரசாங்கம் அரசியலமைப்பின் 13வது பிரிவை மாற்றுவதற்கான நோக்கை ஏற்காது என்பதை இதன் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

அப்படியாயின் இதற்கு என்ன பதில் என்ற கேள்விக்கு கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவின் கூட்டாட்சி சமச்சீரற்ற தன்னாட்சி முறைகளை அங்கீகரித்துள்ளது எனத் தனது பதிலைத் தொடங்குகிறார். இதன்வழி இலங்கையில் பெரும்பான்மை சிறுபான்மை என்ற மாயவாதங்களைக் கைவிட்டு தமிழர்களின் இருக்கையின் யதார்த்தத்தை வெளிப்படுத்தும் தன்னாட்சி ஒன்றின் தேவையை பேராசிரியர் உயன்கொட கூறாமல் கூறுகிறார். அத்தகைய தன்னாட்சி சமச்சீரற்ற தன்னாட்சியாக அதாவது இலங்கையின் சனத்தொகையை மையப்படுத்தாது தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளை மையப்படுத்திட வேண்டும் என்பது பேராசிரியரின் கருத்தாக அமைகிறது. இந்தக் கருத்துக்கு அரண் சேர்க்கத் தக்க வகையில் வடகிழக்கை இந்தியாவின் ஜம்மு கஸ்மீருடன் ஒப்பிடுகிறார். இந்தியா தனது எல்லைகளை எந்தப் பிரச்சினைகளும் இல்லாது மறுவடிவமைத்தது என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் சிங்கள அரசியல் வர்க்கம் அரசின் அதிகாரகட்டமைப்புக்களை அறிவார்ந்த ரீதியான மறுஅரசியலமைப்பின் மூலம் மாற்றியமைக்க இப்பொழுதும் ஆயத்தமாக இல்லை என்பதைப் பேராசிரியர் எடுத்து விளக்குகிறார். கடைசியாக இனப்பிரச்சினையின் இறுதித் தீர்வு என்பது காலனித்துவ பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட ஒற்றை ஆட்சி அரசினை மற்றொரு அரசியல் அமைப்பால் மாற்றியமைப்பதையே வேண்டி நிற்கிறது. இதனை தமிழீழ விடுதலைப்புலிகளுடனா அல்லது அவர்கள் இல்லாமலா செய்வது என்பதை விட கடந்த 25 ஆண்டுகாலமாக சிங்கள அரசியல் வர்க்கம் இத்தகைய ஒரு நிலைக்கு போக வேண்டும் என்று இதுவரை எண்ணிப்பார்க்கவில்லை என்பதே முக்கியம் என்கிறார் பேராசிரியர் உயன்கொட. இதன் மூலம் பேராசியர் உயன்கொட அரசியலமைப்பு மாற்றத்தை எண்ணிக்கூடப் பார்க்காத சிங்கள அரசியல் வர்க்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இதற்கு இணங்குவார்களா இல்லையா என்ற கோஷத்தின் மூலம் தீர்வு எதையும் காண விரும்பாது காலஇழுத்தடிப்பைச் செய்கிறது என்பதை தெட்டத் தெளிவாக்குகிறார்.

இவ்விடத்தில் சிறீலங்காவுக்கு இந்தப் புரிந்துணர்வு வருவதற்கு முன்னர் இன்னும் எத்தனை மக்கள் சாகடிக்கப்படுவார்கள் என்கிற கேள்வி எழுப்பப்பட்ட பொழுது இது தான் சோகமான துன்பியல் நிகழ்வாக உள்ளது. இதுதான் அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது எனத் தனது பதிலைத் தொடங்கிய பேராசிரியர் நீண்டகாலமாகப் புரையோடிப் போன இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நீண்ட காலம் எடுக்கத்தான் செய்யும் இதனாலேயே முடிவுகாணா பூரண திருப்பதியற்ற பேச்சுவார்த்தை முயற்சிகளைக் கண்டுள்ளோம். இதனை மறைநிலைச் சமாதானம் என்று கூடச் சிலர் அழைக்கின்றார்கள். இடத்தில் நம்பிக்கையுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையே இதிலிருந்து விடுபடுவதற்கான தொடக்கமாக முடியும் எனத் தனது கருத்தை முடித்தார். இதன் வழி யுத்தநிறுத்தத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த சிறீலங்கா தவறியதே பேச்சுக்களின் மூலம் தீர்வின் தோல்வியாகிறது என்பதையும் பேராசிரியர் தெளிவுபடுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது.

■

https://tamileelamarchive.com/



ஒளிப்படம்: சங்கதி

# ஓலம்

அரச மரத்திலையில் இப்போது
காகங்களின் எச்சங்கள்
அதன் வேர்கள் எல்லாம்
நிலக்கறையானின் ஊர்கோலம்
ஆணிவேர் துளையிட முடியாதபடி
கீழிருக்கும் திராவிடக் கோட்டையின்
கருங்கல் படிவங்கள்
இருந்தும் காவிநிறக் குரங்குகளின்
மரநுனியில் 'பிரித்' ஓதல்கள்
மரங்கொத்திகள் ஆங்காங்கே
துளைகளிட்டன
அப்பொழுதும் ஓதல்களின்
ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.
துளைகளிடையே பறவைகளின்
எச்சங்கள். அதனிலே அதன் கூடுகள்.

நாகபாம்புகளும் வரிசையாக
அரச மரத்தில் ஊர்வலம் செய்தன
அந்தக் குரங்குகளின் ஓதல்கள்
இப்போது அலறல்களாக
வானைப் பிளந்தன
'எம் பிரான் புத்தனெங்கே'

அன்பரசன்

# கால மாற்றம்

மனிதக் குதறல்களின் வடுக்கள்
பற்களில் கறைகளாகத் தெரிந்தன.
கட்டாயமாகப் பச்சை மரத்தின்
பட்டைகளை அவர்கள் பிரித்தார்கள்.
நிலவின் ஒளிக்கீற்றில் குளிரும்
மணல்மேட்டில் உல்லாசமான
நண்டுகளின் பயணத்தை
ஊளையிடும் நாய்கள் தடுத்தன
வட்ட நிலவை ரசித்திட
கண்களில் மேல் கருந்திரை
அது அவர்களால் மட்டும்தான்
இப்படிச் செய்யமுடிந்தது
கொடியினில் மிரட்டிடும்
வாழின் கூர்தனில்
பச்சையும் மஞ்சளும் தயார் நிலையில்
இறப்பால் எதையும் சொல்லத்
துடித்த வாய்கள் அப்போது தனியாகத்
துண்டாடப்பட்டு தூக்கிலிடப்பட்டது
அதுவும் அவர்களால் மட்டும்தான்
இப்படிச் செய்ய முடிந்தது
எப்படிச் சிறி எழுத வேண்டும் என்று
சொல்லிக் குறிப்பிட அவர்களால் தான்
அன்று முடிந்தது
இன்று அப்படியில்லை
ஆனையிறவில் புலிக்கொடி பறக்கிறது.

https://tamileelamarchive.com/

# பாட்டி சொன்ன கதை 10

ஆதவன்













[எனது மாணவிகளுக்குச் சமர்ப்பணம்]

1.

'பிறகென்ன.... எங்கள் பூக்களை ஒவ்வொன்றாய்
சிதையில் அடுக்கினோம்.
ஒருவருக்கும் கொள்ளி வைக்கும் மனோதிடம்
இருந்திருக்கவில்லை!

மகளே கேள்!

யார் தான் பிஞ்சுகளுக்கும் குஞ்சுகளுக்கும்
கொள்ளி வைப்பார்கள்?
அதுவும் இம்முறை பூக்கள்....
யாரால் முடியும் ?
ஒருவனை அழைத்து ஊர் பூராவும் தண்டோரா
போட்டு டமாரம் அடித்து
இறந்து போன பூக்களுக்கு கொள்ளி வைப்போர்
யாராகிலும் வருக என்றோம்;
எவனும் துணியவில்லை.
எல்லோருமே ஏதோ பிரமையில் கண்ணீருடன் தான்
இருந்திருந்தார்கள்.
நான் மட்டும் என் நெஞ்சை நிமிர்த்தி வாங்கடா
என்று கொள்ளி வைத்தேன்.
அதுதான் என் வலது மார்பகத்து தீத் தழும்பு!'

2.

'அடியே என் ராசாத்தி....

வள்ளிபுனத்துத் தாய்மாரெல்லாம் ஒன்றுகூடி
மாரடித்து அழுதோமடி.
மூத்தவள் நான் என்பதால் ஓங்கி ஓங்கி
அடித்தழுதேன்
அடித்த தழும்பு பாரடீ என் இடது பக்க மார்பினிலே'

3.

'ஒப்பாரிக்கென்று ஊர் தேடி அலைந்தொரு
கைப்பாவை கூட்டிவந்தோம்
வெறும் ஜடம் அது.
அழு..... அழு..... அழு....என்று சொன்னோம்.
எப்பாலையிலும் அழுமவள்
இங்கேனோ அழவில்லை.
செப்படி சிறுக்கி ஏன் அழவில்லை நீ
'நான் பிஞ்சுகளுக்கு ஒப்பாரி வைப்பதில்லை
என்றாள்.
அன்று தான்....அன்று தான் ....அன்று தான்....
முதல் முதலில் நான் அழுதேன் .....'

4.

'உனக்கென்னடா தெரியும்...?
அவர் இருந்த காலத்தில -
நான் எப்பவும் அவருக்கு பக்கதிலதான்
பயப்பிடாதிங்கோ போங்கோ என்பேன்
குருத்தழிக்கும் கோழையர் முன்
கண்ணகி போல்
கொங்கை பித்தெறிந்தென்ன
கொண்டை மலர் சூடியென்ன
பேடியர் முன் வீரமுரைத்தெழுந்தென்ன
வீணே நான் மடிவேனோ
ஒன்றும் பேசாதே
என் மடியிடை அமுங்கியிரு
என் அகன்ற மார்பிடை தூங்கடா பேரா
முதுகெலும்புள்ள எதிரி வரட்டும்
அப்போ தட்டுவேன் உன் தோளை களமாட
அப்போது ஆடு சுழன்றாடு
உன்னில் என்னவரைக் காண்பேன்

பயப்பிடாதேங்கோ போங்கோ என்பேன்'



https://tamileelamarchive.com/

5.
'அந்தப் புளியமரம்.
நான் சாமத்தியப்பட்ட நாள் முதல்
என்னைப் பார்த்து பல்லிழித்தபடி.
போகவர ஏலாது.
எப்போதும் என்னோடு சீண்டும்
சிரிக்கும் சிலிர்த்தெழும்
ஏனென்று தெரியவில்லை
இன்று இலையுதிர்த்து...
பூவுதிர்த்து ...
பொலிவுதிர்த்து...
தன் அகன்ற புயமுதிர்த்து!
அட புளியே என்னாச்சு என்றேன்?
'அடி போடி நீ வேற
என்னோடு உறவாடிய புறாக்களை
கொன்றவரைக் கொல்ல
சட்டத்தில் இடம் தேடுகிறேன்' என்றது
தனது வெறும் மரக்கிளைக்கு
ஒரு வக்கில் கறுப்புச் சட்டை போர்த்தியபடி.

6.
'நெஞ்சு பிளந்தது

வானம் பிய்த்தொரு அம்பு

ஆதவனை பிளக்குமோ.....!

அடுக்கி....அடுக்கி...அடுக்கி....

என் செம்பருத்திப் பூக்களை

வரிசையாய் கிடத்தியிருந்தார்கள்.

7.
'புதூரில் காப்பு வாங்கியவள்
புளியம் பொக்கணையில் தோடு வாங்கியவள்
வற்றாப்பளையில் நீரினில் விளக்கேற்றியவள்
போறாளே.....போறாளே....
பத்தியெரியுதடி....
பாவி மகள் வயிறு
சிறுகொழுந்தே.....
தண்ணீரூற்றே புதிய குடியிருப்பே
ஏன் கொன்றார் உனை'?

8.
'மடியிருத்தி உனை
மார்பணைத்து முகம் திருத்திய நாள் முதலாய்
எவரும் துணிந்ததிலை இவ் இழிச்செயலை .

துணிந்தனரோ...
தொலைந்து போவான் துணிந்தனன்
துல்லியமாய்....மிகவும் துல்லியமாய்
என் மடிமீது துயில் கொண்ட
தூண்டா மணிவிளக்குகளை
துண்டாடத் துணிந்தனன் தொலைந்து போவான்.
பிரண்டு போனவன்
பிறகும் சொல்கிறான்
பிள்ளைகளைக் கொல்லவில்லை
புலிகளின் பாசறையைக் கொன்றேன் என.
பிறகென்ன....?
ஒருவரும் அழவில்லை

நவக்கிரகத்தில் தனித்துப் போய் விட்ட புளுட்டோ
கூட பார்த்திருக்க
இப்படுகொலை நடந்தது.

9.
'என் சின்னவள்
பாட்டி பாட்டி என்று அழைத்தாள்
அடி பேத்தி கைகளால் கணக்குச் சொல்லாதே
மனசால் சொல்லு என்றேன்
முதலில் 41 என்றாள்
பிறகு 52 என்றாள்
அடியே எத்தனை என்று அதட்டினேன்
61....61....61.....அழுதபடியே அவள் அகன்று
சென்றாள்

மனசால்....மனசால்...மனக்கணக்குப்
போடுகிறேன்.
61 மனங்களையும் நான் என்ன செய்ய
மீண்டும் பேத்தி வருகிறாள்
பாட்டி பாட்டி உண்மையான புள்ளி விபரம் 61 தானாம்

இரட்டைச் சடை.....
தலையில் சிவப்பு றிபன்
ஸ்கூல் யுனிபோம் என் பேத்தி போகையிலே
பிஞ்சுப் பூ போவது போல் தெரிந்தது.

10.
'என்னால் முடியாது போயிற்று
என்னால் ஏலாது போயிற்று
யாரை என்று நான் பார்க்க

வெடி மருந்தும் புகையும்
உடல்களும்....
துண்டாடப்பட்ட ஒரு கால் தடுக்கி
நான் கால் தடுக்கி விழுந்த போது

உடலின்....சடத்தின்....மாயை புரிந்தது
எல்லாமுமே அற படிச்சவள் எனக்கு
அத்துப்படியாய் புரிந்தது ஒன்று
உயிர்கள் பற்றியோ மனங்கள் பற்றியோ
இந்த உலகில் எவருக்குமே புரிவதில்லை.

எனது தள்ளாடும் உடலை
குண்டு போட்டு அழியடா அழியடா அழி'








https://tamileelamarchive.com/

5.

'அந்தப் புளியமரம்.
நான் சாமத்தியப்பட்ட நாள் முதல்
என்னைப் பார்த்து பல்லிழித்தபடி.
போகவர ஏலாது.
எப்போதும் என்னோடு சீண்டும்
சிரிக்கும் சிலிர்த்தெழும்
ஏனென்று தெரியவில்லை
இன்று இலையுதிர்த்து...
பூவுதிர்த்து ...
பொலிவுதிர்த்து...
தன் அகன்ற புயமுதிர்த்து!
அட புளியே என்னாச்சு என்றேன்?
'அடி போடி நீ வேற
என்னோடு உறவாடிய புறாக்களை
கொன்றவரைக் கொல்ல
சட்டத்தில் இடம் தேடுகிறேன்' என்றது
தனது வெறும் மரக்கிளைக்கு
ஒரு வக்கில் கறுப்புச் சட்டை போர்த்தியபடி.

6.

'நெஞ்சு பிளந்தது

வானம் பிய்த்தொரு அம்பு

ஆதவனை பிளக்குமோ.....!

அடுக்கி....அடுக்கி...அடுக்கி....

என் செம்பருத்திப் பூக்களை

வரிசையாய் கிடத்தியிருந்தார்கள்.

7.

'புதூரில் காப்பு வாங்கியவள்
புளியம் பொக்கணையில் தோடு வாங்கியவள்
வற்றாப்பளையில் நீரினில் விளக்கேற்றியவள்
போறாளே.....போறாளே....
பத்தியெரியுதடி....
பாவி மகள் வயிறு
சிறுகொழுந்தே.....
தண்ணீரூற்றே புதிய குடியிருப்பே
ஏன் கொன்றார் உனை'?

8.

'மடியிருத்தி உனை
மார்பணைத்து முகம் திருத்திய நாள் முதலாய்
எவரும் துணிந்ததிலை இவ் இழிச்செயலை .

துணிந்தனரோ...
தொலைந்து போவான் துணிந்தனன்
துல்லியமாய்....மிகவும் துல்லியமாய்
என் மடிமீது துயில் கொண்ட
தூண்டா மணிவிளக்குகளை
துண்டாடத் துணிந்தனன் தொலைந்து போவான்.
பிரண்டு போனவன்
பிறகும் சொல்கிறான்
பிள்ளைகளைக் கொல்லவில்லை
புலிகளின் பாசறையைக் கொன்றேன் என.
பிறகென்ன....?
ஒருவரும் அழவில்லை



நவக்கிரகத்தில் தனித்துப் போய் விட்ட புளூட்டோ
கூட பார்த்திருக்க
இப்படுகொலை நடந்தது.



9.

'என் சின்னவள்
பாட்டி பாட்டி என்று அழைத்தாள்
அடி பேத்தி கைகளால் கணக்குச் சொல்லாதே
மனசால் சொல்லு என்றேன்
முதலில் 41 என்றாள்
பிறகு 52 என்றாள்
அடியே எத்தனை என்று அதட்டினேன்
61....61....61.....அழுதபடியே அவள் அகன்று
சென்றாள்



மனசால்....மனசால்...மனக்கணக்குப்
போடுகிறேன்.
61 மனங்களையும் நான் என்ன செய்ய
மீண்டும் பேத்தி வருகிறாள்
பாட்டி பாட்டி உண்மையான புள்ளி விபரம் 61 தானாம்



இரட்டைச் சடை.....
தலையில் சிவப்பு றிபன்
ஸ்கூல் யுனிபோம் என் பேத்தி போகையிலே
பிஞ்சுப் பூ போவது போல் தெரிந்தது.

10.

'என்னால் முடியாது போயிற்று
என்னால் ஏலாது போயிற்று
யாரை என்று நான் பார்க்க



வெடி மருந்தும் புகையும்
உடல்களும்....
துண்டாடப்பட்ட ஒரு கால் தடுக்கி
நான் கால் தடுக்கி விழுந்த போது



உடலின்....சடத்தின்....மாயை புரிந்தது
எல்லாமுமே அற படிச்சவள் எனக்கு
அத்துப்படியாய் புரிந்தது ஒன்று
உயிர்கள் பற்றியோ மனங்கள் பற்றியோ
இந்த உலகில் எவருக்குமே புரிவதில்லை.

எனது தள்ளாடும் உடலை
குண்டு போட்டு அழியடா அழியடா அழி'

https://tamileelamarchive.com/

# நெருப்பள்ளிக் கொட்டிய கணங்களில்













வானெழுந்த
சிங்களவன் போர்க்கழுகு
தளிர்கள் தலைகளில்
நெருப்பள்ளிக் கொட்டியது

முல்லைப் பெருங்கடல்
மூசியே அழுதிருக்கும்
வன்னிக்காடு
வசந்தம் இழந்திருக்கும்
அடங்காப்பற்று நிலமது
ஆத்திரத்தில் கொதித்திருக்கும்

அடுத்தடுத்த அவலச் சாவுகளால்
கனத்திருந்த நெஞ்சங்களில்
முல்லைப் படுகொலை
மூட்டியது கனல்

பிள்ளைகள் முகம் தேடி
தேம்புகின்ற பெற்றவரை
யார்வந்து தேற்றிடுவார்....
இழப்பின் மனவலியை
தாங்கும் சக்தியை
யாரவர்க்கு அளிப்பார்....

துன்பச் சுமைகளை
இறக்கி வைக்க
முயலும் தருணங்களிலெல்லாம்
இடைவெளியேதுமின்றி....
ஈட்டிகளால் தைக்கப்படுகின்றன
தமிழர் இதயங்கள்

'சிறுவர் உரிமை'
கொள்கை முழக்கமிடுவோரே!
தமிழ்ப் பிள்ளைகள்
கொல்லப்படும் போதெல்லாம்
வாய்மூடி மௌனம் காப்பதுதானே
உங்கள் வாடிக்கை

புலிகள்
சிறுவரைப் படையில்
சேர்க்கின்றனரென்று
வாய்கிழிய வசைபாடுவோரே
சிறுவர்கள் படைகளால்
பலியிடப்படும் தருணங்களிலெல்லாம்
பார்த்திருப்பதோ வேடிக்கை...

வழிமுறை புதிது
கண்டுமே விரைவோம்
விழிகள் கசிந்து
கிடப்பதில் பயனில்லை
விழிகள் சிவந்துமே எழுவோம்!

உணர்வில் தீ எரித்து,
உண்மை கை எடுத்து
இனவாத முகத்திரை
கிழித்தெறிவோம்!
உண்மையை உலகிற்கு
உரைத்திட எழுவோம்!

● தமிழ்வாணன் (நோர்வே)



https://tamileelamarchive.com/















## கருகிய மலர்கள்

மெத்தென்ற ஈரப்பசும்புல் தரைக்குள்,
வளைந்து நெளிந்து
ஊர்ந்து நகர்ந்து
செல்லும் புழுக்களை
தத்தித்தத்தித் துள்ளித்துள்ளி
இரு கால்களினால்
குதித்துக் குதித்து
தம் அலகுகளால்
கொத்திக் கொத்தி
கொன்று தின்றுகொண்டிருந்தன
வைகறைப் பறவைகள்.

பரந்தகன்று ஓங்கி வளர்ந்த பெருமரங்களின்
குளிர் நிழலின் அரவணைப்பில்
செழித்து வளர்ந்த றோசாப் பூக்கள்
தமது புறங்குவிந்த
கண்கவர் மெல்லிதழ்களில்
பனித்திவலைகளை ஏந்தியபடி
தமக்கே சொந்தமான இன்மணத்தை
தென்றலிடம் தந்துவிட்டு
செஞ்சோலை முற்றத்தில்
தூய்மையின் வீறமைதியுடன் காத்திருந்தன
அடர் தழைகளினூடே வெளிப்பட்டுக்கொண்டிருக்கும்
சூரியச்சுடரொளிக்காக.

சடுதியாக வந்த பௌத்த தேசத்து வான்கலம்
பொழிந்த வான்வீழ் ஏரிகுண்டுகளால்
கண்ணிமைப் பொழுதுக்குள்
எரிந்து கருகின அம்மலர்கள் யாவும்
சீவகாருண்யச் சீவத்தையும் சேர்த்து.

நீண்ட தொலைதூரத்து ஒலிவ் மரக்கிளையில்
ஐயத்துடன் குந்தியிருந்த வெண்புறாவொன்று
அப்பாலுக்குமப்பால் பறந்து சென்றது
பதற்றத்துடன், அவசர அவசரமாய்.

## செஞ்சோலைச் செண்பகங்கள்

காலத்தின் சிற்றதிர்வுகள் கூடத் தீண்டத் தொடங்காத
நள்ளிரவு கழிந்த நேரத்தின்
அலைந்து திரியும் வெளிறிய முகில்களும்
மல்லாந்து மடங்கிக் கிடக்கும்
பசும் புல் தரைகளின் மீது
பரந்து படர்ந்திருக்கும் பனித்துளிகளும்
கோயில் மதில் எல்லைகளுக்குள்
தம் பகட்டுவண்ணத் தோகைகளின்
விரிப்புகளுக்காக எதிர்பாரத்திருக்கும் மயில்களும்
பாழ்படையால் அழிக்கப்பட்டவை போக
தோப்புத் துணையற்று ஒளிக்கீற்றுக்களுக்காக
காத்திருக்கும் தன்னந்தனியான நிழலற்ற
பனைகளும்,
அந்நியர் காமவெறியாட்டத்திற்குப் பலியான
பாலிகைகளுக்கு ஈம விறகாகாமல் ஒவ்வொரிரவும்
தப்பிப் பிழைத்துக் கொண்டிருக்கும் பூவரசுகளும்
இலேசாக விழித்தெழுந்து வந்து
இலைகளுடன் விளையாட முடியாது
இருளின் இறுக்கத்திற்குள் சிக்குண்டிருக்கும்
தென்றலும்
அந்தரத்தில் வெடித்துச் சிதறிய
அரக்கக்குண்டுகளால்
அங்கங்கள் சிதறி அவலமாய் மாண்ட
செஞ்சோலைச் செண்பகங்களின் தளிர் மூச்சுகளும்
களத்தின் இருள் முடங்கலைக் கலைக்கப்போகும்
கனம் மிக்க கதிரவனின் வரவுக்காக
காத்து நிற்கின்றன கனத்த கனவுகளுடன்.

● கந்தையா நவரேந்திரன்

https://tamileelamarchive.com/

# முல்லைத் துயர்தந்த தெளிவு!

ந. கிருஷ்ணசிங்கம்













முல்லைப் படுகொலையின்
எல்லையில்லாக்
கவலையின் கனதி
எங்களின் சொற் குழலை
மொழிய முடியாது
சுட்டெரித்த இரணம்
இன்னும் முற்றும் மாறாத
மனங்கிழிந்த நிலையில்
எழுதுகின்றேன்!

நிலமும் புலமும்
தங்களின் அங்கமாய் நேசித்த
செஞ்சோலைச்
சிட்டுக்களின் சிங்காரப்
பூங்கா சிதறியழியவே,

கிபிர்க் கழுகுகள்
விசக்குண்டுகளை வீசி
வீங்குயர் இடியெழுந்த
வினாடியை

இளமுகங்கள் எரிந்து கிழிந்து
இறந்து கிடந்த
ஈனக்காட்சியை
இதயத்தில் பதித்த
தொலைக்காட்சிப் படங்களை
கதறியே நோக்கிக் குமுறிய
நினைவுகளை,

ஆற்றாவெம் துயரத்து
அந்நாளை திரும்பவும்
ஏற்றி ஏற்றி எண்ணி மனம்
தேற்றம் பெறாது

திடுக்குறும் கோபத்தால்
தினமும் கடிந்தவராய்
கூற்றுவரால் குதறப்பட்ட
குருத்துக்களின்
படங்களோடு நாங்கள்
கூடி நாடுதோறும்
நீதிகேட்டு நிற்கின்றோம்.

உரம்பெற்ற தமிழீழத்தின்
நிர்வாகத் திறனுக்காய்
உருவாக்கப்பட்டு வந்த
முகாமைத்துவச் சிகரங்கள்

2.

சரமாகச் சிதறுண்டு
புலம் அதிர ஆங்கு
குருதிச்சேறாடி
உருவழிந்து விழிபிதுங்க
உயிர்பிரித்த
திண்வஞ்சகச் சிங்களத்தின்
திட்டமிட்ட செயலால்

எதிர்கால நாட்டின்
கனவுகளை
கூட்டமாய் இழந்துபோன
துயரத்தால்
விட்ட கண்ணீர் வடிய
முட்டிய நெஞ்சோடு
எழுகின்றோம்



https://tamileelamarchive.com/

எம் துயரைக் கேளாது
முகம் திரும்பிப் பாராது
இவ் அழிவைச் சொல்லாது
அந் நேரமதில்?
புல்லர் சிங்களரின் வில்லாளர் வீழ்ந்த
அல்லாத ஏதோ ஒன்றை
வெள்ளையரின் ஊடகங்கள்
மல்லிட்ட குரல்களோடு
கடுகடுத்த முகங்களோடு
கூறிக்கொண்டிருக்க,

செங்கண் சுடரவே எங்கும்
தாங்கிடா உரோசத் தணலோ?
பொங்கிய உறவுகள்
நாங்கள் வாழ்விடத்து
வீங்கிய ஊடகநிலைகள் முன்
இடம் தாங்கிடாத அளவு
ஏங்கிய வெஞ்சினத்து எய்த
வெங் குரற் தொனிகளோடு
வெளிப்பட்ட புரட்சியினராய்
வேகங்கொண்டு குவிந்ததினால்?,

கொடுந் தொழில் அரக்கத்தின்
நெடும் இன அழிப்பை
கரும் திரைபோட்டு மறைத்து
கயவரின் கைக்கூலிக் குரல்களாய்
முடுக்கிய பயங்கரவாத
அடித்தளப் பிரசாரத்தோடு
எங்களை நடத்தும்
வெள்ளை ஊடகர்கள்,
நமது எழுச்சியால்
ஒடுங்கிப் பணிந்து பேசி
நிலத்தில் நடந்த உண்மையை
விளம்ப முன்வந்தனர்!

பாருங்கள் எங்களின் தேசத்தில்
இடி பிழக்கும் இந்நாளை!
தோற்றாத சமாதானத் தொனிக்
கூர்ப்போடு நாட்களை விரட்டி
மாற்றான் எவனெவனோ வந்து

3.

அற்றதன் மேலாதிக்கத்தால்
அரசின் ஆற்றலைப் பெருக்கி
எம் உறவுகளை
இராணுவப் பொறியில் விழுத்தி
எறிகணைகளால் அழித்து
ஊரையிழந்து உயிர்களைத் துறந்து
அன்னவர் மீண்டும் அகதிகளாகி
தெருவலைய விதிசெய்தார்!

போர்பெரும் பேரழிப்புக்கு
ஏற்ற இரசாயன ஆயுதங்கள்
கூற்றணைய குண்டு கொட்டும்
ஊர்திகள் வான்கலங்கள்
எறிகணைகள் என்று,
அரக்கரின் முற்றத்தில்
அண்டை நாடுகள் ஊடாக
பற்றோடு கொண்டுவந்து இறக்கவே
பணிசெய்து விட்டு, இன்றோ?
அநியாயித்த செங்காரிகள்
சற்றும் கூசாது தொடர்ந்தும்
சமாதானம் பற்றியே
பேசுகின்றார்!

எழுந்து வான் முகடு இடித்துக்
குண்டுகள் விழுத்தி
கொழுந்துகள் எங்களின் எழில்மா
விழுமியங்கள் கிழிந்தழிய
அழுந்து துயர் அரக்கத்தைத்
தந்துவிட்டு,

அழுங்குப் பிடி அரக்கன்
கேகெலிய றம்புக்கல
புழுகிப் புனைந்த பொய்யை
வெள்ளைக் கழுகுகள் காவிவந்து
பிள்ளைகளைப் புலிகள் பிடித்து
பயிற்சிகொடுத்த முகாமே
அரச படையால்
அழிக்கப்பட்டதென்று
உரமான ஊழற் குரலோடு
நாளிதழ்களில் பேட்டி தந்தார்!

வேர்ளரிய வெளிப்பட்டு எங்கும்
ஊர் அதிரக்கூடி
புலத்தமிழர் நாம் குரல்வைத்ததால்
வெள்ளை ஊதுகுழல்கள்
முல்லை படுகொலையின்
மூலத்து உண்மையை
மெல்ல வாய்திறந்தன

நாளும் தாயகத்தில் வந்திறங்கும்
நீலக்கண் பேர்வழிகள்
எங்களின் நில விடியலுக்கு
நிமிர்வு தரப் போவதில்லை!

4.

மாவில் ஆற்றை முன்வைத்த
சிங்களத்துக் குளறுபடியால்
அன்னாரின் அடங்கா
வெங்கொடும் போர் வெறியால்
சமாதானம் சங்கரிக்கப்பட்டதால்
எங்களின் தாயகம்
செங்குருதிச் சேறாகிப்போகவும்,
சிறு பெண்குழந்தைகள்
நிணமாகிப் பிணமாகிக்கிடக்கவும்,

எரி தணல் காயங்களால்
கைகள் இழந்து கால்கள் அழிந்து








https://tamileelamarchive.com/









மேனி எரிந்து மிகவருந்திப்
பிள்ளைகள் கதறித் துடிக்கவும்,
அனலாகி மக்கள் அவலத்தால்
அறிவுசரிந்து குமுறவும்
சென்றங்கு பாராது நின்று

நோர்வேயின் சமாதானத் தூதுவர்
ஜோன் கண்ஸன்பவர்
தென்னிலங்கையில்
மகிந்தரோடு சேர்ந்து சென்று
ஊர்திரள முகம் களிக்க
கண்டிய நடனமாடக் கண்டு,
பேர்விளங்கு புதியதொரு
புத்தகோவிலைத் திறந்து வைத்து
மெத்தப் பெரும் தொகை
டாலர் பணத்தை நோர்வே
அரச வெகுமானமாய்
ஈரமில்லா இனவாதிகளுக்கு
ஈந்தே மகிழ்ந்துள்ளார்!

கற்றைப் பூஞ்சரம் இற்றழந்ததுபோல்
அற்ற எம் பள்ளிப்பெண்
குழந்தைகள்
கூற்றுவக் குண்டுகளால்
குதறுண்டு கிடக்க
மேற்குலக ஊடகங்கள்
தம் ஆற்றல் கரங்களால்,
குரல்களால் அவர்களைப்
போர்ப்பயிற்சி பெற்ற
சிறுவயதுப் புலிகள் என
தூர்த்தபொய் வார்த்தைகளால்
தீர்த்து முடிவுகட்ட

செட்டைமுளைத்த செந்நிறத்து
சமாதானத் தூதுவர் சிலரே
திட்டமிட்டுத் தம்வாயால்
இத்தகு ஈனத்தனத்தோடு இவர்
கட்டமிட்ட பேட்டிகளைக்
கக்கியவர் ஆவார்!

இவர்களை இனங்காணுங்கள்!

5.

இனியும் நேர்மையர்
இவரென எண்ணி நாம்
வன்னியுள் வரவைத்து
மாண்புடன் நடத்தி
தேன் இனிக்க நிமிரலாமோ?

இவைகண்டு இதயம் அதிர
புலநிலமெங்கும்
தெருவேறித் திரண்ட நம் தமிழர்

வாழ் நிலத்தவரை அணுகி நாடி
குருதி குமுறத் தாயகத்தின்
ஆழ் துயரின் உண்மையை
ஆழமாக உணர்த்தியதால்
தெளிவடைந்த வெளிநாட்டவர்கள்
விழி திறந்து எங்களின்
அவலத்தைக் காணப் பேச
விழைகின்றார்கள்!

சிங்கள அரசு
அங்குள தமிழினத்துச்
சிறுவர்களை
மக்களை மண்ணை
அழித்துச் சிதைக்கும்
மனித உரிமை மீறலை
இனியும் பொறோம் என்கின்றனர்
புனிதமிகு நிறுவனங்களின்
பணிப்பாளர்கள்!!

வஞ்சப் படையின்
கொடிய கோரமிகு
மக்கள் அழிப்பிடையிருந்து
பொடிபடப் பொருதி
எதிரியை ஒடுக்கி எம்மவர்
தேசமீட்புக்குத் தயாராகி
தியாகங்கள் புரிந்துவரும் வேளை,

வேடதாரிகளின் நாசப்போக்கை,
பேட்டிகளை, பிரச்சாரங்களை
உடைத்து உலகமுற்றத்தில்
உண்மையை நிலைநிறுத்தி
படையுடை எம் பெரும்
தலைவனின்
பராக்கிரமக் கரங்களை
மேலும் பலப்படுத்தும்
அகலப் பரப்புரைகள்
அனைத்து நாடுகளிலும்
வலுக்கொண்டு வருகின்றன!

https://tamileelamarchive.com/

# மண்ணில் சரிந்த மலர்கள்

மாமுனை மனோ(நோர்வே)

உங்களை
தேடி வந்தோம்
ஆசையாய் பேசி
மகிழ்தோம்
மெல்லிய சிரிப்பொலியில்
மேனி சிலிர்த்து
பேச்சில்
துக்கம் மறந்தோம்
கல்லாய்போன
கபடக்காரரின்
கொலைவெறியில்
சிக்குண்டு போனீரே..

நெல்லுமணிகளாய்
குலுங்கி சிரிக்கையில்
வல்லூறுகள் வந்து
வதைத்தனரோ
சிதைத்தனரோ...

ஐயகோ

நெஞ்சு வெடிக்கிறது
நினைவுகள் எரிக்கிறது
பஞ்சாய் பறந்து திரியும்
பள்ளி வயதில்
வஞ்சகப் பேய்கள்
விமான எச்சங்கொண்டு
கொஞ்சும் முகங்களின்
குருதி குடித்தனரோ..

பிஞ்சு வயதில்
அஞ்சா தலைவனின்
அணைப்பில்
உள்ளக்களிப்போடு
உலாவந்த
நிலவுகளே
துள்ளி திரியும் உங்களை
துட்டரின் கந்தகக்குண்டுகள்
துண்டங்களாக்கியதோ...

ஐயோவென அலறும் குரல்
மெய்சிலிர்க்க
உயிரைப் பிழிகிறதே

அட
பாவிப்பயல்களே
பாலகரை பழிதீர்ப்பதா
யுத்த வல்லமை
சமாதானமென்று
சன்னதமாடி
யுத்த விமானமேறி

எத்தனை தடவை
எம்மினத்தை கொன்றீர்

இப்போது
வள்ளி புனத்தில்
வல்லமையின்
வளர்ப்பில்
துள்ளி திரிந்த சிட்டுக்கள்
விழித்தெழ முன்னரே
பழிதீர்த்துக் கொண்டீரே...

ஒன்றுமட்டும் புரிகிறது
உறுதியாய் தெரிகிறது
விழித்திரையில்
விழுங்கிக்கொள்ளும்
படைத்தலைவனின்
நெருப்பில் நீறாகப்போகின்றீர்

எங்கள் குழந்தைகளை
அழித்துவிட்டு
கழிப்பில் கனவு காணாதீர்.












https://tamileelamarchive.com/



கோவை



அம்பத்தூர்



சென்னை



சென்னை

வள்ளிபுனம்
செஞ்சோலை வளாகத்தில்
சிறீலங்காப்படையின்
விமானக் குண்டுவீச்சில்
பாடசாலை மாணவிகள்
படுகொலை செய்யப்பட்டதைக்
கண்டித்து தமிழ்நாட்டின்
பல பகுதிகளிலும்
நடைபெற்ற எழுச்சிப்
போராட்ட நிகழ்வுகளின்
ஒளிப்படங்கள் சில



சென்னை

https://tamileelamarchive.com/




சேலம்




சேலம்



சென்னை



தேனீர்
கோப்பையின் ஓரங்களும்
வேப்பங்காய்களின் ருசிகளை
தருகிறது

சோகங்கள்
வழிவதாக
புலம்புகிறது
காற்று...

கரும்பலகையிலிருந்து
அழிக்கப்பட்ட
வெண்மை எழுத்துக்கள்
சட்டங்களுக்குள்
தொங்கித் தொலைகிறது

சிரிப்பொலிகளை
சேமித்த
வகுப்பறையின்
இருக்கைகளில் நிகழும்
சோகங்களின் குடித்தனம்.

வெள்ளைப் புறாக்களை
வெட்டிய வாட்களின்
பளபளப்புக்களில்
மறைகிறது நியாயம்

எல்லாமே
செய்தித்தாள்களைப் போல்
ஞாபகங்களிலிருந்து
கிழிந்து போக
கருச் சுமந்தவரின்
கண்ணீர்ச் சொட்டுக்களின்
பாரம்.

அ.பிரியன்

https://tamileelamarchive.com/



மலேசியா



இத்தாலி



பெல்ஜியம்



ஜேர்மனி




கனடா



பிரான்ஸ்



டென்மார்க்




பின்லாந்து



வள்ளிபுனம் விமானக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவிகள் கொல்லப்பட்டதனைக் கண்

https://tamileelamarchive.com/




பிரித்தானியா



அவுஸ்திரேலியா



நெதர்லாந்து



அமெரிக்கா



நோர்வே



சுவிற்சலாந்து



நியூசிலாந்து



சுவீடன்

புலம்பெயர் நாடுகளில் நடாத்தப்பட்ட கவனயீர்ப்புப் போராட்ட நிகழ்வுகளின் ஒளிப்படத்தொகுப்பு

https://tamileelamarchive.com/

> "உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கைகளில் தங்கியிருக்கவில்லை. எமது வெற்றி யானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட் டிலேயே தங்கியிருக்கின்றது. நீதியும் நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது. நாம் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் போராடும் திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும்."
>
> - தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -

தமிழீழ மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்கும் போக்கு மிக அண்மையில் தோன்றியுள்ளது. சமாதானச் சுகவாழ்வை விரும்பும் அமைதிப் பிரியர்களாக மக்களையும்,போரைக் குறியாகக் கொண்டவர்களாகவும்சமரசத் தீர்வுக்கு ஒத்துவராதவர்களாகவும் புலிகளையும் சித்தரிக்கும் முனைப்புக் காணப்படுகின்றது. இவ்வாறான கருத்துநிலை ஒரு வஞ்சக உள்நோக்கத்தினைக் கொண்டது. புலிகளைப் புறந்தள்ளிவிட்டால் தாம் நினைத்த காரியத்தினைச் சாதித்துவிடலாம் என்று சிங்கள அரசும் சர்வதேச சமூகமும் நினைக்கின்றன. ஆனால் அவர்களுடைய திட்டம் நிறைவேறப்போவதில்லை.


ஒரு தனிமனிதனும் சரி, ஒரு நாடும் சரி தமது விதியைத் தம் செயல்களாலேயே தீர்மானிக்கிறார்கள். அவர்களது கடந்தகாலச் செய்கைகள் நிகழ்காலத்தினைத் தீர்மானிக்கின்றன. நிகழ்காலத்தியச் செய்கைகள் வருங்காலத்தினைத் தீர்மானிக்கின்றன. செயலின்விளையும் அதற்கான காரணமும் மேற்கூறிய கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. முந்தைய செயல்கள் நிகழ்காலத்தினைத் தீர்மானிக்கின்றன. சிறீலங்காவின் முன்வினை மிகவும் சக்தி வாய்ந்தது. தமிழர்கள் ஆரம்பத்தில் மிகவும் சாதுவானவர்கள் என்பது உண்மையே. அவர்களை ஆயுதம் தூக்கிப் போராட வைத்த காரணம் என்ன? சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அமைதி வழியில் உரிமைகளை வென்றெடுங்கள் என்று உபதேசம் செய்யும் சர்வதேசம் எமது பிரச்சினையை வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கத் தவறிவிட்டது.

எண்ணிக்கை அடிப்படையில் தம்மைப் பெரும்பான்மையினர் எனக் கருதும் சிங்களவர்கள் எண்ணிக்கையில் குறைந்த தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விளைவதைத் தமிழ்மக்கள் ஏற்கத் தயாரில்லை. சிங்களத் தலைமையிலான இறைமை நாட்டின் மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்து பல தசாப்தங்களாகின்றன. அரசிற்குச் சொந்தமான ஆயுதப்படைகள் தமிழர்களைக் கொல்

# மக்கள் படையும்

கலாநிதி - க.சோமாஸ்கந்தன்

# விடுதலைப் போரும்



https://tamileelamarchive.com/

வதற்குபயன்படுத்தப்படுகின்றன. ஆயுதப் படைகள் செய்யும் மனித உரிமை மீறல் களையும், பிற அட்டூழியங்களையும் அரச இயந்திரம் மூடி மறைக்கின்றது. சிங்கள நீதி மன்றங்களில் நீதி கிடைப்பதில்லை. கொழும்பு ஊடகங்கள் தமிழருக்கு எதிரான கருத்துப் போரைத் தொடர்ச்சியாக நடத்து கின்றன. ஒற்றையாட்சியைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. அதிலி ருந்து விடுபடுவதற்காகவே எமது விடு தலைப்போர் நடத்தப்படுகின்றது.

ஈழத்தமிழர்களின் பிரிவினைஉணர்வு செயற்கையானதல்ல. நாம் தனியரசாக வர லாறு அறியப்பட்ட காலம்தொட்டு இருந்துள் ளோம். நிர்வாக அனுகூலத்திற்காக பிரிட்டி சார் எம்மை 1833இல் நில அடையாளம் இழக்கச் செய்துள்ளனர். 1795இற்கும் 1833 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 'கலக்ரறேற்' (COLLECTORATE) என்றஆட்சிமுறை நில வியது. கோல்புறுக் - கமரன் (COLEBROO-KE - CAMERON) சீர்திருத்தங்களுக்குப் பின் இந்த ஆட்சிமுறை நிறுத்தப்பட்டு இலங் கைத்தீவு 5 மாகாணங்களாக வகுக்கப்பட் டது. புதிய யாழ்ப்பாண மாகாணத்தில், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு உள்ளிட்ட வன்னி மாவட்டங்களும் கண்டிப் பகுதியின் நுவரகலாவியா மாவட்டமும் இணைக்கப்பட்டன. யாழ்.மாவட்டத்திற்குரிய செயலகங்கள் (கச்சேரிகள்) யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, அனுராதபுரம் ஆகிய நகரங்களில் திறக்கப்பட்டன. (NORTHERN CEY - LON (SRILANKA) IN THE 19th CENTURY BY PROF BERTRAM BASTIAM -PILLAI GOD AGE INTERNANIONAL PUBLISHERS, 2006)

அடிமைப்பட்ட இனத்தின் மீட்பர்களாக விடுதலை இயக்கங்கள் தோன்றுகின்றன. அவை விடுதலை வேண்டி நிற்கும் மக்கள் மத்தியிலிருந்தே தோற்றம் பெறுகின்றன. சுருங்கக்கூறின் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் மத்தியிலி ருந்து விடுதலை இயக்கங்கள் பிறப்பெடுக் கின்றன. வெறுமையில் இருந்து விடுதலை அமைப்புக்கள் தோன்றுவதில்லை. அடக்கு முறைக்கு எதிராகப் போரிடும் அமைப்பை மக்களே உருவாக்குகின்றார்கள். விடுதலை அமைப்பும் மக்களும் வேறானவை அல்ல. இருகூறும் ஒன்றுதான். இதுதான் வரலாற்று நியதி. சிறிலங்காவிற்கான நெதர்லாந்துத் தூதுவர் றேநாட் வாண்டிக் (REYNOUT VANDIJK) இவ்வருட யூன் மாத முற்பகுதி யில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையி லான நெருக்கத்தினை பின்வருமாறு விளக் கினார்.

ஒரு காரணமும் இல்லாமல் இத்தீவில் தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாக வில்லை. அவர்கள் இவ்வளவு பலம் வாய்ந் தவர்களாக இருப்பதற்கு வரலாற்று விளக் கங்கள் இருக்கின்றன. தமிழ்மக்களின் பேரா தரவின்றி புலிகள் இந்த உயர்நிலைக்கு வளர்ச்சிகண்டிருக்க முடியாது. அவர்களை ஒரு வலுவான சக்தியென்று ஏற்றுக்கொண்டு அவர்களோடு பேசவேண்டும். தவறினால் அது

அறியாமையாகவோ, அரசியல் சிறுபிள் ளைத் தனமாகவோ இருக்கும். அவ்வள வோடு அவர்நிற்கவில்லை. 'தமிழ்மக்களு டையகோரிக்கைகள் இனங்காணப்பட்டு நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது சட்டத் தின் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடையாது என்று அவர்கள் உணர நேர்ந்தால் மீண்டும் புலிகளின் பாதுகாப்பினைத் தேடுவார்கள்'. இந்த இடத்தில் அவர் ஒருவிடயத்தை மிக அழுத்தமும் திருத்தமுமாகக் கூறினார். "மிகவும் இக்கட்டான நேரங்களில் அவர்கள் புலிகளின் பாதுகாப்பை நாடுவார்கள்".

ஒரு நாடோ அதன் ஒருபகுதியோ பிற நாடொன்றால் அல்லது அதேநாட்டின் இன் னொரு பகுதியால் ஆக்கிரமிக்கப்படும் போது பாதிக்கப்பட்ட மக்கள் தமதுஎதிர்ப் பைக் காட்டுவார்கள். இந்தஎதிர்ப்பு றெசிஸ் ரன்ஸ் (RESISTANCE) என்று அழைக் கப்படும். மக்களின் இன்னொரு பகுதியினர் ஆக்கிரமிப்பாளர்களுடன் இணைந்து செயற் படுவார்கள். இவர்களை 'கொலாபெறேற் ராஸ்'(COLLABORTORS) என்று அழைப் பார்கள். எதிரிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைவரும் இவ்வாறு அழைக்கப்படுகின் றார்கள். இருபகுதியினரும் அதாவது எதிர்ப் பவர்களும் ஒத்துழைப்பு வழங்குபவர் களும் மக்கள் மத்தியிலிருந்து தோற்றம் பெறு கின்றனர். எதிர்ப்பு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் நடைபெறும். ஒரு கட்டம் வரும்போது மறைமுக எதிர்ப்பு வெளிப்படை யானதாக மாறும். அனைத்து மக்களும் கிளர்ந்தெழும்போது எதிர்ப்பு முழுவடிவம் பெறும்.

பிரான்சு 1940 - 1944 காலப்பகுதியில் ஜேர்மன் நாசிப்படைகளால் ஆக்கிரமிக்கப் பட்டது. அப்போது ஒருபுறம் எதிர்ப்பாளர் களும் மறுபுறம் ஒத்துழைப்பாளர்களும் அணிதிரண்டனர். எதிர்ப்பியக்கத் தலைவர் டி கோல் (DE GAULLE) தனது தலை மைப்பீடத்தை இங்கிலாந்துத் தலைநகர் இலண்டனில் ஏற்படுத்தினார். அங்கிருந்து அவர் எதிர்ப்பியக்கத்தினை வழிநடத்தினார். அதே சமயத்தில் முதலாம் உலகப்போரில் பிரான்சின் அதி உயர் தளபதிகளில் ஒருவ ராக இருந்த மார்சல்பெத்தேயின் (MARSHALL PETAIN) ஜேர்மன் படைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். அதாவது முதலாம் உலகப்போரில் ஜேர்மன் படைகளை எதிர்த் துப் போராடினர், இரண்டாம் உலகப்போரில் அதே படைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி னார். தனது ஒத்துழைப்பு அரசை விச்சி (VICHY) என்ற பிரென்சு நகரில் நிறுவினார். அவருடைய ஒத்துழைப்பு அரசு 'விச்சியரசு' (VICHY GOVERNMENT) என்று அழைக் கப்பட்டது. இன்று எதிரிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அரசைக் குறிப்பிடும் கலைச்

**"மக்கள் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மையிது" என்று எமது தேசியத் தலைவர் அவர்கள் கூறியுள்ளார். விடுதலை உணர்வானது மனிதத்தின் ஆழமான அபிலாசையிலான படியால் அதை அழிக்கும் உபாயம் இன்று கண்டு பிடிக்கப்படவில்லை. விடுதலைப்போர் காரணமாக நாம் மீண்டும் வீரம் செறிந்த இனமாக புத்துயிர் பெற்றுள்ளோம்.**



சொல்லாக அது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விச்சி நகரில் பல வசதியான விடுதிகள் இருப்பதால் அந்த நகரம் அரசபீடமாகத் தெரிவு செய்யப்பட்டது. அல்ஜீரியா கொட்டேல் (ALGERIA HOTEL) என்ற உல்லாச விடுதி அரசின் முக்கிய கருமபீடமாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் ஒத்துழைப்பு வழங்கிய அமைப்பினர் யாழ். நகரின் கொட்டேல் அசோகா (HOTEL ASOKA) என்ற விடுதியைத் தமது அலுவலகமாகத் தெரிவுசெய்தனர். அதேபோல் இன்று சிங்கள இராணுவத்திற்கும் சிங்கள அரசிற்கும் ஒத்துழைப்பு வழங்கும் அமைப்பினர் சிறிதர் திரையரங்கத்தை (SRIDHAR THEATRE) தமது முக்கிய அலுவலகமாகவும் பாதுகாப்பு அரணாகவும் அமைத்துள்ளனர். பழையது புதிய வடிவத்தில் வரும்போது வரலாறு என்கின்றோம். படிப்படியாக எதிர்ப்பியக்கத்தினர் பிரான்சில் தாக்குதலைத்தொடங்கினர். ஜேர்மன் படைகளின் கொடுஞ் செயல்களுக்கு அஞ்சிய பிரெஞ்சு மக்கள் முதலில் அப்பாவிகள் போல் இருந்தனர். பின்புஎதிர்ப்பணியில் இருப்பவர்கள் 'எம்மவர்' என்ற உணர்வு ஏற்பட்டது. அதன் பின் உணவு வழங்குதல், மறைவிடம் கொடுத்தல், தாக்குதலுக்கு உதவுதல் போன்ற நடவடிக்கைகள் தொடங்கின. யூன் 06.1944ஆம் நாள் நேசநாட்டுப் படைகள் வட பிரான்சில் நுழைந்தன. எதிர்ப்பணியினரும் மக்களும் நேசநாட்டுப்படைகளோடு இணைந்தன. விச்சி அரசின்காலம் அத்தோடு முடிவுற்றது. தேசத்துரோகி என்று தீர்ப்பு வழங்கப்பட்ட மார்சல் பேத்தேயினின் தூக்குத் தண்டனை நாட்டுத் தலைவர் டி கோலின் தலையீட்டில் ஆயுட் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அவர் சிறையில் இறந்தார் (1951).

விடுதலைக்காக மக்கள் கொடுக்கும் அதியுயர் விலையான உயிரிழப்பு எதிரிப் படைகள் வழங்கும் கூட்டுத்தண்டனைமூலம் ஏற்படுகின்றது. எதிரிப்படை அதிகாரியோ பதவி குறைந்த இன்னொருவனோ கொல்லப்படும் போது கொன்றவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்களை கசட்டு மேனிக்கு கொன்றழித்தல் கூட்டுத் தண்டனை (COLLECTIVE PUNISHMENT) எனப்படுகின்றது. இது மிகப் பிரபலமான இராணுவ உபாயம், வஞ்சம் தீர்ப்பதோடு மிரட்டிப் பணியவைக்கும் உபாயமாகவும் இவ்வகைத் தண்டனை பயன்படுகின்றது. போரியல் வரலாற்றில் மிகப் பழைமை வாய்ந்த நடைமுறையென்று இது வர்ணிக்கப்படுகின்றது. பிரான்சில் ஜேர்மன் நாசி ஆட்சி நிலவிய போது தூள் (TULLE) நகரில் ஜேர்மன் இராணுவ அதிகாரி எதிர்பியக்கத்தினரால் கொல்லப்பட்டார். இதற்குப் பதிலடியாக யூன் 09.1944ஆம் நாள் வயதிளமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 99 தூள் நகர இளைஞர் களை ஒரு மரத்தில் தொங்கவிட்டு படையினர்கொன்றனர். இக்காட்சியைப் பார்க்கும்படிதுவக்கு முனையில் மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் தொங்கிய மரத்தின் கீழ் அமர்ந்து ஜேர்மன் படையினர் விருந்துணவு உட்கொண்டனர். மக்கள் நெருக்கமாக வாழும் கிராமங்கள் மீதுநடக்கும் குண்டு வீச்சு கண்மூடித்தனமான ஆட்டிலறித் தாக்குதல்கள் என்பன கூட்டுத் தண்டனையின் பிற வடிவங்களாகும். மூதூர்,அல்லைப்பிட்டி, வங்காலை, பேசாலை போன்ற பகுதிகளில் நடந்த தமிழினப் படுகொலைகள் இவ்வகைத் தண்டனையில் அடங்கும். அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாட்டுப் படையினர் சிங்கள இராணுவத்தினருக்கு வழங்கிய கிளர்ச்சியை அடக்கும் பயிற்சியில் (ANTI - INSURGENCY TRAINING) பாலியல் வல்லுறவும் அதற்குப்பின் படுகொலையும் முதலிடம் பெறுகின்றன. இது மீன் குஞ்சிற்கு நீச்சற்பயிற்சி போன்றது.

"மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மையிது" என்று எமது தேசியத் தலைவர் அவர்கள் கூறியுள்ளார். விடுதலை உணர்வானது மனிதத்தின் ஆழமான அபிலாசையிலான படியால் அதை அழிக்கும் உபாயம் இன்றுகண்டு பிடிக்கப்படவில்லை. விடுதலைப்போர் காரணமாக நாம் மீண்டும் வீரம் செறிந்த இனமாக புத்துயிர் பெற்றுள்ளோம். நாம் தூக்கும் ஆயுதத்தின் தன்மையையும் நடத்தும் போர்முறையையும் எதிரி தீர்மானிக்கிறான் என்று சொல்வார்கள். எதிரிக்கு அடி கொடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இன்று தமிழீழ மக்கள் பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்புப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்தின் கிறிஸ்தவ மதகுருமார்கள் கூடப் போரிடத் தயாராக ஆயுதப்பயிற்சி எடுத்தனர். மக்கள் சக்தியின் வலுவை உணர்த்தும் விதத்தில் அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சில் பின் வருமாறு கூறினார்: "நான் சிங்கமல்ல, சிங்கம் போன்று கர்ச்சிக்க வைக்கப்பட்டுள்ளேன்".

தெற்கு ஆசியாவின் இரு முக்கியவிடுதலைப் போர்கள் எமது கவனத்தினை ஈர்க்கின்றன. முதலாவது இந்திய விடுதலைப்போர். இதில் இந்திய மக்கள் அனைவரும் முழு அளவு ஈடுபாடு காட்டினர். சாத்வீக முறைப்படி நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டாலும் வன்முறைச் சம்பவங்கள் நிறைய நடந்தன. பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு எதிரான வன்முறைகளை பொதுமக்கள், குறிப்பாக பகவத்சிங் போன்ற துடிப்பான இளைஞர்கள் நடத்தினர். இந்திய தேசிய காங்கிரஸ் சுதந்திர இயக்கத்தை வழிநடத்தியது. காலத்திற்குக்காலம் காங்கிரஸ் தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டாலும் ஒரு பதவியும் காங்கிரசில் வகிக்காத மகாத்மா காந்தியே அதன் உண்மையான தலைவராக இருந்தார். காங்கிரஸ் கொள்கைகளை அவர் உருவாக்கினார், நடைமுறைப்படுத்தினார். பிரிட்டிஷ் அரசிற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்ளும் நிறைய இருந்தனர். நிராத்சி சவுத்திரி என்ற கல்விமான் பிரிட்டிஷ் ஆட்சி முடிவிற்கு வந்து அவர்கள் வெளியேறியபோது தானும் கூடச்சென்று இங்கிலாந்தில் குடியேறினார். சுதந்திரம் ஒரு மாயை, அதில் நேரு குடும்ப ஆட்சிக்கு வழிவிட்டுள்ளது என்று தனது நூலில் சவுத்திரி தெரிவிக்கின்றார். (THREE HORSEMEN OF THE NEW APOCALYPSE NIRAD C.CHAUDHURI. OXFORD UNIVERITY PRESS) அதே சமயத்தில் காங்கிரஸ் கட்சியும் தனது ஏகபோகத்தை வெளிக்காட்டத் தவறவில்லை. நேருவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய சர்வபள்ளி கோபால் "தானே நாடு என்று நினைத்து செயற்படும் காங்கிரஸ்" என்றுள்ளார். (JAWAHARLAL NEHRU: S.GOPAL PAGE-60)

வியட்நாம் போர் முற்றிலும் ஆயுதப் போராக இடம்பெற்றது. 3 ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு எதிராக வியட்நாம் மக்கள் போரிட நேர்ந்தது. நெடுங்காலம் பிரெஞ்சுக் காலனியாக இருந்த வியட்நாம் இரண்டாம் உலகப்போர் காலத்தில் யப்பான் வசமானது. 1833ஆம் ஆண்டு தொடக்கம் வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகியவற்றை கூட்டாக பிரெஞ்சு இந்தோ சீனா (FRENCH INDO CHINA) என்ற பெயரில் ஆட்சி செய்த பிரான்சு 1940ல் யப்பான் படைகளால் வெளியேற்றப்பட்டது. யப்பானுக்கு எதிரான தேசிய போரை வியட்மின் (viet minh) இயக்கத் தலைவரான கோசிம்மின் (Hochiminh) நடத்தினார். 1945 யப்பானியப்படைகள் வெளியேற்றப்பட்ட பின் பிரெஞ்சுக்காரார்கள் மீண்டும் வந்துவிட்டார்கள். பிரெஞ்சுப்படைகளுக்கு எதிரான போர் 1954வரைநடைபெற்றது. பிரெஞ்சுப் படைகளின் கோட்டை தியன் பியன் பூ 1954 வியட்நாம் படைகளிடம் வீழ்ச்சிகண்டபின் பிரெஞ்சு ஆட்சி முடிவிற்கு வந்தது. ஆனால் அவர்களுடைய இடத்திற்கு போரை முன்னெடுக்கும் நோக்கில் அமெரிக்கப் படைகள் முன்வந்தன. வியட்நாமியர்கள் இப்போது அமெரிக்கப்படைகளோடு மோத வேண்டிய நிலை தோன்றியது.

அரை மில்லியனுக்கு மேலான அமெரிக்கப்படையினர் வியட்நாமில் குவிக்கப்பட்ட



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

னர். இதில் 58000 பேர் கொல்லப்பட்டனர். 1.5 இலட்சம் பேர் அங்கவீனராயினர். 2000பேர் காணாமல் போயினர். அமெரிக்கர்கள் நடத்திய தாக்குதலில் 20 இலட்சம் வியட்நாமியப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 12.5 இலட்சம் வியட்நாம் போராளிகளும் உயிரிழந்தனர். உலகவரைபடத்திலிருந்து வியட்நாமை அகற்றும் வலு அமெரிக்காவிடம் உண்டு என்று அப்போது வீரம் பேசிய பாதுகாப்புச் செயலாளர் றொபாட் மெக்நாமெரா பிற்காலத்தில் தனது நூல் மூலம் வியட்நாமிய மக்களிடம் மன்னிப்புக் கோரினார். (In retrospect. the tragedy and lessons of vietnam: Robert mcnamara) 1975இல் அமெரிக்கா படுதோல்வியுடன்வியட்நாமில் இருந்து வெளியேறியது. அத்தோடு பொதுமக்களின் துன்பம் முடிவிற்குவரவில்லை. விமானம் மூலம் அமெரிக்கர்கள் கொட்டிய நச்சுப்பொருட்களின் தாக்கத்தை அவர்கள் தலைமுறை தலைமுறையாக அனுபவிக்கிறார்கள்.

வியட்நாம் மக்களின் அவலத்தையும் சகிப்புத் தன்மையையும் விளக்கும் வரலாற்றுக் குறிப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. அமெரிக்கர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தென்வியட்நாமுக்கும் வியட்நாம் படைகளின் கட்டுப்பாட்டிலிருந்த வட வியட்நாமிற்கும் இடையில் 05 கிலோ மீற்றர் அகலமான சூனியப்பிரதேசம் இருந்தது. அதன் நடுவே வியன்காய் நதியோடியது. சூனியப் பிரதேசத்தின் வடபால் வாழ்ந்த மக்கள் தமது வாழ்விடங்களை நிலத்தடியில் அமைத்துக்கொண்டனர். அவை பதுங்கு குழிகள் அல்ல. வாழ்விடங்கள். பல வருடங்களாக மக்கள் நிலத்தடியில் வாழ்ந்தனர். நிலத்தடியில் இருப்பிடங்கள், சுரங்கப்பாதைகள் என்பனவவோடு மருத்துவ வசதிகளும் இருந்தன. மகப்பேற்று அறை சராசரி சவப்பெட்டியின் பருமனில் இருந்தது. இப்பகுதி மீது அமெரிக்க விமானங்கள் இடைவிடாது குண்டுமழை பொழிந்தன. குண்டுவீச்சு ஓயும்போது மக்கள்வெளியே வந்து நாளாந்த கடமைகளைச் செய்வார்கள். மீண்டும் நிலத்தடி இருப்பிடங்களுக்குச் செல்வார்கள்.

தாங் துயி திராம என்ற பெயர் கொண்ட வியட்நாமியப் பெண் மருத்துவப்போராளியின் நாட்குறிப்பு நூல் வடிவம் பெற்றுள்ளது. இவை வியட்நாமிய மற்றும் ஆங்கில மொழிவடிவங்களில் 2005ஆம் ஆண்டில் வெளிவந்தன. 1967 - 1970 வரை இவர் களமுனையில் செயற்பட்டார். தனது 27ஆம் வயதில் அமெரிக்கர்களின் தாக்குதல்களின் போது யூன் 1970 இல் சாவடைந்தார். இவருடைய நாட்குறிப்புப் புத்தகங்களை ஒரு அமெரிக்கப் படையாள் கைப்பற்றிஅமெரிக்கா கொண்டுசென்றான். இறந்தவர்குடும்பத்தினரின் அனுமதியோடு இப்போது எப்.பி.ஐ. அதிகாரியாகப் பணியாற்றும் அந்த அமெரிக்கர் நாட்குறிப்பு நூலை வெளியிட்டுள்ளார். (The diaryof dang thvy tram) என்பது இந்நூலின் பெயராகும்.

அமெரிக்கா படுதோல்வியைச்சந்தித்த வியட்நாமில் வெற்றிக்கான வெறியோடு தாக்குதல் நடத்தப்பட்டது. 02ஆம் உலகப் போரில் போட்ட குண்டுகளின் மொத்த எடையிலும் கூடிய எடையிலான குண்டுகள் வியட்நாம் மீது போடப்பட்டன. மரபுசாராப் போர் முறைகளையும் அமெரிக்கர்கள் வியட்நாமில் நடைமுறைப்படுத்தினர். கிறின் பெரே (Greenberet) படையணியை 1962ஆம் ஆண்டு சனாதிபதி கெனடி உருவாக்கினார். ஆழஊடுருவி எதிரி நிலைகள், பொதுமக்கள் வாழ்விடங்கள் மீது தாக்குதல் நடாத்தும் உத்தியை அமெரிக்கர்கள் வியட்நாம் போரில் அறிமுகம் செய்தார்கள். இப்போது அம்முறையை அவர்கள் LRRP அல்லது Long Range Reconnaissance Patrol என்று சங்கேத மொழியில் லேர்ப்ஸ் (Lurps) என்றும் அழைத்தார்கள். வியட்நாமில் அது படுதோல்வி அடைந்தது. பல பொதுமக்களைக்கொன்றதுதான் மிச்சம்.



லேர்ப்ஸ் போன்ற முறையை கிறின் பேரே படையணியினர் சிங்கள இராணுவத்தினருக்குக் கற்றுக் கொடுத்தனர். ஆரம்பத்தில் அது நல்ல வெற்றியை அளித்தது. விடுதலைப் புலிகள் ஒரு பெறுமதி வாய்ந்த கேணல் தரஅதிகாரியையும் பல லெப். கேணல் தர உறுப்பினர்களையும் தொடர்ச்சியாக இழந்தனர். இந்த ஊடுருவல்கள் தமிழீழத்தின் பொதுமக்கள் மத்தியில் பெரும் விழிப்பை ஏற்படுத்தியது. எல்லைப்பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்தியது. தந்தவனுக்கே திருப்பிக்கொடு என்னும் கோட்பாட்டிற்கு அமைவாக ஊடுருவல்களுக்குப் பொறுப்பானவர்களை புலிகள் காவுகொள்ளத் தொடங்கினர். ஊடுருவ முயன்றபோது பொதுமக்களால் சுட்டுக் கொல்லப்பட்ட ராஜபக்ச என்ற படையாள் புலிகளின் சீருடையை அணிந்திருந்தான். போரியல் சம்பந்தமான சர்வதேச விதிமுறைகளுக்கு இது முரணானது. சர்வதேச சமூகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இவ் விதிமுறைகள் ஜெனிவா கொன்வென்சன் என்று குறிப்பிடப்படுகின்றன.

பெரும் எண்ணிக்கையில் கொன்றொழிக்கும் போது எஞ்சியோர் விடுதலைப் புலிகளை வெறுத்தொதுக்குவார்கள் என்ற பாடத்தை இஸ்ரேலின் மொசாட் உளவமைப்பு சிங்கள இராணுவத்திற்குச் சொல்லிக்கொடுத்தது. இதன் அடிப்படையில் முப்படையினரும் கூட்டாக தமிழனை வகைதொகையாக படுகொலை செய்தனர். எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களிற்கும் இடையிலான பாசப்பிணைப்பை ஒருவராலும் சிதைக்க முடியாது. ஏனென்றால் மக்கள்தான் புலிகள், புலிகள்தான் மக்கள். வியட்நாமிய ஜெனரல் கியாப் அமெரிக்க இராணுவ ஆய்வாளர் ஸ்ரான்லி கார்னோவிற்கு 1990இல் கூறியதாவது. நாங்கள்ஒரு மக்கள் போரை (Peolple War) நடத்தினோம். அமெரிக்காவின் வலுவான இராணுவ உபகரணங்கள் எம்மை வெல்ல முடியவில்லை இறுதி வெற்றி மக்கள் படைக்குத்தான்.

நன்றி: விடுதலைப்புலிகள்

https://tamileelamarchive.com/

# அர்த்தபரிமாணங்கள்

அம்புலி



களத்தில் போராடும் போராளிகளுக்கு உணவுப்பொருட்கள் கொண்டு செல்லும் மக்கள்

**வார்குழல்**
வன்முறையாளன் பற்றிப் பிடித்திழுக்கும் கயிறு

**வன்முறை**
வாழ நினைப்பவர்களுக்கான வதைப்பரிசு

**கிணறு**
உப்பிப் பருத்த உடல் மிதக்கும் கிடங்கு

**செம்மணி**
ஆக்கிரமிப்பு நிலங்களுக்கான அடையாளம்

**படுகொலை**
அப்பாவிகள் சுமக்கும் பாரச்சிலுவை.

**கடல்**
மீன்பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட பிரதேசம்.

**மகஜர்கள்**
குப்பைத்தொட்டியில் குழந்தைகள்.

**தெரு**
கடத்தப்படுவோரின் பிணங்களைப்போடும் சாக்கடை

**எலும்புக்கூடு**
கணக்கெடுக்கப்படாத கனிவளம்

**வானம்**
கிபிர்கள் வட்டமிடும் மைதானம்.

**எறிகணை**
அதிகாலை துயிலெழுப்பி உயிர் குதறும் சேவல்.

**குடியிருப்பு**
சமர்க்களத்தின் தோல்விகளைச் சமன்பாடு செய்யுமிடம்.

**வயல்**
மிதிவெடி விதைக்குமிடம்.

**ஒட்டுக்குழு**
குற்றஞ்சாட்டப்படும் கூலித்தமிழன்.

https://tamileelamarchive.com/



**கைது**
ஆட்குறைப்புக்கான அடைமொழி.

**கடத்தல்**
காணமல் போனவர்களுக்கான கடை.

**சித்திரவதை**
சிறைக்கூண்டின் நெடும்பரிசு.

**கண்ணீர்**
கடலை மிஞ்சிய காலத்துயர்.

**விசாரணை**
தீர்வு வழங்கப்படாமைக்கென திட்டமிடப்பட்ட வார்த்தை.

**மனித உரிமை**
எப்போதோ மரித்துப்போன சொல்.

**ஆர்ப்பாட்ட ஊர்வலம்**
இயலாமையின் குறியீடு.

**தமிழன்**
கொல்லப்படுவதற்காகப் படைக்கப்பட்டவன்.

**துப்பாக்கி**
உயிர்உறிஞ்சும் கொசு.

**பேச்சுவார்த்தை**
மூச்சடைந்துப்போன பிணம்.

**முட்கம்பிவேலி**
தமக்குத்தாமே - படைகள் இட்ட சிறை.

**உயர்பாதுகாப்பு வலயம்**
பறிக்கப்பட்ட தமிழர் நிலம் - பகை தனக்காய்த் தேர்வுசெய்த மயானவெளி.

**பீரங்கி**
பரிசளிப்பதற்கென கொள்வனவு செய்யப்பட்ட படைக்கலம்.

**டோறா**
உயிர்ப்பூக்களின் அதிர்வளக்கும் கருவி.

**படையெடுப்பு**
முடங்கிப்போவதற்காக முன்னெடுக்கப்படுவது.

**போர்நிறுத்தம்**
அங்கீகரிக்கப்படாத போர்களம்.

**கண்காணிப்புக்குழு**
கண்களைக்கட்டாத நீதிதேவதை.

**சமாதானம்**
அநாகரிகத்தை அரங்கேற்றும் நாகரீக நாடகம்.

**தற்காப்புப் பயிற்சி**
பகையை எதிர்கொள்ளவல்ல ஆயுதம்.

**பலம்**
வாழ்வதற்காக தீர்மானிக்கப்பட்ட ஒரே வழி.

**பாசறை**
புலிகளின் பிறப்பிடம்.

**புலிப்படை**
பகைவரை வேரறுக்கும் செயல் நெருப்பு.

**பிரபாகரன்**
தமிழருக்கு யுகங்கள் தந்த கொடை.

**போராட்டம்**
வலிகளை அழித்தெழுதும் புதிய வரலாறு.

**சாவு**
வீரர்களை நெருங்க முடியாதது.

**கல்லறை**
கனவுகளின் உறைவிடம்.

**துயில்நிலம்**
வீரத்தை விதைக்கும் வயல்நிலம்.

**தமிழீழம்**
உலகின் 164வது தேசத்தின் பெயர்.

https://tamileelamarchive.com/

## உதவுதல்

ஆர்ப்பரிக்கிறது அலைகடல் விரிந்த பரப்பும் ஆழங்காணாத் தன்மையும் கொண்ட பெருங்கடல் இறுமாந்து சிரிக்கிறது. கடலோரம் சிறுகுட்டை; மழைநீரோடி கடலுடன் சேர்கையில் சிறுகுட்டையில் தேங்கிய நன்னீர் அமைதி பேணியிருக்கிறது. முத்து, உப்பு, மீன், பவளமென வளம் பல கொண்ட கடல் எனக்கூறப்பட்ட பெருமையில் கடல் குட்டையை கேலி செய்து ஆணவம் மிக கைகொட்டி உரத்து உரத்துச்சிரித்தது; அமைதி வடிவான குட்டை சலனமின்றியிருந்தது. கடல் மீதெல்லாம் பறந்து களைத்த பறவையென்று தாகம் கொண்டு நாவறள கரைவந்து குட்டையில் நீரருந்தி வாழ்த்திப் பாடிற்று புகழ்ந்து அப்போதும் அமைதியே பேணிற்று குட்டை அடக்கமாக. காற்றுச் சிரித்தப்படி பறவையின் பாடலைப் பாடிற்று.

" இருப்பார் செழிப்பாய் இறுமாப்பில் - அவர்
இருப்பார் உதவாது வீணில் "



## பிறத்தல்

உலையில் செந்தணல் போல் உலோகங்களைக் காட்சியடிக்கும் பட்டறை ஒன்று. பல அளவுகளிலும் சம்மட்டிகள் தலையில் மிகு கனத்தோடு நிலையாய் இறுகப் பூட்டியபடி பிடிச்சிராவி, அப்பாவி இதற்குப் பேச்சுத்துணை அரங்கள் உலை கொதித்தாறும் பெருமூச்சோடு தலைக்கனங் கொண்ட சம்மாட்டிகளின் அடிகளை வாங்கி நெருப்பில் வெந்ததுயரோடு ஒட்டி கத்திகள் பிறந்திருந்தன. கருவிகளின் பயனுடமை பற்றி விவாதம் மூண்டது ஓய்வான ஒரு பொழுதில் தலைக்கனங்கள் முந்திக் கொண்டன தம்மையே தாமே முன்மொழிந்தன புகழ்ந்து புகழ்ந்து பிறரைக் கேலிபேசின அடிவாங்கி நொந்திருந்த கத்திகளைக் குத்திக்காட்டின. கத்திகள் அமைதி காத்தன பிடிச்சிராவி வேதனை கொண்டது அரங்களும் கூட ஊரெலாம் சுற்றிவந்த வண்டிச் சில்லு கூறிச்சிரித்தது.

"அடிப்பான் பயன் ஒன்றுடையான் - அன்றி
அடிப்பட்டான் பல பயனுடையான் ஆவான்".

கை.சரவணன்

https://tamileelamarchive.com/

# தியாகி லெப் கேணல் திலீபன்,
# கேணல் சங்கர் நினைவாக...

நினைவுநாள்:
செப்ரெம்பர் - 26



இருள் முகம் போக்கும்
விடுதலை ஒளியின்
உயிர் அகம் அவரே!
உணர்வின் உருவே!!

நிரந்தரம் காக்கும்
கருணைக் கடலின்
அலைமுகம் அவரே!
உறையா வரமே!!



கேணல் சங்கர்

தியாகி லெப் கேணல் திலீபன்



https://tamileelamarchive.com/

# சிந்து

ஆதிலட்சுமி - சிவகுமார்



மெல்லிய விளக்கொளி அறைக்குள் பரவியிருந்தது சுவரில் சிந்துவின் முகம் தெளிவாகத் தெரிந்தது முழுமையாகச் சவரம் செய்யப் பட்டிருந்த அவன் முகத்தில் கண்கள் சிரித்துக்கொண்டிருந்தன அருகே அவனுக்குப் பிடித்தமான யூலியஸ்சீசரின் படம் மென்சிவப்பு முடியுடன் அந்தப்படமும் சிந்து வரைந்தது தான். சிந்துக்கு நன்றாகப் படம் வரைய வரும் படிக்கின்ற காலத்தில் அதிகூடிய புள்ளிகள் வரைதல் பாடத்திற்கானதாகவே இருக்கும் அதிகம் பேசமாட்டான். தோட்டத்தில்.... வயல்வெளியில்... கோயில் வீதியில் அவன் யாரோடும் கூட்டுச் சேருவதில்லை மரங்களைப் பார்த்தப்படி வானத்தைப் பார்த்தபடி கொட்டும் மழையை இரசித்தபடி அவன் அமர்ந்திருப்பான். ஒரு துறவியைப் போல.

“சிந்து”

யாரும் அழைப்பதுகூட அவனுக்குக் கேட்காது.

“சிந்தூஊ”

மெதுவாகத் திரும்பிப்பார்ப்பான் அருகே கொண்டு போய் வைத்துவிட்டு வந்த தேநீர் ஆறிப்போயிருக்கும்.

இரண்டு வயதில் அழகான குருவிக்குஞ்சொன்று பரிசாகக்கிடைத்தது அதை அவன் எப்போழுதும் தன்னுடனேயே வைத்திருப்பான் அவன் தூங்கிப்போனபிறகும் அவன் கைகளில் அது வழுவாதிருக்கும்.

அவன் வயதுப்பிள்ளைகள் ஓடித்திருந்து விளையாட அவன் மட்டும் தனித்திருந்து பொம்மைகளுடன் விளையாடுவான். அவனுடையப் புத்தகப் பெட்டிக்குள் விதம்விதமான வர்ணக்கடுதாசிகள் இருக்கும் கலர்ப்பென்சில்கள் இருக்கும். ஒரு முறை மணிமாமா வீட்டுக்கு வந்தபோது யூலியஸ்சீசரின் படம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

சிந்து அதை உற்று உற்றுப்பார்த்தான்.

“இது ஆர் தெரியுமோ சிந்து”

சிந்து மௌனமாய் நின்றான்.

“இது யூலியஸ்சீசர்; பெரியவீரன்; பலசாம்ராஜ்ஜியங்களை வென்றவன்...”

சிந்து கண்கள் விரிய அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான் சில நாட்கள் கழித்து சிந்து ஒரு படம் வரைந்தான்

அது யூலியஸ்சீசரின் படம்.

“நல்லாயிருக்கு... இன்னும் கொஞ்சம் மெருகூட்டவேணும்”

இன்னும் சிலநாட்கள் கழித்தன கறுப்புப்பேனையை மட்டும் பயன்படுத்தி சிந்து அந்தப்படத்தை பெரிய தாளில் வரைந்திருந்தான்.

மறுதடவை மணிமாமா வந்தபோது அதைக்காட்டினான் மாமாவுக்கு பெரிய மகிழ்ச்சி

“உனக்கு நல்லாப்படம் கீறவருகிறது; அழகாக இருக்கு” பாராட்டிவிட்டு யூலியஸ்சீசரின் படம் ஒன்று கொண்டு வந்து கொடுத்தார்.

சிந்து பல படங்கள் வரைந்ததான் குதிரையில் வாளோடு சீசர் சண்டைக்குச் செல்வது போன்ற கட்சி நண்பர்களுடன் சீசர் உரையாடும் காட்சி என்று பலவற்றை வரைந்தான்.

சிந்துக்கு பதினேழுவயது.

“பதினேழு வயசாயிட்டுது.. இவன்மட்டும் சின்னக்குழந்தை மாதிரியே இருக்கிறான்” அம்மா கவலைப்படுவாள்.

வீட்டுக்குவருபவர்கள் சிந்து வரைந்த

https://tamileelamarchive.com/

படங்களைச் சுவரில் பார்ப்பார்கள்
"இதெல்லாம் ஆர் கீறின"
"எங்கட சிந்துதான்" அம்மா சொல்ல
"சிந்துவோ"
ஆச்சரியமடைந்துவிடுவார்கள்.
சிந்து புதிதாக ஒரு படம் வரைந்து
இருந்தான் நீளமான நீலக்கடல் சிவப்புச்
சிவப்பாக மிதக்கும் இரத்தக்கட்டிகள்.
"இதென்ன சிந்து இது..."
"கடல் கடலிலை படுகொலை
செய்யப்பட்ட சனங்களின்ர இரத்தம்...
சில நிமிடங்கள் அமைதி கவிந்தது"
"சிந்து சாப்பிட வாறியா"
நேரம் கழிந்து சென்று கொண்டிருக்கும்
"சிந்து சாப்பிடுறியா"
அம்மாவுக்கு குதுாகலிக்கும் துரத்தும்
சிந்து வரைதலில் மூழ்கிப்போயிருப்பான்
"சிந்து... சாப்பிட்டு விட்டு விளக்கை
அணைத்துவிடு"
விடியும் பொழுதிலும் விளக்கு எரிந்து
கொண்டிருக்கும் சிந்துவுக்கென வைத்து
மூடப்பட்ட உணவும் அப்படியே
இருக்கும்.
சிந்துவின் பதினேழாவது பிறந்தநாள்...
ஆவணி பதினைந்து... அதிகாலை சிந்து
சுவரில் ஒரு புதிய படத்தை ஒட்டினான்...
"அட..."
எல்லோரும் விக்கித்துப்போனார்கள்
சிவப்பு நிறப் பின்னணியில் தேசியத்
தலைவரின் படம் ஒன்றைக்
கையைத்தூக்கி அவர் ஏதோசொல்கின்ற
பாவனையில் வரையப்பட்டிருந்தது.
"இப்படியே படிக்காம படம் வரைந்து
கொண்டிருந்தா.. சோதினைக்கு என்ன
செய்யப்போகிறானோ.."
அம்மா வருத்தப்பட்டு கூறினா.
சிலநாட்கள் போக... இன்னுமொருபடம்
வரைந்தான்.
ஒரு இழந்தமிழப் பெண் சுமக்கமுடியமல்
சிலுவைச்சுமக்கிறாள் அவளின்
உதட்டிலிருந்தும் தோளிலிருந்தும்
இரத்தம் பெருகி வழிகிறது
உடைகிழிந்திருக்கிறது சில
இராணுவத்தினர் கையில் சாட்டைகளை
ஓங்கியபடி நிற்கின்றார்கள் பின்னே
கண்களை மூடிய தியான நிலையில்
புத்தர் சிலை.
பார்ப்பவர்களுக்கு உயிர் வியக்கம்.
அவனுக்கு வரைதலில் ஒரு வெறியே
ஏற்பட்டிருக்கவேண்டும்
"சிந்து... டிசம்பருக்கு சோதினை
வருகுதெல்லே.. கவனமாகப்
படிக்கவேணும் ராசா..."
அவன் எந்த உணர்வையும் வெளிக்காட்ட
மாட்டான்.
சிந்து பரீட்சை எழுதுவதுக்கு முன்
இறுதியாக ஒரு படம் வரைந்தான்
சமாதானப்புறா... தலைவிரிகோலமாய்
நின்று கதறுகிறாள்.
சிந்து ஒவ்வொருநாளும் பரீட்சை
எழுதப்போனான். வந்ததும் படுத்துத்
தூங்குவான் இரவில் அவனுடைய
அறைக்கதவு உட்புறமாய்
தாளிட்டிருக்கும்.
அவன்படிக்கிறானா? தூங்கிறானா?
வரைகிறானா? எதுவும் தெரியாது.
பரீட்சைகள் முடிந்து மூன்றாம் நாள்...
வீட்டுக்கு வந்து உடைமாற்றிக் கொண்டு
போன சிந்து பிறகு வீட்டுக்கு
வரவேயில்லை அம்மாவுக்குப் பயம்
பதற்றம்.
"உந்தப்படங்கள் கீறேக்குள்ளையே...
அவன் போயிடுவான் எண்டு நான்
நினைச்சநான்" என்றார் அப்பா.
இரண்டுமூன்று நாட்களில் அவன்
நிற்குமிடம் தெரிந்தது அங்குபோய்
அவனைக்கூட்டி வர அப்பா
மறுத்துவிட்டார்.
அம்மா தனிமையில் கிடந்து அழுது
ஆறினாள்.
சிந்துவின் அறைச்சுவர்களில் அவன்
வரைந்த படங்கள் அந்தப்படங்கள் தான்
அம்மாவுக்கு ஆறுதல்.
வீட்டுக்குவருபவர்களை எல்லாம்
கூட்டிக்கொண்டு போய் அந்தப்
படங்களைக் காட்டுவாள்.
ஆறுமாதங்களின் பின் சிந்து
அம்மாவுக்கு ஒரு பாடம் வரைந்து
அனுப்பியிருந்தான் துயிலுமில்லப்
பின்னனியில் ஒரு தாய்துப்பாக்கியை
மகனுக்கு வழங்கிநெற்றியில் பெட்டு
இடுவது தான் காட்சி.
அம்மா நெகிழ்ந்து போனாள்.
அம்மாவுக்குச் சிந்திவிடமிருந்து
ஒன்றுமட்டும் எழுதியிருந்தது
கண்ணீர் ஒழுக ஒழுக அம்மா
படத்தை ரசித்தாள்
அம்மா இப்போது சிந்துவின்
ரசிகை சிந்துவின் மேசை
லாட்சிக்குள் இருந்தப் எல்லாப்
பாடங்களையும் எடுத்து
அம்மாவே சுவரில் ஒட்டினாள்
அம்மாவுக்கு அவற்றைப்பார்க்க
பார்க்கப் பரவசம்.
இரண்டு தடவைகள் சிந்து
வீட்டுக்கு வந்தான் இறுதியாக
வந்தபோது தானாகவே
அடுப்படிக்குள் நுழைந்து சாப்பாடு
போட்டுச் சாப்பிட்டான் அம்மாவின்
கண்களைப் பாத்து கதைக்காமல்
வேறெங்கோ.
பாத்து நின்றான்.
அவன் வந்த போது அப்பா வீட்டில்
நிற்கவில்லை.
தன்னேடு வந்தவனையும் அறைக்குள்
கூட்டிக்கொண்டு போனான்.

சிந்து அம்மாவுக்கு
ஒரு பாடம் வரைந்து
அனுப்பியிருந்தான் துயிலுமில்லப்
பின்னனியில் ஒரு
தாய்துப்பாக்கியை மகனுக்கு
வழங்கிநெற்றியில் பெட்டு
இடுவது தான் காட்சி.
அம்மா நெகிழ்ந்து போனாள்.
அம்மாவுக்குச் சிந்திவிடமிருந்து
ஒன்றுமட்டும் எழுதியிருந்தது
கண்ணீர் ஒழுக ஒழுக அம்மா
படத்தை ரசித்தாள்
அம்மா இப்போது சிந்துவின்
ரசிகை சிந்துவின் மேசை
லாட்சிக்குள் இருந்தப் எல்லாப்
பாடங்களையும் எடுத்து அம்மாவே
சுவரில் ஒட்டினாள் அம்மாவுக்கு
அவற்றைப்பார்க்க பார்க்கப்
பரவசம்.



https://tamileelamarchive.com/



"சிந்து... சிந்து.... சிந்.. சிந்.. துாஊ.."
அம்மாவைத்துாக்கி பாயிற் கிடத்தினார்கள். முதலுதவிச் சிகிச்சை நடந்தது.
அம்மா கண்விழித்ததாள் அம்மாவால் எழுந்திருக்க முடியவில்லை அம்மா மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டாள் நான்கு நாட்கள் அம்மா மருத்துவ உதவியுடன் இருந்தாள்.
வீட்டுக்கு வந்தபோது சிந்துவின் படம் சுவரில் இருந்து யூலியஸ்சீசரின் படத்தை சிந்துவின் படத்தருகே மாட்டினாள் அம்மா வீரஉணர்வு அவளுள்ளும் உற்பவித்த மாதிரியான உணர்வில் மனம் முதிர்ந்தது சிந்து யூலியஸ்சீஸர் மாதிரியே தோற்றம் காட்டிக் கொண்டிருந்தான்.

"சிந்துா"
வாசலில் நின்று மெதுவாகக் கூப்பிட்டாள் பதில்லில்லை ஆனால் தலையை உயர்த்தி எட்டிப்பாத்தான் அம்மாவுக்கு அவனின் முடியைக் கோதிவிடவேண்டும் போலிருந்தது.
வீட்டில் இருந்ததை விடக் கொஞ்சம் உயர்ந்திருந்தான் புஜங்கள் அகன்றிருந்தன.
சிந்துவுடன் வந்திருந்தவன் கட்டிலில் சாய்ந்து சப்பாத்துக் கால்களைத் தொங்கவிட்டிருந்தான் சிந்து கதிரையில் அமர்ந்திருந்தான் இருவரும் மெதுவாக ஏதோ பேசிக்கொண்டிருப்பது புரிந்தது அயல்வீட்டுச் சிறுவன் பிறந்த நாளெனத்தந்த சில கேக்குத்துண்டுகள் ஞாபகம் வர எடுத்துக் கொண்டு போய் மேசையில் வைத்துவிட்டு வந்தாள்.
"அம்மா.." என்று ஒருவார்த்தை கூப்பிடமாட்டாயா சிந்து? அவள் மனம் தவிந்தது.
சிக்மன் பிராயிட்டின் படி ஆண்பிள்ளைகள் அம்மாவிடம் தானே அதிகம் பேசுவார்களாம் இவன் ஏன் பேசுகிறான் இல்லை என்று மனம் தவித்தது அம்மாவுக்கு. அறைக்குள் இருந்து வெளியிறங்கினான்.
"அம்மா வெளிக்கிடுறம்.." கூட வந்தவன் தான் சொன்னான் சிந்து மோட்டச்சைக்கிளை இயக்கினான். படலையடிக்குப் போனதும் திரும்பிப்பாத்தான் பிறகுமோட்டார் சைக்கிள் சென்று விட்டது.
கண்ணீரைத் துடைத்தபடி அம்மா அறைக்குள் போனாள் மேசையில் விரித்தப்படி ஒருபடம். அம்மாவை அப்படியே வரைந்திருந்தான்.
"என்ர சிந்துா"
படத்தை அணைத்தபடி கண்ணீர் உகுந்தாள்.
இரவு அப்பா வந்தார் அவர் உடைமாற்றி கால்முகம் கழுவுவதற்கு முன்னதாகவே படத்தைக் கொண்டு போய்க்காட்டினாள். அவரும் பரவசப்பட்டார் ஆனால் வெளிக்காட்ட வில்லை அதன் பிறகு நீண்ட நாட்களைய் சிந்து வரவில்லை வெளிநாட்டிலிருக்கும் அம்மாவின் மற்ற மகன் சிந்துவை அடிக்கடி விசாரிப்பார். மகன் சிந்துவுக்கு என்று புகழ்பூத்த ஓவியர் பிக்காசோவின் மாதிரிப்படங்கள் சிலவற்றை அனுப்பிவைத்தார் அவற்றை சிந்து கொண்டு போயிருந்தான்.
மார்கழி மாதக்குளிர் காலம்.
திருவம்பாவை தொடங்கி ஏழாவது நாள் பனங்கூடல்களையும் வயல்வெளிகளையும் கடந்து எறிகணைச் சத்தங்கள்...
அம்மா நடுங்கினாள் வானத்தில் இரைச்சல்...
"கடலிலை ஏதோ நடந்துட்டுது போலை" அப்பாவும் பெருமூச்சுசெறிந்தார்.
பன்னிரண்டு மணியளவில் எல்லாச்சத்தங்களும் ஓய்ந்துபோயின
"கடலிலை நல்ல அடிவிழுந்திருக்காம்"
"இருபது பேர் சரியாம்"
"ஒருவேளை சிந்துவும் சண்டைக்குப் போயிருப்பானோ" மனது பதறியது.
வானொலிச் செய்தியைக் காத்திருந்து கேட்டாள் வீரச்சாவடைந்தவர்களில் சிந்துவின் பெயர் இல்லை.
ஒவ்வொரு முறையும் மனம் வெந்து தணிந்தது.
ஆறுவருடங்கள் சிந்து வரவில்லை.
"அவர் வேற வேலையாக நிக்கிறார்" துார இடத்தில் நிக்கிறார்.... இப்ப வர மாட்டார்"
"ஏதும் சொல்லவேணும் மெண்டால்... சொல்லிவிடுறம்"
"ஆளுக்கு ஒரு சிக்கலுமில்லை"
அம்மாவுக்கும் மனம் சோர்ந்து விட்டது
'ஆறு வருடங்களாய் அம்மாவின் முகம்பாக்காமல் இருக்கமுடிகிறதா சிந்து'
ஆறு வருடங்கள் சிந்து வரைந்த படங்களோடு அம்மாவின் காலம் கரைந்தது.
அவன் இப்ப எங்கட பிள்ளை மட்டுமல்ல... தேசத்தின்ர பிள்ளை
"அப்ப.. அப்ப... நான்...."
"ஓ.. நீ... சிந்துவின்ர அம்மா மட்டுமல்ல... தேசத்தின்ர பிள்ளைகள் எல்லோருக்கும் அம்மா"
அப்பா அருகே இருந்து தெம்பூட்டினார்.
ஒருநாள் எந்த ஆரவாரமும் இல்லமால் அமளிதுமளியுமில்லமைல் சிந்துவைக் கொண்டு வந்தார்கள்.
அம்மா நம்பவில்லை.
"சிந்து... சிந்து.... சிந்.. சிந்.. துாஊ.."
அம்மாவைத்துாக்கி பாயிற் கிடத்தினார்கள். முதலுதவிச் சிகிச்சை நடந்தது.
அம்மா கண்விழித்ததாள் அம்மாவால் எழுந்திருக்க முடியவில்லை அம்மா மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டாள் நான்கு நாட்கள் அம்மா மருத்துவ உதவியுடன் இருந்தாள்.
வீட்டுக்கு வந்தபோது சிந்துவின் படம் சுவரில் இருந்தது யூலியஸ்சீசரின் படத்தை சிந்துவின் படத்தருகே மாட்டினாள் அம்மா. வீரஉணர்வு அவளுள்ளும் உற்பவித்த மாதிரியான உணர்வில் மனம் முதிர்ந்தது சிந்து யூலியஸ்சீஸர் மாதிரியே தோற்றம் காட்டிக் கொண்டிருந்தான்.

https://tamilarchive.blogspot.com/



# அழும் ஓவியம்

வர்ணங்கள்
தீட்டப்படாத
ஓவியத்துக்காக
தூரிகைகள்
ஏங்குகின்றன
நிழலாகவே
விரிகிறது
ஓவியம்

பின்பொருநாள்
கண்களைக்
கட்டியபடி
வெள்ளையடிப்பவர்கள்
வர்ணம்
தீட்டியிருந்தார்கள்

மீண்டும்
மீண்டும்
அழுது வடிகின்றது
ஓவியங்கள்
இன்னும்
நிழலாகவே விரிகிறது
வர்ணங்களின்
பின்னாலுள்ள
ஓவியம்.

யாத்ரிகன்

# ஒளிப்பறவை

ச்ச்.... ச்ச்
உச்சி முகட்டிலிருந்து
உச்சுக்
கொட்டியது பல்லியொன்று

சகுனத்தை
நொந்தபடி
முணு முணுக்கின்றன
பாட்டியின்
பற்களற்றவாய்கள்

மலங்கிய
விழிகளுடன்
பாட்டியின் பார்வை
தெருவினை
வெறித்தது

தூரத்தில்
புள்ளியாகி - பின்
சிறிதாகி
பெருத்தபடி வருகிறது
ஒளிப்பறவை

பாட்டி
முகட்டினை
பாக்கின்றாள்
பல்லி உச்சுக்
கொட்டிக் கொண்டிருந்தது.

https://tamileelamarchive.com/

# ஆதிலட்சுமி சிவகுமாரின் கவிதைகள் மூன்று

ஆதிலட்சுமி சிவகுமாரின் கவிதைகள் மூன்று
ஆதிலட்சுமி சிவகுமாரின் கவிதைகள் மூன்று



ஒளிப்படம்: அமரதாஸ்

## அதுவே உன் அடையாளமாய்

மனிதர்களின் செறிவு குறைந்த
என் கிராமத்துக் குடிசையில்
உன் நினைவுகளும் நானுமாய்...
அப்பாவின் அந்தியேட்டிக்காக
வெள்ளையடித்த
பொருக்குக் கழன்ற சுவரில்
கறுப்புப் பொட்டாய் உன் நிழல்
நிலவு பற்றி நீ எழுதிய
கவிதை வரிகள்
உன் கல்வெட்டாய் எனக்குள்
உனக்குப்பிடித்த
ஊசி மல்லிகையின் முகைகள்
தினமும் விரிகையில்
உன் புன்னகையை நான்
மீட்டுக் கொள்கிறேன்
எப்போதாவது எங்கேயாவது
இராப் பொழுதின்
நிசப்தம் கலைக்கும்
ஒலியதிர்வு பேரோசையாய் என்
செவி நுளைகையில்
அந்த நாளின் அந்தக் கணத்தில்
நிகழந்ததுபோலவே

என் குருதி உறைந்து குளிர்வதை உணருவேன்
உன் உயிர் ஒளியேறிய
அந்தத்துளியில்
வீரமாய்க் கர்ச்சித்தேனென்று
பொய் சொல்லமாட்டேன் மகனே.
இருபது வருடங்களுக்கு முன்
மருத்துவிச்சி அறுத்தெறிந்த
தொப்புள் கொடியின் அடித்துண்டில்
வாய்பொத்தி அழுதேன் வலியெடுக்க
என் கண்ணீர்த்துளி கூட
உன் முகவரியைக் காட்டிக்
கொடுக்கக் கூடாதென்ற
கவனத்துடன்
கறுப்பாய் உன்னைப்
பெற்றுவிட்டேனென்று
கடிந்து கொள்வாய் மகனே
இன்றோ.
கறுப்பே உன் அடையாளமாய் .

https://tamileelamarchive.com/

## வாழ்க்கை

பள்ளிக்கூடம் விட்டுப்
பசியோடு வருகிறான் என் பிள்ளை
சோறிட முடியவில்லை என்னால் !
காலையில் சமைத்த சட்டியும் பானையும்
கழுவாமற் கிடக்கின்றன
கைதொட முடியவில்லை என்னால்!
சுவாமி அறைக்குள்ளே
தொங்கும் சிலந்தி வலைகள்
துடைத் தெறிய முடியவில்லை என்னால்!
பூவும் பிஞ்சுமாய்ப்
பொசுங்கிக் கிடக்கின்றது கத்தரிச் செடி
நீரூற்ற முடியவில்லை என்னால்!
இரண்டு வாரங்களாய்
இருமிக் களைத்து மூலையில்
சுருண்டு கிடக்கிறார் என் தாய்
மருத்துவ மனையிற் காண்பிக்கமுடியவில்லை
என்னால்!
பள்ளியிலே என்னுடன் படித்தவள்
பரிதவித்த வேளையெல்லாம்
பல உதவி செய்தவள்
பல நாட்களுக்கு முன் பிரசவித்திருக்கிறாள்
போய்ப் பார்க்க முடியவில்லை என்னால் !
மாமாவின் மகனுக்கு மணவிழா
மறக்காமல் அழைப்பு அனுப்பியிருந்தான்
மகிழ்வாக ஒரு தடவை சென்றுவர
என்னால் முடியவில்லை !
விழுந்து கிடக்கும் வேலிப்பக்கத்தால்
வளவினுள் வருகிறது கட்டாக்காலி
கண்டாலும் துரத்த முடியவில்லை என்னால்!
என்னால் முடியாதவை பல எனினும்
ஏதோ ஒன்றை முடித்துவிடும் தவிப்பில்
என் அவசர வாழ்க்கை!



## இரவு

அரவமற்றுக் கிடக்கிறது
என் அரியணை.
அடிவயிற்றிலிருந்து
எழுகிறது ஓலம்.
பரிதவிப்போடு
நீள்கிறதென் பார்வை.
உள்ளே புரள்கிறது
துயர நதி.
வலிதருகின்றன
ஞாபகங்கள்.
அழுக்கான காற்சட்டையுடன்
அழுதபடியே
உறங்கிக் கிடக்கிறன பிள்ளைகள்
தடவிக் கொடுத்துத்
தூங்க வைக்கையில்
அனலாய் விழுகிறது கண்ணீர்.
ஏங்கித் தவிக்கும்
என் இதயம்.
உன் அருகாமை வேண்டி
அடம்பிடிக்கையில்
நீதொலைந்துபோன
அந்த நாளின் காட்சி
நினைவில் விரியும்.
நான் விதைவையா? வாழ்விழந்தவளா?
இனி வாழ்வே இல்லையா?
எதுவும் தெரியாத வெறுமையுடன்
அந்தரிக்கிறதென் ஆன்மா.
ஒருகடுதாசி. இல்லையேல்
ஒரு சிறிய எலும்புத்துண்டு
எதுவுமில்லையேல்...
நீ புதைக்கப்பட்ட அல்லது
எரிக்கப்பட்ட முகவரி
ஏதாவது எனக்கு வேண்டும்.
எம் பையன் கண்விழிக்கும் போது
காட்டுவதற்கு.
இருளில் தகிக்கும் என்
இதயத்தைக் கல்லாக்கி
நிற்கிறேன்.

https://tamileelamarchive.com/



# மேகம்

மாமுனை மனோ (நோர்வே)

வெண்பனிப் பூக்கள் மண்ணில் வீழ்ந்து ஒவ்வொரு இதயங்களையும் சில்லிடவைத்துக்கொண்டிருந்தது. மேகம் தழுவி விளையாடும் உயர்மலைகளின் நடுவே நீலவானத்தின் கீழ்திசை மெல்லென சிவந்துவர காலைக்கதிரவன் கண்விழித்து கதிரொளியை பரப்பிக்கொண்டிருந்தாள் மல்லிகா. வேலைக்கு போவதற்கு முன் எப்படியும் மகள் மஞ்சுவை தமிழ்ப்பாடசாலையில் புதிதாக இணைத்துக்கொள்ளவேண்டும் என நினைத்துக்கொண்டு துரிதமாக தயாராகிக்கொண்டிருந்தாள். மல்லிகாவின் மனதுக்குள் இனம்புரியாத மகிழ்ச்சி தன்னுடைய மகள் முதன் முதலாக புலம்பெயர்ந்த நாட்டில் அதுவும் தமிழ்ப்பாடசாலையில் தமிழ் படிக்க போகப்போறாள்.


ஆரவாரமாக வெளிக்கிட்டுக் கொண்டிருந்தவேளை...

'தாயும் மகளுமாக விடியக்காலமை என்ன அட்டகாசம் பண்ணுறியள்.. ஆ.. மனிசனை நித்திரை கொள்ளவிடமாட்டியளே' என்று... நித்திரை குழம்பிய ஆத்திரத்தில் சூடாக ஏசிக்கொண்டிருந்தான் அழகு.

'இல்லையப்பா.... இண்டைக்கு தமிழ் பள்ளிக் கூடத்திலை புதிசா பிள்ளையளை சேர்க்கினமாம் அதுதான்... பிள்ளையையும் சேர்க்கலாம் எண்டு கொண்டுபோறன் என்று... மெல்லிய குரலில் பதில் இறுத்தாள் மல்லிகா

'உமக்கென்ன விசரே தமிழையும் மனிசன் படிப்பானே! என்ர பிள்ளை நோர்வே மொழி படிச்சால் காணும். தமிழ்மொழி இஞ்ச சோறு போடாது சரியோ ' என்று... முட்டாள்தனமான வார்த்தைகளால் முட்டுக்கட்டை போட்டான்.

தமிழ்மொழியை உதாசீனம் செய்த அழகுவின் சொல்லம்புகள் அவளின் அடிமனதை குத்தி காயப்படுத்தவே செய்தது. தமிழ் வாழவேண்டும் என்பதற்காக ஊரில் தங்கள் இன்னுயிர்களை தற்கொடை செய்துகொண்டிருக்கும் புனிதர்களை மனதில் நினைத்தபோது துள்ளித்திரிந்த பள்ளித்தோழியின் நினைவுகள் நெஞ்சை நெருடியது.



https://tamileelamarchive.com/

துள்ளித்திரியும் சிட்டுக்குருவிகளாய் இவர்களின் இளமைக்காலம் இனிமையாகக்கரைந்தபோதும் கொடிய அரசின் கொடுங்கோலாட்சி சினங்கொள்ள வைத்தது எங்கள் தெருக்களில் சுதந்திரமாக நடக்கமுடியாது தருக்கர்களின் மிருகத்தனம் குருதியை நெருப்பாக்கியது எமது மண்ணை ஆக்கிரமித்து தமிழரின் சின்னங்களை சிதைத்து தங்கள் செருப்புக்களாக ஆக்க முனையும் சிங்களத்தின் எண்ணங்கள் நண்பியின் மனதை நெருடும் போதெல்லாம் நெருப்பாய் நிப்பாள். படிப்பில்புலி ஒரே ஒரு பாடத்தில் மட்டும் இவளுக்கு பிடிப்பில்லை காரணம் கேட்டால் திரிவுபடுத்தப்பட்ட பொய்களை அறிய ஆர்வம் இல்லை என்பாள் அதிகூடிய புள்ளிகளை பெறவேண்டுமானால் வரலாற்றுப் பாடத்தையும் படிக்கவேண்டும் என்று ஆசிரியர் ஆதங்கப்படும்போது 'சேர் வரலாறு உண்மை சொல்லி நின்றால் உயிருக்கு மேலாக நேசித்து என் சுவாசமாக படித்திருப்பேன். மாறாக வரலாறு என்ன சொல்கின்றது எம் தேசத்தின் பூர்வீகத்தை மறைக்கின்றது அதனால் மறுக்கின்றேன் மீறி படித்தால் பொய்யான வரலாற்றை நியாயப்படுத்தும் சாட்சியாளராக மாறி எனது தேசத்துக்கு துரோகம் இழைத்துவிடுவேன் மன்னித்துவிடுங்கள் என்றாள்'

வரலாற்று ஆசிரியருக்கு வார்த்தை தட்டுப்பட்டது துரோகம் என்ற சொல் அவரை துரத்திக்கொன்றது.

விழிப்புணர்வான சிந்தனைகளோ அடக்குமுறையாளரின் செருக்குகளை தன் கருத்துக்களால் உடைத்தெறியும் 'விடுதலை' மண்ணில் நிலை கொண்ட மாற்றான் படைகளை அகற்றவேண்டுமானால் ஆயுதம் ஏந்துவதைத்தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்டாள் மண்ணும் மக்களும் மகத்தான வாழ்வு வாழவேண்டுமானால் எம் தேசம் மீட்கப்படவேண்டும் அப்போதுதான் மொழி கலாச்சாரம் பண்பாடு பாதுகாக்கப்படும் இவை அனைத்தும் நிறைவேறவேண்டுமானால் எம் தேசஆன்மாவின் காலத்தில் மட்டுமே முடியும் இனியும் இளைஞர்களாகிய நாம் தாமதமாகினால் எம் மண் பறிக்கப்பட்டு மக்களின் உயிர் அழிக்கப்பட்டுவிடும் என மனதில் குமுறும் உணர்வுகளை ஓர் நாள் மாணவர் சங்கக்கூட்டத்தில் பேசிய 'விடுதலை' மறுநாள் தேசவிடுதலையின் போராளியாக தன்னை இணைத்துக்கொண்டாள்.

ஓர்மத்தோடு வாழ்ந்த உன்னதமான சிநேகிதியின் நினைவுகளை மீட்டிப்பார்த்த மல்லிகா தார்மீகத்தை மறந்து தான்தோன்றித்தனமாக திரியும் கணவனை நோக்கி...

'உங்களுக்கு குடியத்தவிர வேற ஒண்டுமே தெரியாது. என்ர பிள்ளைக்கு என்ன செய்யவேணும் எண்டு எனக்கு தெரியும் நீங்கள் பேசாமல் இருங்கோ நான் பிள்ளையை தமிழ் பள்ளிக் கூடத்துக்கு கூட்டிக்கொண்டு போகத்தான் போறன்' என்று... என்றுமே கணவனோடு கோபித்துக்கொள்ளாத மல்லிகா அன்று கோபித்தவளாகவே பதிலளித்தாள் 'நான் உங்களை கூப்பிட்டு சாப்பாடும் உடுப்பும் தந்ததே பெரிய விசயம் இதில வேற அங்க போனால் அதுக்கு காசு இதுக்கு காசு எண்டு தேவையில்லாமல் கேட்டுக்கொண்டிருப்பாங்கள்' 'ஓ...பள்ளிக் கூடத்துக்கு காசு கட்டவேணும் எண்டதுக்காக தமிழ் படிப்பிகக்கூடாது அப்படித்தானே ஒவ்வொருநாளும் நீங்கள் குடிக்கிற காசை சேர்த்தாலே பள்ளிக் கூடத்துக்கு காசு கட்டக்காணும்'

'திருப்பித் திருப்பி... சொல்லிக்கொண்டிருக்கிறன் போகவேண்டாமெண்டால் போகவேண்டாம் அவ்வளவுதான் '

எங்கள் குழந்தைகள் அந்நியவாழ்வில் அகப்பட்டு எம்இனத்தின் மொழி கலாச்சாரம் பண்பாடுகளை இழந்து போய்விடக் கூடாது என்பதற்காக நல்லநோக்கங்களோடு புலம்பெயர் தேசத்தில் தமிழ் பாடசாலைகளை உருவாக்கி இருக்கினம் அதுமட்டுமல்ல இனத்தின் விடுதலைக்காகவும் சமூகப்பிரச்சனைகளுக்காகவும் போராடி வருகினம் இப்படியிருக்கின்றபோது இவர் மட்டும் முட்டாள்தனமாக முடிவெடுக்க அவளுக்கு எரிச்சலாக வந்தது... அப்பொழுது பக்கத்து அறையில் படுத்துறங்கிய அழகுவின் தகப்பனார்

'டேய் அழகு நீ செய்யிறது சரியா? '

'அப்பா நீங்கள் இதிலை தலைப்போடாதேங்கோ ' 'டேய்... நான் தலைபோடேல்லை உன்னை பெத்தவன் எண்டதை மறந்து தமிழன் எண்டமுறையில கொஞ்சம் கதைக்கவிரும்புறன்' நீ பிறந்த மண்ணில சிங்கள பயங்கரவாத அரசின் விமான குண்டு வீச்சால் பாடசாலைகள் அழிக்கப்பட்டு பள்ளிப்பிள்ளைகளின் உயிர்குடித்து ஊழிக்கூத்தாடுகிறது சிங்களம். மீதியுள்ளோர் இடம்பெயர்ந்து படிக்கிறதுக்கு பள்ளிக் கூடமே இல்லாமல் மரத்திற்கு கீழேயும் தெருவோரங்களிலும், இருக்கிறதுக்கு கதிரை மேசை இல்லாமல் நிலத்திலையும் பாயிலையும் இருந்து தமிழை படிக்கவேணுமென்ற வைராக்கியத்தோடு படிக்குதுகள் அதுபோலத்தான் புலம்பெயர்ந்த நாடுகளிலையும் எங்களுடைய முகங்கள் தொலைந்து போகக் கூடாதென்பதற்காக இயந்திர வாழ்க்கையின் மத்தியிலும் தங்களுடைய நேரங்களையும் செலவழித்து நல்லதொரு தலைமையின் கீழ் கட்டுக்கோப்பான நிர்வாகத்தோடு தமிழ்ப்பள்ளிக் கூடங்களையும் சமூகஅக்கறை மையங்களையும் அமைத்திருக்கினம்.
உன்னைப்போலதான் கொஞ்சப்பேர் தாய்நாட்டையும் தாய்மொழியையும் இழிவா கதைச்சுக்கொண்டு திரியினம் அதுமட்டுமல்ல பேரினவாதத்தின்ர கூலிக்கு கூச்சலிடவும் தமிழை சீரழிக்கவும் திரியினம். தம்பி தமிழ்தான் உங்களுக்கு இந்த செழிப்பான வாழ்க்கையைத் தந்தது. என்பதை கனவிலும் மறந்திடாதேங்கோ எந்தவொரு இனத்துக்கும் தாய்நாடும் தாய்மொழியும் அடையாளம். முதலில் ஒவ்வொருவரும் தாய்நாட்டையும் தாய்மொழியின் மகிமையையும் புரிந்து கொள்ளவேணும். அதற்கு பிறகுதான் பிறநாடுகளும் பிறமொழிகளும்; நாளைக்கு உன்னுடைய மகள் தமிழ்மொழியை இழக்கநேர்ந்தால் நிச்சயம் முகம் இழந்த முண்டமாகத்தான் வாழவேண்டிவரும்.

'மாமா நீங்கள் கவலைப்படாமல் உள்ளை போங்கோ எனக்கு இந்த நாட்டில எல்லாவிதமான சுதந்திரமும் இருக்கு. என்ர பிள்ளையை முகம் இழந்த முண்டமாக வாழ நான் விடமாட்டன்'

தந்தையும் மனைவியும் சொன்னவார்த்தைகள் அழகுவின் சிந்தைக்குள் நுழைந்து மனதை சீர்மைப்படுத்தியது. சொந்தமண்ணையும் தாய்மொழியின் அவசியத்தையும் எண்ணிப்பார்க்க வைத்தது. வெட்டிப்பேச்சு பேசுவதும் வீணே காலத்தை போக்குவதும் ஒட்டுப்படைகளோடு உறவு வைப்பதும். தமிழுக்கும் தமிழீழத்திற்கும் தான் புரியும் துரோகமென உணர்ந்து கொண்டவன் மானத்தமிழனாய் வாழ்வதே மகத்தான வாழ்வென அறிந்துகொண்டான்.

●

https://tamileelamarchive.com/

# நேர்காணல்

**நோர்வே தமிழர் நெடும் பரப்பின் வேராக விளங்குபவர்களில் ஒருவர். தமிழ் இன உணர்வாளர். நோர்வேயில் விடுதலை ஆர்வம் பிறக்க படிமுறையில் உழைத்தவர்களுள் இவரும் ஒருவர்.**

## றொபேட் ஜெயானந்தன்



ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட இவர், 31 வருடம் தொடர்ந்து நோர்வேயில் வாழ்ந்து வருகின்றார். மேதின ஊர்வலத்தில் முன்பு ஒரே ஒரு தமிழனாக, 'இலங்கையில் சிங்களவர்களுக்கு இருக்கும் சகல உரிமைகளும் தமிழர்களுக்கும் வழங்கப்படவேண்டும்' என்று நோர்வே, தமிழ் மொழிகளில் எழுதிய பதாகையை தாங்கிப் பிடித்தவராக நடந்து, ஊடகங்களின் ஆர்வநோக்கை தொட்ட தமிழன் இவராவார். குன்றாத இனஉணர்வோடு, நோர்வேயில் பன்நோக்கிலும் பாடுபடும் தொண்டர். இவர் தொட்ட தமிழர் அமைப்புக்கள் இன்று தழைத்து வளர்ந்து நமக்கு நிழல்பரப்பி நிற்கின்றன. மேடை, வானொலி, தொலைக் காட்சிக் கலைஞன், இவர் படைத்த வரலாறு பற்றி கேட்டறிந்து கொண்டவை.

நேர்கண்டவர்: ந.கிருஷ்ணசிங்கம்

**ந.கிருஷ்ணசிங்கம்: மேதின ஊர்வலத்தில் இப்பொழுதெல்லாம் நோர்வே ஒஸ்லோவில் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கலந்துகொண்டு, ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழ்த்தேசிய விடுதலைக்காக குரல் கொடுக்கின்றார்கள். ஆனால் முன்னொருபோது தன்னந்தனியனாக ஒரு ஈழத்தமிழனாக மேதின ஊர்வலத்தில் கலந்துகொண்டு இலங்கைச் சிங்களவர்க்கு உள்ள உரிமைகள் யாவும் இலங்கைத் தமிழர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற சுலோகத்தை நோர்வே மொழியிலும் தமிழ் மொழயிலும் ஒரு மட்டையில் எழுதி பிடித்துக்கொண்டு நீங்கள் சென்றதாக அறிந்தோம் அச்சம்பவம் பற்றி கூறுங்கள்...**

றொபேட் ஜெயானந்தன்: தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் சிறுவயதிலிருந்து ஏதோ ஒரு விதத்தில் பங்கு கொண்டவன் என்ற முறையில் புலம்பெயர்ந்து நான் நோர்வேயில் வாழ்ந்தபோதும் தமிழீழ விடுதலை குறித்து என்னை தொடர்ச்சியாக சிந்திக்க வைத்தது. அப்பொழுதெல்லாம் இலங்கையில் தமிழின அழிப் பிற்கானதும், கல்வியல் ஒடுக்குமுறைக்கானதுமான சம்பவங்கள் நிறைய நடந்துகொண்டிருந்தன. இவையாவும் எனது மனப் புயலை மேலும் மூர்க்கமடைய வைத்தது. 1977ம் ஆண்டு

https://tamileelamarchive.com/

ஒஸ்லோவில் நிகழ்ந்த மேதின ஊர்வலத்தில்தான் நான் தனிமையில் இத்தகைய ஒரு சம்பவத்தை நிகழ்த்தும்படி நேர்ந்தது. மேதின ஊர்வலமானது தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைக் குரலுக்கான தினமாக இருந்ததோடு அல்லாது ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கான விடுதலைக்குரலை சர்வதேசத்தின் பார்வைக்கு கொண்டுவரும் ஒரு பரிணாம வளர்ச்சி பெற்ற எழுச்சி ஊர்வலமாக மாற்றப்பட்ட அந்தக்காலகட்டத்தில் எமது தேசியப்பிரச்சினையையும் இந்த ஊர்வலத்தில் முன்வைக்கலாமா என நான் நோர்வே தொழிலாளர் கம்யூனிசக்கட்சி உறுப்பினரான எனது நோர்வே நண்பரிடம் வினாவியபோது அவர் அது நல்ல விடயம் செய்யுங்கள் என்று ஆதரவு வழங்கினார். அவர்களுடைய பதாகைகளின் முன் செல்வதற்கான அனுமதியையும் பெற்றுத்தந்தார். மேற்குறிப்பிட்ட வாசகத்தையும் புதிய மனிதனான என்னையும் வீதி மருங்கில் திரண்டு நின்ற மக்கள் விநோதமாய் பார்த்ததை நான் அவதானித்தேன். பலர் சூழ்ந்து புகைப்படங்களும் எடுத்துக்கொண்டார்கள். பத்திரிகைகளிலும் வந்திருக்கலாம், ஆனால் இவை சம்பந்தமான ஆவணம் என்னிடம் இல்லாதபோதும் இச்சம்பவத்தைப் பார்த்த கேள்விப்பட்ட அக்காலகட்டத்தில் ஒஸ்லோவில் வாழ்ந்த மீதி 5 ஈழத்தமிழர்களும் இன்றும் ஒஸ்லோவில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1978 மேதின ஊர்வலத்தில் மேற்குறிப்பிட்ட வாசகங்களை ஒரு வெள்ளைச்சேலையில் எழுதி அதை பதாகையாக்கி நானும் திரு.சித்திவினாயகநாதனும் இருகரையிலும் பிடித்தபடி பங்கு கொண்டோம், இந்த மேதின ஊர்வலம் இரண்டு ஈழத்தமிழர்களை உள்ளடக்கியதாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவதினத்தன்றிலிருந்து மேலும் ஒஸ்லோ வாழ்த் தமிழர்களை ஒருங்கிணைத்து தமிழருக்கான ஒரு சங்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் வலுவடைந்தது. இதன் விளைவாக1979ம் ஆண்டு தை மாதம் ஒஸ்லோ மாநகரில் நோர்வே தமிழ்ச்சங்கம் உருவாக்கம் பெற்றது. மேற்படி சங்கத்தில் 9 ஈழத்தமிழர்களும் 6 இந்தியத் தமிழர்களும் 2 மலேசியத் தமிழர்களும் உறுப்பினர்களாக இணைந்திருந்தனர். அதே ஆண்டு நோர்வே தமிழ்ச்சங்கத்தின் பெயரால் நிகழ்ந்த மேதின ஊர்வலத்தில் மேற்குறிப்பிட்ட வாசகத்துடனும் வேறு பல வாசகங்களுடனும் அனைவரும் கலந்துகொண்டோம். காலப் போக்கில் பல ஈழத்தமிழர்கள் நோர்வேக்கு வருகைதந்தமையால் பெரும்பாலானோர் நோர்வே தமிழ்ச்சங்கத்தின் பதாகையுடன் எமது தேசியப்பிரச்சனையை முன்நிறுத்தி மேதின ஊர்வலங்களில் பங்கு கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**நீங்கள் எந்தக்காலகட்டத்தில் நோர்வேக்கு புலம்பெயர்ந்து வந்தீர்கள். மேற்படி புலப்பெயர்வுக்கான குறிப்பிடத்தக்க காரணங்கள் ஏதாவது உண்டா?**

ஆம், தமிழர், சிங்களவர் என்ற பாராமுக அடிப்படையில் தமிழ் இளையோரின் கல்வித்தகமைக்கேற்ப வேலைவாய்ப்பு கிடைக்க நீடிய காலதாமதம் ஏற்பட்டது முக்கிய காரணியாக அமையும். அக்காலகட்டத்தில் எனது அண்ணர் றொபேட் தயானந்தனும், நோர்வே மண்ணில் 1956ம் ஆண்டு முதலில் காலடி வைத்த எனது மாமனாருமான அன்ரனி ராஜேந்திரம் அவர்களும் நோர்வேயில் வசித்து வந்த காரணத்தால் நான் விரும்பியோ விரும்பாமலோ 1975ம் ஆண்டு நோர்வேக்கு வரவேண்டியநிலை ஏற்பட்டது. நான் இயல்பாகவே ஒரு தமிழ் உணர்வாளனாகவே இருந்தபடியால் 1982ம் ஆண்டு லண்டனுக்கு சென்றிருந்தவேளை தமிழீழ விடுதலை அமைப்பின் தீவிர ஆதரவாளராக அங்கு இருந்த திரு. பாலசேகரம் அவர்களை சந்திக்கும் வாய்ப்பை எனது சகோதரனும் தற்போது நோர்வேயில் வாழுபவருமான திரு. நிரஞ்சன் அவர்கள் ஏற்படுத்தித்தந்தார். திரு.பாலசேகரம் அவர்களுடன் உரையாடிய தன் பயனாக எனக்கும் நோர்வேயில் தமிழீழ தேசிய விடுதலைக்கான ஓர் அமைப்பை உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. நான் ஒஸ்லோ திரும்பியதும் தேசிய முனைப்புள்ள சில ஆர்வலர்களை தொடர்புகொண்டு எனது இல்லத்திற்கு அழைத்து எனது எண்ணத்தை வெளிப்படுத்தி அவர்களின் ஆலோசனையையும்பெற்று அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த எங்களுடைய தேசியத்தலைவரை கடிதமூலம் தொடர்பு கொண்டு மேற்படி அமைப்புரீதியான ஆலோசனையையும் அறிவுறுத்தலையும் பெற்று 1983ம் ஆண்டு தமிழர் நலன்புரி மன்றம் என்ற பெயரில் மேற்படி அமைப்பை ஒஸ்லோவில் நிறுவினோம். இதற்கெல்லாம் என்னுடன் உறுதுணையாக இருந்து செயல்பட்டவர் திரு.சதானந்தன் ஆனந்தகரன் ஆவார். 1984ம் ஆண்டு ஒஸ்ரேலியா நாட்டிலிருந்த தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழக அமைப்பாளர்களுள் ஒருவரான வழக்கறிஞர் திரு.ரவீந்திரன் அவர்களின் ஒஸ்லோ வருகையின் பலனால் நாங்கள் அவரின் அறிவுரையைப் பெற்று தமிழர் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தை ஒஸ்லோ நோர்வேயில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தோம். இதன் கிளையை நோர்வேயின் இரண்டாவது நகரமான பேர்கனில் தொடக்கினோம், இதன் பயனாக இந்தியாவில் தஞ்சமடைந்த ஈழத்தமிழ் அகதிகளுக்காக 1984ம் ஆண்டு உடுபுடவைகள் அடங்கிய ஒரு தொகுதியை இந்தியாவிற்கு கப்பல் மூலம் அனுப்பிவைத்தோம். இதேவருடம் ஒஸ்லோவில் தமிழ் அமுதம் என்னும் பெயரில் வானொலிமூலம் வாரத்தில் ஒரு மணிநேரம் தமிழில் ஒலிபரப்பு செய்வதற்கான வாய்ப்பையும் உருவாக்கிக்கொண்டோம்.

**அக்காலத்தில் தேசியத்தலைவரை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியமை சம்பந்தமாகக் கூறுங்கள்?**

1986ம் ஆண்டு நான் இந்தியாவிற்குச் சென்று தமிழர் அகதிகள் புனர்வாழ்வு கழகப் பணியாளர்களைச்சந்தித்து எம்மால் திரட்டப்பட்ட நிதியை அவர்களிம் ஒப்படைத்தேன், அவர்கள் என்னை எம்உறவுகள் தங்கியிருந்த முகாம்களுக்கு அழைத்துச்சென்றமையால் அவர்கள் அனுபவித்த துன்பங்களை நேரில் பார்த்து கவலையடைந்தேன். மறுநாள் விடுதலைப்புலிகளின் பிரமுகர்களான அன்ரன் பாலசிங்கம், கஸ்ரோ, யோகி, பா.நடேசன் ஆகியோரைச்சந்தித்து உரையாடியபின், தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களை மறுநாள் சந்திக்கும் வாய்ப்பை கஸ்ரோ ஏற்படுத்தித்தந்தார், தேசியத்தலைவருடன் அதிகநேரம் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த இறுக்கமான காலகட்டத்தில் எமது தேசியத்தலைவரோடு உரையாடக் கிடைத்த மேற்படி மகிமைக்குரிய நிகழ்வு என் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவமாகும். இக்காலப்பகுதியில் ஒரு வருட காலமாக இந்தியாவில் தங்கியிருந்து எமது தலைமைச்செயலகத்திற்கும் நோர்வேயில் இயங்கும் அமைப்புக்கும் தொடர்பாளராக இருந்தேன்.

**இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலப்பகுதியில் நீங்கள் எங்கே வாழ்ந்தீர்கள்?**

இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்குச் சென்றபோது அங்கு சமாதானம் உருவாகும் என்ற நம்பிக்கையில் நானும் தாயகம் திரும்பினேன். அங்கு எமது தலைவர் முதன்முதல் பொதுமக்கள் முன் தோன்றி உரையாற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதுமலை எழுச்சி நிகழ்வைக் காணவும், தலைவரின் சுதுமலைப் பிரகடனத்தை கேட்கவும் வாய்ப்புக்கிட்டியது.

https://tamileelamarchive.com/

சமாதானத்திற்குச்சென்ற அமைதிப்படை தமிழின அழிப்புப் படையாக மாறியதால் எனது எதிர்பார்ப்பின் முனை முறிந்த ஏமாற்றத்துடன் நோர்வே திரும்ப நேர்ந்தது. மீண்டும் தமிழர் அமைப்புக்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்காக சில பதவி களை ஏற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது, அந்தவகையில் 1990ம் ஆண்டு நோர்வே தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருந்து தமிழ்ச்சங்கமும், தமிழர் நலன்புரி மன்றமும் ஒருங்கிணைந்த மேதின ஊர்வலத்தை நடாத்துவதற்கான முயற்சிகளை முன் னெடுத்தேன் அது இன்றும் நடைமுறையில் உள்ளது.

**நோர்வேயில் வாழும் புலம்பெயர்ந்த பிள்ளைகளுக்கான தமிழ்மொழி அறிவூட்டும் அன்னைபூபதி தமிழ் கலைக்கூடத்தில் தங்களுக்குள்ள நெருங்கிய தொடர்பை கூறுங்கள்**

பல்லின கலாச்சாரம் உள்ள நோர்வேயில் எமது இனத்தின் மொழி, கலை, பண்பாடு, இவை அழிந்துவிடாது கட்டிக்காப்பதற் காக ஒரு கலைக்கூடத்தை நிறுவவேண்டிய அவசியத்தை உணர்ந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழு 1992ம் ஆண்டு அன்னைபூபதி கலைக்கூடத்தை நிறுவிய காலமுதல் அதன் அபிவிருத்திக்காக, நிர்வாக உறுப்பினராக இருந்து செயல்பட்டு வருகின்றேன். இக்காலகட்டத்தில் விளையாட்டுப் பொறுப்பாள ராகவும், நூலகப்பொறுப்பாளராகவும், உதவி தமிழ் ஆசிரிய ராகவும் கடமையாற்றி வந்தேன். 2002ம் ஆண்டு இங்கு வாழும் மூத்தோரின் நலன்களைப் பேணுவதற்காக கலைக்கூடத்தால் உருவாக்கப்பட்ட 'மூத்தோர் முற்றம்' என்னும் பிரிவின் பொறுப் பாளராகவும், உதவி விளையாட்டுப் பொறுப்பாளராகவும், உதவி தமிழ் ஆசிரியராகவும் நிர்வாகத்தில் இருந்து பணியாற்றி வருகின்றேன். அன்று 22 மாணவர்களுடன் உருப்பெற்ற கலைக் கூடம் இன்று நோர்வேயின் பல பாகங்களிலும் 17 வளாகங் களைக் கொண்டதாகவும் கிட்டத்தட்ட 1800 மாணவர்களை உள்ளடக்கியதாகவும் இயங்கிவருகின்றது. ஆரம்பகாலத்தில் நோர்வேஜியர்களின் பாடசாலைகளை வாடகைக்கு அமர்த்தி, பிரதி சனிக்கிழமை தோறும் தமிழையும், கலைப்பாடங்களை யும் கற்பித்துவந்தோம். 2001ம் ஆண்டு முதல் சொந்தக் கட்டிடத் தில் எமது கலைக்கூடம் இயங்குவது எமது கலைக்கூட நிர் வாகத்தினர் கண்ட கனவின் ஒரு நிறைவுத் தோற்றமாக பார்க் கிறேன். இக்கலைக்கூடம் இன்று தமிழர் வள ஆலோசனை மையம் என்னும் பெயரில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

**தமிழர் வள ஆலோசனை மையத்தில் இயங்கிவரும் மூத்தோர் முற்றத்தின் பொறுப்பாளராக இருக்கின்றீர்கள், இந்த அமைப்பு குறித்து சற்று விளக்கமாகக் கூறுங்கள்**

எமது இனத்தின் மூத்த பிரஜைகள் தாயகத்தில் இருந்து இடம் பெயர்ந்து மேற்கத்தைய நாடுகளில் வாழும் இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட வாழ்வியலில் அவர்கள் சுமக்கும் தனி மைப்பழுவை குறைக்கும் நோக்கமாக வாரத்தில் ஒருநாள் மூத்தோர்களை ஒன்றுதிரட்டி சந்திக்கவைப்பதும், அவர்களின் பொழுதை இனிதே கழிப்பதற்கு ஆவன செய்வதை நோக்காகக் கொண்டு 2001ம் ஆண்டு ஆரம்பித்த மூத்தோர் முற்றத்தில் யோகாசனப்பயிற்சி, நோர்வே மொழிப்பயிற்சி, கைப்பணிப் பயிற்சி, முற்றத்துப்பந்தல் என்னும் தலைப்பில் கலந்துரை யாடல், சேர்ந்துபாடுவோம், மேடைநிகழ்வுக்கான களப்பயிற்சி, இவற்றோடு மூத்தோரின் பிறந்ததின கொண்டாட்டங்களும் நடைபெறுகின்றன, இவற்றைவிட சுற்றுலா செல்லுதல், அரங்க நிகழ்வுகளை தயாரித்து வழங்குதல், தமிழ் வானொலிக்கு நாடகங்கள் தயாரித்து வழங்குதல், இத்துடன் தமிழ்த் தொலைக் காட்சிக்காக நோர்வே தாய்நிலைக் கலையகத்தினால் தயாரிக் கப்பட்ட குறும்படங்களிலும் மூத்தோர் பாத்திரங்கள்ஏற்று நடித்து



அவை ஒலிபரப்பப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கவை.

**நீண்டகாலமாக நோர்வேயில் வாழுகின்ற உங்களுக்கும் நோர்வேஜிய இனத்தவர்களுக்கும் இடையில் உள்ள சமூக உறவு எப்படியிருக்கின்றது**

நோர்வேஜியருடைய பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், வாழ்வியல்முறை அனைத்தும் வேறுபட்டு இருக்கின்ற போதிலும் நாம் அவர்களை விட்டு விலகி தனிமையாக வாழமுடியாது, அந்தவகையில் பெரும்பாலான விடையங்களில் அவர்களுடைய உதவுதலையும் அனுசரனைகளையும் பெற்று வாழவேண்டிய நிலையில் உள்ளோம். எனக்கு நிறைய நோர்வேஜிய நண் பர்கள் இருப்பதால் அவர்கள்மூலம் எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை மற்ற நோர்வேஜியர்களுக்கு விளக்குவதற்கான வாய்ப்புக்கள் நிறைய உண்டு, அந்தவகையில் சுனாமி மறு வாழ்வுத் தொண்டு நிறுவனங்களுடன் நான் வைத்திருக்கும் நெருங்கிய உறவைக் கூறலாம், சுனாமி நடந்த காலப்பகுதியில் தமிழர் வள ஆலோசனை மையத்தின் பிரதிநிதியாக செயற்பட்டு எமது உறவுகளுக்கான நலன்களைப் பெற்றுக்கொடுத்ததைத் தொடர்ந்து ஒஸ்லோவில் சுனாமி பேரழிவுகளை நினைவுகூரும் முகமாக நோர்வேஜியர்களால் அமைக்கவிருக்கும் நினைவுச் சின்ன மையத்தின் நிர்வாகத்தினரில் ஒருவனாக இருந்து பணி யாற்றி வருகின்றேன், இந்த மையம் 2007 கோடைகாலப் பகுதியில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**உங்கள் கலைப்பயணம் பற்றிக் கூறுங்கள்**

எனது சிறுபராயமுதல் நாடகத்துறையில் அதிக ஈடுபாடு டையவனாக இருந்தேன், இலங்கை வானொலியில் நடைபெற்ற லண்டன் கந்தையா என்னும் நாடகத்தைக் கேட்டு நானும் அப்படி நடித்தேன், எனது பதினைந்தாவது வயதில் மானிப்பாய் அருணோதய நாடக மன்றத்தில் இணைந்து மணிமகுடம் என்னும் நாடகத்தில் பெண்வேடத்தில் நடித்து பலரது பாராட்டைப் பெற்றநாள் முதல் இன்றுவரை வானொலி நாடகம், மேடைநாடகம், குறும்படம், திரைப்படம் போன்றவற்றில் நடித்து வருகின்றேன். 'நோர்வே மாப்பிள்ளை', 'இப்படியும் வாழ் கிறார்கள்', 'பரமர் வந்தார் ஒஸ்லோவிற்கு' என்னும் பல நாட கங்களை எழுதி நெறிப்படுத்தியுள்ளேன். 1990ம் ஆண்டு நோர்வே தொலைக்காட்சிக்காக எடுக்கப்பட்ட 'தாய்நாடு' என்னும் படத்திலும். 2006 பங்குனி ஒஸ்லோவில் திரையிடப்பட்ட நிஜங்கள் என்னும் படத்திலும் நடித்துள்ளேன்.

**இன்று நோர்வேயில் எவ்வளவு இலங்கையர்கள் வாழ்கின்றார்கள்**

1975ம் ஆண்டில் கிட்டத்தட்ட 50 இலங்கையர்கள் இங்கு வாழ்ந்தார்கள், 2005ம் ஆண்டு கணிப்பீட்டின்படி 12288 பேரில் 6340 ஆண்களும் 5948 பெண்களும் வாழ்கின்றார்கள்.

https://tamileelamarchive.com/

# காவல் வேலி

கா.ஜனனி

பொன்னம்மா ஆச்சியின் சேவலைக் கண்டாலே என்னையறியாமலே பயம் தொற்றிக்கொள்ளும். சிறகை படபடவென அடித்து புழுதியைக் கிளப்பியபடி உயரப் பறக்கும். சிலவேளைகளில் இப்படி உயரப் பறந்து கொத்துவதற்காகத் துரத்தும். தான்தான் அந்த ஊருக்கே ராசா என்ற நினைப்பில் உலாவரும். எனக்கு மட்டுமல்ல கலைவாணனைத் தவிர அவ்வூர்ச் சிறுவர்களுக்கு அச்சேவலைக் கண்டால்ப் பயம்தான்.

சாமத்தில் கண்விழிக்கும் நேரமெல்லாம். அச்சேவல் உரத்துக் கூவியபடியே இருக்கும் சிலவேளைகளில் அச்சேவல்ச் சத்தத்தைக் கேட்டு திடுகிட்டு எழும்பியதுமுண்டு.

'சீச்சீ' மற்றைய சேவல்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்குதில்லையே என அச்சேவலை நினைத்து சிலவேளைகளில் நான் சினப்பதுண்டு.

நானும், சின்னையாவின் மூத்தவன். கலைவாணனும் பாடசாலைக்கு ஒன்றாகத்தான் செல்வோம் செல்லும் வழியில் நாயோ, பூனையோ, எதைக்கண்டாலும் குனிந்து கல்லெடுத்து யாராவது வருகிறார்களா என அங்கும் இங்கும் பார்த்துவிட்டு எறியத்தவறமாட்டோம்.

வழமைபோல ஒருநாள் நானும் அவனும் பள்ளிக்கூடம்சென்றுகொண்டிந்தபோது பொன்னம்மா ஆச்சியின் சேவல் சிறகை அடித்தபடி எங்கள் தலைக்கு மேலால் பறந்து வீதியைக் கடந்தபோது. கலைவாணன் ஒரு கல்லெடுத்து... அந்தச் சேவலுக்கு எறியவும்... பொன்னம்மா ஆச்சி... கிணற்றடியில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தவ... கண்டிருக்க வேண்டும். திடுக்கிட்டுப்போய் ஓடிவந்தா...


'டேய் பொன்னம்மா ஆச்சி வாறாவடா?..'

என்று கூறிவிட்டு எட்டி நடக்கத் தொடங்கினான் கலைவாணன்.

'காலங்காத்தால சேவல் உங்களை என்னடா கேட்டது ஆ.. நானும் பாத்து பாத்துக்கொண்டுதான் வாறன்... சும்மா கிடக்கிற நாய்க்கு எறியிறது... வேலியைத் தட்டுறது... சீச்சீ... இனி இப்பிடிக் கண்டனோ... கொப்பரிட்டத்தான் வருவன்... ஓ... சொல்லிப்போட்டன்'

என்று மூச்சை இழுத்துப்பிடித்தபடி

கடற்புலிகளின் துணைப்படையினர்



https://tamileelamarchive.com/



ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள் பொன்னம்மா ஆச்சி. கலைவாணன் எதுக்கும் துணிஞ்சவன். ஆனால் அன்று பொன்னம்மா ஆச்சியின் வார்த்தைக்கு அடங்கித்தான் போனான்.

எதுக்கும் சண்டைபோடும் கலைவாணன் வாய் திறக்காமல் வந்தான். எனக்கே ஆச்சரியமாகவும், அவனைப் பாக்கப் பாவமாயும் இருந்தது.

'என்னடா பேசமால் வாறாய்' என்று அவன் தோள்மீது கையைப் போட்டேன்.

குனிந்திருந்த தலையை நிமிர்த்தினான். இரண்டு கண்களும் சிவந்திருந்தன.

நான் எதுவும் பேசவில்லை. எனது கையைத் தோளிலிருந்து விடுவித்துக்கொண்டபோது. பாடசாலையில் மணி அடிக்கும் சத்தம் துல்லியமாகக் கேட்டது.

இருவரும் நடையை வேகப்படுத்தினோம். தலைமை ஆசிரியர் எல்லா இடத்தையும் நோட்டமிட்டபடி உலாவித்திரிகின்றார்.

ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும் ஒன்றுகூடலுக்காக சென்றுகொண்டிருக்க; நாங்களும் இணைந்துகொண்டோம்.

அன்று படிப்பில் நான் மட்டுமல்ல, கலைவாணனும் கவனம் செலுத்தவில்லை என்பதை கலைவாணனைப் பார்த்துப் புரிந்துகொண்டேன்.

பாடசாலை விட்டுச்செல்லும்போது பொன்னம்மா ஆச்சியின் சேவல் அங்குமிங்கும் பாக்கிறதும் எதையோ கொத்துவதுமாக நின்றது.

ஆச்சி முத்தம் கூட்டிக்கொண்டிருந்தாள். ஆச்சி அந்த குடிசைக்கு வரும்போது யாருமே இல்லாது தனியாளாகத்தான் வந்தாள்...

அவளின் கணவன் கடற்றொழிலுக்குப் போனபோது... கடற்படையால் சுடப்பட்டு அழுகிய நிலையில் சடலம் கரையொதுங்கியதாகவும். அவளின் ஒரேயொரு மகன் வேலைக்காக கொழும்பில் தங்கி இருந்தபோது யூலை இனக்கலவரத்தில் கழுத்து வெட்டிக் கொலைசெய்யப்பட்டதாகவும். அம்மாவுக்கு ஆச்சி கூறியதாக அம்மா ஒருநாள் எனக்கு சொன்னாள்.

அந்த விடயத்தை இன்றுதான் நான் கலைவாணனுக்குக் கூறினேன்.

அவன் அந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்றதும் ஒருகணம் உடைந்துதான் போனான்.

ஆச்சிக்கு கருவாட்டுப்பொரியல் விருப்பம் என்பதை அறிந்துகொண்ட அம்மா
'தம்பி இந்தா இந்தப் பாசலை ஒருக்கா ஆச்சியிட்டக் குடுத்திட்டு வாறியே' என அம்மா தந்த கருவாட்டுப்பொரியலை, இடையில் வழிமறித்த கலைவாணன் பறித்துச் சாப்பிட்டதை நினைத்து இன்று மிகவும் வேதனைப்பட்டான்.

வீட்டை
அண்மித்துக்கொண்டிருக்கும்போது 'கிறீச்' என சைக்கிள் ஒன்று எங்களை இடிப்பதுபோல் வந்தது. அது அப்பாவின் கடைசித் தம்பி மோகன்

'உன்னைத் தேடித்தான் பள்ளிக்கூடம் போனனான். பள்ளிக்குடத்துக்க ஒருத்தரையும் காணேல்ல... இடையில வந்த உங்களை கவனிக்காமல் அங்க போட்டன்.. ஆ... சரி... அங்க இஞ்ச நிக்காம வேளைக்கு வீட்டை போங்கோ' என மூச்சிரைத்தபடி அவசரமாகக் கூறிவிட்டுப்போனார்.

நாங்கள், என்ன, ஏது, என்று கேட்பதற்கிடையில் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறந்தது.

இருவரும் நடையின் வேகத்தைக் கூட்டினோம். நாய்கள் ஊளையிடும் சத்தத்தோடு ஆரோ பெரிதாக அழும் சத்தம் எங்கள் வீட்டுக்கண்மையாக கேட்டது.

எதைக் கண்டாலும் பயப்பட்டுக்கொள்ளும் எனக்கு, இன்னும் நெஞ்சு படபடத்தது.

வீடு நெருங்க... நெருங்க... அம்மம்மா அழும் சத்தம் கேட்டது.
எனக்கு விளங்கிவிட்டது. என்னவோ நடந்துவிட்டது. யாருக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல்... உடம்பெல்லாம் நடுங்க போய்க்கொண்டிருந்தேன்.

'என்ர ராசா போட்டுவாறன் எண்டு சொல்லிப்போட்டுத்தான போனனி, என்ர அப்பு' என்று அம்மம்மா சொல்லி அழுதுகொண்டிருந்தாள்.

விக்கி விக்கி அழுதுகொண்டிருந்த அம்மாவை
பொன்னம்மா ஆச்சி, தன் நெஞ்சோடு அணைத்து அம்மாவின் தலையை தன் சுருக்கு விழுந்த விரல்களால் தடவிக்கொண்டிருந்தாள்.

குழிவிழுந்த அவள் கன்னங்களிலும் கண்ணீர்க்கோடுகள்.

அப்பாவுக்குத்தான் என்னவோ நடந்துவிட்டது என்பதை அறியமுடிந்தது.

என்னைக் கண்டதும் அம்மா இரு கைகளையும் நீட்டியபடி 'உன்ரை அப்பா இனி வரமாட்டார் ஐயா, ... அப்பா வரமாட்டார்.' என்று அழுதாள்.

இழப்பின் அர்த்தத்தை அன்றுதான் முதன் முதலில் நான் புரிந்துகொண்டேன்.

எதுக்கும் அஞ்சாத கலைவாணன் ஒரு கையை நெஞ்சுக்கு குறுக்காக கட்டியபடி, மற்றைய கையை நாடிக்குக் கொடுத்தபடி தலையைக் குனிந்துகொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான்.

கலைவாணனை அப்பாவுக்கு மிகவும் பிடிக்கும் எனக்கு எதை வாங்குகிறாரோ... அதில் ஒரு பங்கு கலைவாணனுக்கும் கிடைக்கும்... எதை அப்பா கொடுத்தாலும் செல்லமாகச் சிணுங்கியபடி வேண்டாம்... வேண்டாம்... என்று சொல்லிக்கொண்டு வாங்கிவிடுவான்...

"பொடி' குடுக்கமாட்டாங்கள் போல கிடக்கு... சொக்கண்ண கதைச்சுப் பாக்கிறன் எண்டு போறாராம்"

'தலையிலதான் பெரிய காயமாம்?..'

'பிடிச்சுக்கொண்டு போகேக்க கும்பிட்டவராம், தன்ரை பிள்ளையும் பொஞ்சாதியும் தனிக்கப்போகுது' எண்டு.

'நாலு நாளுக்கு முன்னமே பிடிச்சுப்போட்டாங்களாம், நேற்றுத்தான் சுட்டிருக்கிறாங்கள்'

அப்பாவின் இறுதி நிகழ்வுக்காக வந்திருந்தவர்கள் மாறி மாறி

https://tamileelamarchive.com/

கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

நான் அழுது... அழுது மிகவும் களைத்துப்போனேன்.
கலைவாணன் என்னை இறுக அணைத்தபடி... தன் மடியில் படுத்தி வைத்திருந்தான்... எனது கன்னத்தால் ஓடிய கண்ணீரால் அவனின் தொடை ஈரமாக இருந்தது. இடையிடையே என் கன்னங்களால் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்தபடி இருந்தான்.

அப்பொழுது படலையடியில் வாகனம் வந்து நிற்கும் சத்தமும், வாகனத்தின் கதவு திறந்து மூடும் சத்தமும் அழுகுரல்களுக்கு இடையில் துல்லியமாகக் கேட்டன. அம்மா எல்லோரையும் முண்டியடித்து ஓடிப்போய் படலையடியில் விழுந்து உருண்டு உருண்டு... அழுதாள்.

பொன்னம்மா ஆச்சி அம்மாவைத் தேற்றுவதற்கு அரும்பாடுபட்டுக்கொண்டிருந்தாள்.

அப்பாவை வெள்ளைத் துணியால் போர்த்தியபடி அப்பாவின் கடைசித் தம்பியும்... என்னோட படிக்கிற தமிழினியின்ர அப்பாவும்.. தூக்கிக்கொண்டு வந்து வாங்கிலில் வளத்தினார்கள்.

எனக்கு தலைசுற்றுவதுபோல் இருந்தது... அப்படியே வாசற்படியில் அமர்ந்துகொண்டேன்...

கலைவாணன்... வெள்ளை வெளீர் என போர்த்தியிருக்கும் அப்பாவை வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான்.

சுவரில் அப்பாவால் மாட்டப்பட்டிருந்த மணிக்கூடு மணித்தியாலத்திற்கு ஒருதடவை, நேரத்தை பறைசாற்றிக்கொண்டிருந்து.

சாமம் இரண்டு மணியைத் தாண்டியிருக்கும்.

'எனக்கு கொள்ளி வைக்க வேண்டிய நேரத்தில உனக்குக் கொள்ளி வைக்க வைச்சிட்டியே, என்ர ஐயா... உனக்கொரு குழைமறைவும் கிடைக்கேல்லையே...'

கனவாக இருக்கக்கூடாதா.. எனத் திடுக்கிட்டு விழித்தேன்...

அம்மம்மா அப்பாவைக் கிடத்தியிருந்த வாங்குக் காலோடு காலை நீட்டியபடி இரண்டு கைகளையும் முழங்காலில் பிடித்தபடி இருந்து அழுதுகொண்டிருந்தாள்.

பொன்னம்மா ஆச்சியின் சேவல், மற்றைய சேவல்களோடு போட்டி போட்டு கூவிக்கொண்டிருந்தது.

பொன்னம்மா ஆச்சியின் சேவல் சத்தத்தைக் கேட்டுத்தான் அப்பா கண்விழிப்பது வழக்கம்.

'அப்பா இனிக் கண் விழிக்கவே மாட்டார்' இதை நினைக்கும்போது என் நெஞ்சு வெடித்துவிடுமாப்போல இருந்தது.

பாவம் அப்பா இரவு பகல் எண்டு பாராமல்... எங்களுக்காக உழைச்சவர்...
சிலவேளைகளில் நடுக்காடுகளுக்க லொறி பழுதாப் போய் நிண்டால் யானைக்குப் பயத்தில லொறிக்கு மேல படுக்கிறதெண்டு அம்மாவுக்குச் சொல்ல அம்மா புருவங்களை உயத்தி உயத்தி ஆச்சரியமாகக் கேட்டுக்கொண்டிருப்பா.

கொழும்பிலிருந்து வரும்போது எனக்கும் கலைவாணனுக்கும் சாப்பிடுற சாப்பாடுகள் நிறைய வாங்கிக்கொண்டு வருவார்...

நாங்கள் இரண்டுபேரும் ஆசைதீரச் சாப்பிடுவோம்.

ஒருமுறை அம்மாவுக்கு சட்டைத் துணி வாங்கிக்கொண்டு வந்தவர், கலரும் பிடிக்கவில்லை, துணியும் அளவு காணாது எண்டு அம்மா சிணுங்கிக் கொண்டிருந்தாள்.

'இதென்ன சின்னப்பிள்ளை மாதிரி, ஆ.. அந்தத் துணி கிடக்கட்டும் அடுத்த முறை போய்வரேக்க நல்ல துணியா வேண்டியாறன்' என்று அம்மாவின் கையைப் பிடித்து அப்பா சொல்ல அம்மா தலையைச் சரித்துச் சிரித்தாள்.

இப்போது அம்மாவைப் பாக்கப் பாவமாக இருந்தது. அப்பாவைக் கிடத்தியிருக்கும் வாங்கிற்கு அருகில் சுருண்டு படுத்திருந்தாள்.

அப்பா என்னிலையும், அம்மாவிலையும் சரியான பாசம். இது அந்த ஊருக்கு மட்டுமல்ல உலகத்துக்கே தெரியும்.

இப்படி எல்லோருடனும் அன்பொழுகப் பழகிக்கொள்ளும் அப்பாவை இனி நான் ஒருநாளும் பார்க்கமுடியாது.

அப்பா ஆசை ஆசையாய் வளர்த்த பசுமாடு அப்பா இறந்தது என்று தெரிந்ததைப் போல் கத்திக் கத்திக் கண்ணீர் வடித்தது...

ஆச்சரியமாகவும், ஆவேசமாகவும் எனக்கு இருந்தது.

அப்பாவின் இறுதிக்கிரியைகள் முடிந்த சிலநாட்களில் பள்ளிக்கூடம் போன கலைவாணன்
மீண்டும் வீட்டுக்கு வரவில்லை.

அப்பாவின் பிரிவு அவனுக்கு உரமூட்டியிருக்கவேண்டும்... ஆதலால்த்தான் இந்த முடிவை அவன் எடுத்திருந்தான்.

அப்பாவின் படத்துக்கு அம்மா சாம்பிராணிப் பத்தியைக் குத்தியபடி படித்துக்கொண்டிருந்த என்னைப் பார்த்தாள். அப்பாவை என்னில் கண்டிருக்க வேண்டும், வெள்ளைக் கோடிட்ட சாரத்துடன் உலவுவதுபோன்ற பிரமை எனக்குள் ஏற்பட்டது. வீடெங்கும் வாசமாய் இருந்தது. அந்த வாசத்தில் அப்பாவைக் கண்டேன்.

அப்பா சிரிக்கும் போது கண்கள் சிரிக்கும். அவர் கன்னங்கள் சிரிக்கும்...

'கொப்பரைப்போல உரிச்சுப் படைச்சு வந்திருக்கிறாய்' நான் பட்டாம்பூச்சியாய்ப் பாடிப்பறக்கின்ற வயதில் என்ர கன்னங்களைக் கிள்ளியபடி அம்மம்மா கூறுவது இப்போது படமாய் விரிந்தது.

என்னைப்போல எத்தினைபேர் தங்கள் தங்கள் உறவுகளை இந்த அந்நியப்படையினரின் அராஜகத்தினரால் பிரிந்திருக்கிறார்கள். ஒன்றா... இரண்டா... எல்லா நினைவுகளும் என்னைப் பிழிந்தெடுத்தன.

பாடசாலைக்கென்று போன கலைவாணன் பின்னாளில் வித்துடலாய்... வீடுவந்தான்.

வித்துடலைக் கும்பிட்டபடி சுற்றிச் சுற்றி சின்னம்மா அழுததை என்னால்த்தாங்க முடியவில்லை.

எல்லா நினைவுகளும் ஒன்று சேர்ந்து என்னைத் தலைநிமிரச் செய்தன.

கலைவாணன் கல்லறைக்குள்.

நான் தேசத்தின் காவல்வேலியாய்.



# மத்தியகிழக்கில் போர்நிறுத்தும் நிலைக்குமா?

■ நவீனன்

உலகின் பார்வையை தன்பக்கம் திருப்பியிருந்த மத்திய கிழக்குப் போர் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது. அமெரிக்காவும் பிரான்சும் சேர்ந்து உருவாக்கிய ஐ.நாவின் பாதுகாப்புச்சபை தீர்மானமான 1701 இன் பிரகாரம் பெரும் மனித அழிவுகள் முடிவுக்கு வந்துள்ளன. ஐ.நாவைப் பொறுத்தவரை இஸ்ரேல், பலஸ்தீனம், லெபனான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான பகையை முடிவுக்கு கொண்டுவர பல பாதுகாப்புச்சபை தீர்மானங்களை (Resolutions: 425-1978, 426-1978, 520-1982, 1559-2004, 1655-2006, 1680-2006, 1697-2006) காலத்திற்கு காலம் கொண்டுவந்துள்ளது. ஆனால் எதுவுமே சமாதானத்தை கொண்டுவரவில்லை; பகைமையும் போரும் வளர்ந்ததுதான் மிச்சம். இதில் பெரும் பங்கு அமெரிக்காவைச் சாரும்; அமெரிக்கா எப்போதும் மத்திய கிழக்கில் சமாதானத்தை விரும்பியது கிடையாது.

கடந்த 14. 08. 2006 அன்று காலை 6.00 மணிக்கு நடைமுறைக்கு வந்த போர்நிறுத்தத்தின் பின் லெபனானின் தெற்குப்பகுதியின் Litani River வரையான 30 கி.மீ தூரம் ஊடுருவியிருந்த இஸ்ரேலின் துருப்புக்கள் வெளியேறத்தொடங்கி உள்ளார்கள். இரு தரப்பும் வெற்றி பெற்றதாக உரிமை கொண்டாடுகின்றன ஆனால் வெற்றி யாருக்கு என்பதே முக்கிய வினா.

ஆடி மாதம் 12.08.2006 அன்று லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகளால் இஸ்ரேலின் எல்லைப்புற நகரமான Shtula மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 8 இஸ்ரேலிய இராணுவத்தினர் கொல்லப்பட இரண்டு வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். 18 வருடங்கள் லெபனானை ஆக்கிரமித்த இஸ்ரேல் 2000 இல் வெளியேறிய பின்னர் நிகழ்ந்த முக்கிய சம்பவம் இது. இஸ்ரேலின் வீரர்கள் விடுவிக்கப்பட வேண்டுமாயின் இஸ்ரேலின் சிறைகளில் உள்ள லெபனானிய சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என நிபந்தனை விதித்திருந்தது ஹிஸ்புல்லா.

துருப்புக்கள் கடத்தப்படுவதும் கைதிகள் பரிமாற்றப்படுவதும் வழமையாக நடப்பவைதான். கடந்த 30 ஆண்டுகளில் 7,000 லெபனானிய கைதிகள் 19 இஸ்ரேலிய துருப்புக்களை விடுதலை செய்வதற்காக விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இஸ்ரேல் லெபனானில் குண்டுத் தாக்குதல்கள் மூலம் ஹிஸ்புல்லா தலைவர்களையும் கடந்த காலங்களில் கொன்றுள்ளது. ஆனால் இம்முறை இஸ்ரேல் பதிலடியாக தரை, கடல், வான் என முப்படைகளையும் கொண்டு லெபனான் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டது.

மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமாக குண்டுகளை வீசியதுடன், விமானத்தளம், துறைமுகம், பாலங்கள், எண்ணைக்குதங்கள், தொழிற்சாலைகள், ஊடகநிலையங்கள், நோயாளிகள் காவு வண்டிகள், வாகனங்கள், ஐ.நா அலுவலகங்கள் எல்லாமே கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டன. அதாவது ஒரு நாட்டின் கட்டமைப்பே முற்றாக சீரழிக்கப்பட்டுள்ளது. 10 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உடமைகள் அழிக்கப்பட்டுள்ளன. ஐ.நாவின் எந்த விதிகளையோ அல்லது எந்த மனித உரிமைகளையோ இஸ்ரேலும் அதன் படைகளும் மதிக்கவில்லை என்பதுடன் ஐ.நா கண்காணிப்பு நிலையும் தாக்கப்பட்டதுடன் 4 பணியாளர்களும் கொல்லப்பட்டார்கள்.

1250 இற்கு மேற்பட்ட லெபனானிய

https://tamileelamarchive.com/

பொதுமக்கள் 34 நாட்கள் நடந்த போரில் கொல்லப்பட்டார்கள், 4054 பேர் காயமடைந் தும் ஒரு மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தும் உள்ளார்கள். கொல்லப்பட்டோரில் அரை வாசிப்பேர் சிறுவர்களும் குழந்தைகளும். உலகளாவிய மட்டத்தில் பெரும் எதிர்ப் பலைகள் தோன்றியதுடன் அரபுநாடுகளும் கொதித்துப்போயின. ஆனால் இஸ்ரேல் யாரையும் மதிக்கவில்லை, அதற்கு துணை யாக அமெரிக்காவும், பிரிட்டனும் தங்களின் ஆதரவை வழங்கியதுடன் நிலத்திற்கு அடியி லான பாரிய பதுங்குகுழிகளை ஊடுருவித் தகர்க்கும் குண்டுகளையும் அமெரிக்கா பிரிட்டன் ஊடாக இஸ்ரேலுக்கு வழங்கியி ருந்தது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை ஈரா னின் அணுஆயுத தொழில்நுட்பத்தை தடுத்து நிறுத்துவதற்கு தனது படையினரை பயன்படுத்த வேண்டியிருப்பின் ஈரான் அதன் கூட்டாளியான ஹிஸ்புல்லாவை கொண்டு இஸ்ரேலை தாக்கலாம் என்ற கருத்து உண்டு. எனவே ஒரு பெரும் தாக்குதலை நடத்தி ஹிஸ்புல்லாவை முற்றாக அழித்து விடவேண்டும் என்று இஸ்ரேலை தூண்டி விட்டிருந்தது.

1982 இல் இஸ்ரேல் லெபனானை ஆக் கிரமித்த போது ஹிஸ்புல்லா என்ற அமைப்பு லெபனானில் இல்லை. அங்கு நிலை கொண்டிருந்த சிரியநாட்டு படைகளுடனும், லெபனானிய இராணுவத்துடனுமான மோத லின் பின் 72 மணிநேரத்தில் முழு லெபனா னையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது இஸ்ரேல். ஆக்கிரமிப்பு படைகளை வெளி யேற்ற என உருவாகிய அமைப்புத்தான் ஹிஸ்புல்லா (Hezbollah). 18 வருட போரில் 1000 இற்கு மேற்பட்ட இஸ்ரேலிய துருப்புக் களும், 250 இற்கு மேற்பட்ட அமெரிக்கத் துருப்புக்களும் பலியாகி இருந்தனர்.

இஸ்ரேல் மத்திய கிழக்கில் அங்கிகரிக் கப்படாத ஒரு குட்டி அணுவாயுத வல்லரசு. அதன் தரைப்படையில் 141,000 வீரர்களும் (பதினாறு பிரிவுகள்) விமானப்படையில் 36,000 வீரர்களும், கடற்படையில் 9,500 வீரர்களும். ஆக மொத்தம் 186,500 முழு நேரப் படையினர் இருக்கிறார்கள். மேலதிக மாக 427,500 பின்இருப்பு (Reservists) படை யினரும் உள்ளனர். இவற்றுடன் அமெரிக்கா வின் உயர்தொழில் நுட்ப ஆயுதங்களையும் கொண்டுள்ளது.

சயிட் நசரல்லாவை (Seyyed Hassan Nasrallah) தலைவராக கொண்ட ஹிஸ்புல் லாவை பொறுத்தவரை 3000-5000 போராளி களையும், 15,000 பின்இருப்பு படையின ரையும் கொண்டுள்ளது. இவை தவிர இரு அமைச்சர்களுடன் கூடிய 14 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளதுடன் தெற்கு லெபனானில் மக்களிடம் மிகப் பெரும் ஆதரவையும் கொண்டுள்ளது. ஆயு தவலுவில் இரண்டாம் உலகப்போரில் சோவியத்தினால் வடிவமைக்கப்பட்ட கதுஸ்சா பல்குழல் ஏவுகணை செலுத்தி களின் மறுசீரமைக்கப்பட்ட வடிவமான 22-35 கீ.மீ தூரவீச்சுடைய ஏவுகணைகள் (122mm Katyusha rockets) தான் முக்கிய ஆயுத பலம். எனினும் குறைந்த அளவில் ஈரான், சிரியா நாட்டு கப்பல் எதிர்ப்பு, தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளுடன் விமான எதிர்ப்பு ஆயுதங் களையும் கொண்டுள்ளது. ரடார் மூலம் வழிநடத்தப்படும் 60 கீ.மீ தூரவீச்சுள்ள ஈரான் நாட்டு கப்பல் எதிர்ப்பு ஏவுகணை களும் (C-802) உள்ளது.

## கதுஸ்சா பல்குழல் ஏவுகணை

இவற்றை எல்லாம் தனது உயர் தொழில்நுட்ப ஆயுதங்களினாலும் குறி தவறாத ஏவுகணைகளாலும் அழித்துவிட





லாம் என எண்ணிய இஸ்ரேலுக்கு ஹிஸ்புல்லாவின் கெரில்லாப் போர் முறையும், பாதுகாப்பு அரண்களும், நிலத்தடி மறைவிடங்களும், கனரக ஆயுதநகர்த்தலும் பெரும் சவாலாக அமைந்து விட்டது. 1982 இல் 72 மணிநேரத்தில் லெபனானை கைப்பற்றியது போல இம்முறை முடியவில்லை. இஸ்ரேலின் தாக்குதலுக்கு பதிலடியாக போர் ஆரம்பித்த இரு வாரங்களில் ஏறத்தாள 1,500 பல்வேறு வகையான ஏவுகணை தாக்குதல்களை ஹிஸ்புல்லா மேற்கொண்டு இருந்தது. இவை இஸ்ரேலின் வடபகுதி நகரங்களை தாக்கியதுடன் அதன் மூன்றாவது பெரிய நகரமான கய்பா (Haifa) நகரமும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானது.

தனது விமானத்தாக்குதலால் நிறுத்த முடியாத ஏவுகணை தாக்குதலை நிறுத்த தரைப்படையை களம் இறக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது இஸ்ரேல். ஆனால் களமிறக்கப்பட்ட 30,000 தரைப்படையினரால் எதிர்பார்த்தது போல விரைவாக முன்னேற முடியாது போனதுடன் பெரும் உயிரிழப்புக்களையும் சந்திக்க நேர்ந்தது. 06 இற்கு மேற்பட்ட கள முன்னணி தாங்கிகளையும் 03 உலங்குவானூர்திகளையும் 116 துருப்புக்களையும் இழந்தது இஸ்ரேல். ஆனாலும் ஹிஸ்புல்லாவின் ஏவுகணை தாக்குதல்கள் நின்றபாடில்லை.

## லெபனான் நகரத்தின் மீதான இஸ்ரேலின் விமானத்தாக்குதல்

ஹிஸ்புல்லாவின் ஏவுகணைகளால் உள்ளூரில் இடம் பெயர்ந்த 5 லட்சம் மக்களால் எழுந்த நெருக்கடிகளும், தனது துருப்புக்களின் இழப்பும் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய கட்டாயத்தை இஸ்ரேலுக்கு ஏற்படுத்திவிட்டது. ஐ.நாவையோ அல்லது ஏனைய நாடுகளையோ மதிக்காது தனது முழுவலுவையும் பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்ட இஸ்ரேல் ஏன் பணிந்தது என்பதற்கான காரணிகளாக பின்வரும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

* கெரில்லாப் போரை எதிர்கொள்ள போதுமான படைவளம் இஸ்ரேலிடம் இல்லாதது.

* இஸ்ரேல் அதன் பின்இருப்பு படையிலேயே பெருமளவு தங்கியிருக்கிறது ஆனால் அவர்களின் போரிடும் திறன் குறைந்துபோய் உள்ளமை.

* ஹிஸ்புல்லாவின் ஆயுதவலு, கள நிலை பற்றிய தவறான கணிப்பு

**தற்போது நடைமுறையில் உள்ளது ஒரு தற்காலிக அமைதிதான் இதை ஒரு முழுமையான சமாதானமாக மாற்ற உலகமும், ஐ.நாவும் இன்னும் நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளது. இந்த போர் லெபனான் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தி இருந்தாலும் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் பலத்த ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது என்பது தான் யதார்த்தம்.**



* போருக்கான உலக ஆதரவை திரட்டத்தவறியமை.

* இஸ்ரேலின் விமானத்தாக்குதலுக்கும் போர் முறைகளுக்கும் ஏற்ப ஹிஸ்புல்லாவின் தாக்குதல் உத்திகளும் கனரக ஆயுத நகர்த்தலும் அமைந்தவை.

* தங்கள் படைகள் மீது இஸ்ரேலிய ஜெனரல்களின் அதீத நம்பிக்கை.

* ஹிஸ்புல்லாவின் ஏவுகணை தாக்குதலை நிறுத்தமுடியாததால் உள்ளூரில் எழுந்த நெருக்கடி.

தற்போது ஐ.நாவினால் கொண்டுவரப்பட்ட போர்நிறுத்தம் தொடர்பான தீர்மானத்தில் பலகுறைபாடுகள் உள்ளதுடன் இஸ்ரேலுக்கு கூடியளவு அனுகூலங்கள் உள்ளதாக அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்ட போதும் இஸ்ரேல் கைப்பற்றிய இடங்களில் இருந்து வெளியேற வேண்டும் என தீர்மானத்தில் கூறப்பட்டதும் இஸ்ரேல் வெளியேறியதும் முதல் முறையாக அரபு உலகிற்கு கிடைத்த வெற்றியாகவே கொள்ளப்படுகிறது.

போர்நிறுத்தம் ஏற்படும்வரை ஹிஸ்புல்லாவின் ஏவுகணைத் தாக்குதலை நிறுத்த முடியாது போனதும் இஸ்ரேலுக்கு பெரும் பின்னடைவாகவும் அதன் உயர் தொழில் நுட்ப ஆயுதங்கள் மீதான நம்பகமற்ற தன்மையையும் உள்ளூரிலும் உலகிலும் ஏற்படுத்தி இருந்தன. அதாவது போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு முதல் நாளும் 250 ஏவுகணைகள் இஸ்ரேலின் நகரங்களை தாக்கியிருந்தன, மொத்தமாக 4,000 ஏவுகணைகள் போரின் போது ஏவப்பட்டு உள்ளது. பாடசாலை ஆசிரியரும், இஸ்ரேலின் பின்இருப்பு படைவீரனும் லெபனான் சமரில் பங்குபற்றியவருமான அவி குபரா என்பவரின் கருத்து இது 'நாங்கள் மக்களையே கொன்றோம், தவறுதலாகவும் குறிவைக்கப்பட்டோம், எங்களால் ஹிஸ்புல்லாவின் தாக்குதிறனை குறைக்க முடியவில்லை, கடத்தப்பட்ட எமது வீரர்களையும் விடுவிக்க முடியவில்லை, நாம் தோற்று விட்டோம்'.

ஐ.நாவின் பாதுகாப்புச்சபை தீர்மானமான 1701 இன் படி ஹிஸ்புல்லாவின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அதற்கு ஹிஸ்புல்லா என்ன சொல்கிறது 'இஸ்ரேல் எந்த ஐ.நாவின் பாதுகாப்புச்சபை தீர்மானத்தையும் மதித்ததோ நடைமுறை படுத்தியதோ கிடையாது நாம் ஏன் நடைமுறைப் படுத்த வேண்டும்'

அதாவது தற்போது ஏற்பட்டுள்ள போர் நிறுத்தம் மீண்டும் ஒரு போருக்கே வழி வகுக்கப் போகிறது. அதை உறுதிப்படுத்துவது போலவே போர்நிறுத்தம் ஏற்பட்டு 6 நாட்களுக்குள் கடந்த சனிக்கிழமை (19.08.2006) தெற்கு லெபனானின் ஹிஸ்புல்லாவின் கட்டுப்பாட்டு பகுதியான Baalbek இல் தனது விசேட படையினரை உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. எனினும் ஹிஸ்புல்லாவின் எதிர்த்தாக்குதலால் இஸ்ரேலின் தாக்குதல் தோல்வியடைந்ததுடன் 01 இஸ்ரேலிய விசேட படையினனும் 03 ஹிஸ்புல்லாக்களும் கொல்லப்பட்டு உள்ளனர். சிரியாவில் இருந்து ஹிஸ்புல்லாவின் ஆயுதக் கடத்தலை தடுக்கவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

எனவே தற்போது நடைமுறையில் உள்ளது ஒரு தற்காலிக அமைதி தான்; இதை ஒரு முழுமையான சமாதானமாக மாற்ற உலகமும், ஐ.நாவும் இன்னும் நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளது. இந்தப் போர் லெபனான் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தியிருந்தாலும் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் பலத்த ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது.



https://tamileelamarchive.com/


# மரணத்துள் வாழ்க்கை என்பது



● சுகிர்தராஜன்

யூன் 1990ல் நினைத்துப் பார்க்கின்றேன் கிட்டத்தட்ட ஒரு வருடமிருக்கும் என் அம்மா அப்பா தம்பிமார் தங்கையைப் பாத்து இன்னும் ஒருவாரத்துக்குள் அவர்களைப் பார்க்கப் போகிறேன் என்ற ஆதங்க மேலீட்டினால் ஆசுவாசப்பட்டேன் பாக்கி இருக்கின்ற ஐந்து நாள்களும் விரைவாக நகராதா என்ற எண்ணம் மீண்டும் மறையும் இந்தச் சந்தோச சாம்பிராஜ்ஜியம் என் மனதுக்குள் ஆட்சி அமைத்த காலம் நீடிக்கப்படவில்லை, அந்தச் செய்தி என்னை உலுக்கிவாட்டியது, இன்பகரமான வரிகளை வாரிக்கட்டிக் கொண்டு வரும் சுகுணாவின் கடிதத்தில் தான் அந்தச் துன்பச்சுமைகள் நிறைந்த செய்தியும் வந்தது. சுகுணா என்கூடப் படித்தவள் அவள் என்னைக் காதலித்தாள் என்பதைவிட வழிப்படுத்தியவள் என்பதே மிகப் பொருத்தமாயிருக்கும். அதனால் தான் அவள் கடிதங்களை ஆவலோடு எதிர்பார்ப்பேன். ஆனால் இன்றைய கடிதம் வழக்கத்துக்கு மாறாக.... என் உயிரைக்குடிக்க வந்ததா? “உங்கள் தம்பியைக் கொன்றுவிட்டார்கள்” (என் தம்பியின் பெயர் சுகுணன்) “அவரோடு சேத்து பத்தொன்பது பேர் டயர் தீயில் சாம்பலாய்...” கடித வரிகள் நீண்டு மெலிந்தன என் மனம் அறுந்து மீண்டது கடன் பட்டவன் நெஞ்சம் போல கலங்கிய இதயத்தைவிட பலமடங்கு என் இதயம் கலங்கியதே என்னை அன்றி வேறுயாரும் அறிவதற்கு நியாயம் இல்லை. ஒரு வேளை என் தம்பியின் ஆத்மா என்னைச் சூழ்ந்திருந்தால் புரிந்திருக்கும் - புரிந்திருப்பான். குமுறிக் கொண்டு வந்த அழுகையை வலிந்து கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலையில் அப்போது நான் இருந்தேன். இடையிடையே என் கண்கள் பனித்துக் கொண்டிருந்ததுக்கு ஈரமாகிய கைக்குட்டையே சாட்சி. மெல்லவும் முடியாத.... விழுங்கவும் முடியாத நிலை.... என்பதற்கு இப்போது தான் விளக்கம் கிடைத்தது. வீடு செல்ல வேண்டும் எனும் கடப்பாடு உச்சந்தலைவரை ஏறிற்று. விடுமுறைக்கு அனுமதி பெறும் பரப்பரப்பு என்கட்டுப்பாட்டை மீறிற்று. எனது கையில் இருப்பதையே கொண்டு போய் அந்தக் கயவர்கள் மீது சரமாரியாகப் பொழிந்தால் கூட என் ஆத்திரம் அடங்குமா... பாசமுள்ள தங்கை ரூபா குட்டித்தம்பி சுபா இளையவன் சுவோன் பாலூட்டி சீராட்டி வளத்த பெற்றோர்.... யாவரது நினைவுகளும் என் கண்முன் நிழலாடிக் கொண்டிருந்தன. என் ஆத்திரம் -ஆவேசம் அவர்களது எதிர் காலத்தை கனியமாக்கினால்... அந்த இடத்தில் தருமரையும் விஞ்சிய பொறுமை என்னைத் தடுத்தது. எனக்கு நேர் இழையவன் தான் சுகுணன் ஆனாலும் ஊரில் அவனுக்கு என்னைவிட அறிமுகம் கூடத்தான்... எல்லாரோடும் சகசமாய் பழகுவான் தம்பி சைக்கிள் கடையில் வேலை செய்து தந்த காசில் தான் ரியூசன் படித்தேன் என்று சொல்வதற்கு வெக்கப்படவில்லை. ஊரில் எங்கள் சொந்த பந்தங்களெல்லாம் பொய் முகங்கள். எங்கள் நகரங்களே வயிற்றுக்கு ஆதராம் தம்பி மூலமாக அவர்கள் சிலரும் அறிமுகப்பட்டது மறக்க முடியாத சம்பவம் எனக்கு இளையவன் என்றாலும் அவனிடமிருந்த நல்ல பழக்க வழக்கங்களை பழகியிருக்கிறேன் என்பது உண்மை இத்தனைக்கும் அவன் ஒன்றும் பெரிதாகப் படித்ததில்லை எட்டோ ஒன்பதோ ஞாபகத்தில் இல்லை. படிக்கும் போது கணித பாடத்தில் மாக்ஸ் குறைவாக எடுத்ததற்காக பிரம்பால் அடித்த சின்னத் தம்பி போடி சேறுக்கு கல்லால் எறிந்து விட்டு வீடு வந்ததோடு பாடசாலை வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டவன் என்பது மட்டும் ஞாபகம் குடும்பத்த கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! அந்த நாள்களில் அம்மா இப்படித்தான் அவனை திட்டித் தீப்பாள் அதுகும் நளவடைவில் தேய்பிறையானது “அவனுக்குப் படிப்பு ஏறாது அந்தக் கதையை விட்டு வேற அலுவல் இருந்தால் பாருங்க” அப்பாவின் சப்போட்டில் தப்பிக் கொள்வதால் அப்பா மீது அளவு கடந்த பண்பும் மரியாதையும் வைத்திருந்தான் பின்னுக்கு அவன் மட்டுந்தான் என்னை கவனிப்பான் “உங்கள் ஒருதரையும் நம்பஇயலாது” அப்பா பொய்சொன்னாரோ என்னவோ இப்படிச் சொல்லும் போதெல்லாம் தம்பி மீது பொறாமையோ கோபமோ வருவது உண்டு. தப்பித் தவறி ஏதும் பிழை செய்து விட்டான் என்றால் துரத்தி துரத்தி அடிக்கும் போது, இருந்த ஆத்திரங்களை தீர்த்துவிட்டமாதிரி ஒரு சந்தோசம் தம்பிக்கு அடித்து விட்டு தனிமையில் நான் கண்கலங்கும் போதுதான் அவன் மீது எனக்கு இருந்த ஈடுபாட்டையும் பாசத்தையும் என்னால் உணர முடிந்தது. அதற்கு மேலாக ஒரு நாள் நடந்த சம்பவம் தம்பி மீது மேலும் பாசத்தை ஊட்டி விட்டது. விளையாட்டொன்றின் போது எனக்கும் இன்னொருவனுக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் பிற்பாடு தெருவில் நின்று கொண்டு என்னைப்பற்றி அவதூறாகப் பேசியதை கேள்விப்பட்ட தம்பி யாருக்கும் தெரியாமல் போய் அவனுக்கு இடக்கையால் விளாசிப்போட்டு வந்ததை பின்பு நான் அறிந்து நெகிழ்ந்து போனேன். “ஏன்டா! என்ன, ஏது, என்று விசாரிக்காமல் அடிச்சநீ, அண்ணாச்சியைப் பற்றி கூடாமல் பேசினால் பிறகு என்னத்த விசாரிக்கிற” சாத்திப்போட்டு வந்தான் அப்பா கேட்டதற்கு அவன் சொன்ன பதில் என் மனதை நெருடியது இந்த சம்பவத்தை அறியாமை என்பதா? என்மீது அளவு கடந்த பாசம் என்பதா? என்னைக் கேட்டால் அறியாமை என்பது இரண்டாம் பட்சமே! பாசக் கீற்றுகளின் பிணைப்பு அணுக்களின் சேர்க்கையில் உருவான அணுக் குண்டு போல சக்தி வாய்ந்தது என்று யாரோ சொன்னது என் ஞாபகத்தில் மீண்டும் மறைந்தது அம்மா அப்பாவுக்குத் தெரியாமல் சாமித்தம்பி மாமாவின் ரீ.வி.கேட்ட வகையில் படம் பாக்கச்

https://tamileelamarchive.com/



சென்று இருவரும் வாங்கி கட்டிய போது அத்தனை வலியையும் தாங்கிக் கொண்டு.. "அண்ணாச்சி தான் கூட்டிப் போனான்" என்று. மறந்து கூடச் சொன்னது கிடையாது பசுமரத்தாணி போல என்மனதில் பதிந்த அந்த நினைவுகள் மீட்கப்படும் போது வழியோரம் அருவி பாயும். சல்யூட் அடித்துக் கொண்டு குட்மோனிங்சேர் என்ற போதுதான் பார்வையை என்மீது திருப்பினார் அந்த அதிகாரி மரியாதையை மனிதாபிமானத்தை நாகரிகத்தைப் புதைத்து விட்டு வந்தவர் போல கையில் இருந்த விடுமுறைப் பத்திரத்தையும் கண்களில் பனித்த நீர்துளிகளையும் மாறி மாறி பாத்த நேரம் அவ்வளவும் நிசப்தமானது ஆயினும் அவர் மனம் இளகியதாகப் படவில்லை "ஐ மொக்கதா நிவாடுதா" (என்ன லீவா) அதிகாரத் தோரணை ஆணவத் திமிர் இரண்டும் கலந்த சிங்கத்தின் கர்ச்சிப்புக்கு என்னிடமிருந்து எந்தப் பதிலும் வெளிப்படவில்லை ஒரு தலை அசைவைத் தவிர "சேர் என் தம்பி செ...செ... செத்துப் போயிற்றான் (சிங்களத்தில் பேசப்பட்டவை) எப்படி, இனந்தெரியாதவர்கள் கொன்று விட்டார்களாம். உனக்கு எப்படித் தெரியும். கடிதம் வந்தது என்னிடமிருந்து கடிதம் உருவப்பட்டு சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. காதல் வரிகளையும் அணுஅணுவாக ருசித்துப் பாத்ததில் அவர்களுக்கு பரம திருப்தி என்மனம் கொதித்தக் கொண்டிருந்தது சொல்லாமல் கொள்ளாமல் கையில் இருந்ததோடு ஓடிப் போயிருக்கலாம். பல்வேறுபட்ட அவர்களது விசாரணைகளையும் சகித்துக் கொண்டிருந்த எனக்கு ஏமாற்றம் மட்டுமல்ல கடைசியில் அவர் சொன்ன பதில் என் பொறுமையை ஒரு தரம் சோதித்துப் பாத்தது. "செத்தவன் செத்தவன்தான் நீபோய் உயிர் எழுப்பப் போவதில்லை இப்ப அங்காலப்பக்கம் பிரச்சனையாகவும் கிடக்கு. எதற்கும் வெள்ளிக்கிழமை போ". தீயில் பட்டு வெடித்த கண்ணாடித் துண்டு போல என்மனம் சிதறிப்போனது போலும் பொறுமை எல்லை மீறவில்லை என்னைத் தாண்ட வில்லை. பொறுமையின் விளிம்பில் நின்று கொண்டு மூன்று நாளை மூன்று வருடமாக கழித்துக்கொண்டிருந்தேன் அதுவும் ஆமை வேகத்தில். மூன்று நாள்களும் ஆகாரம் ஆதரவு அற்றதாய் இருப்பினும் ஊர் செல்லும் வரை எனக்கு ஒரு விசை தேவைப்பட்டதை நான் மறுக்கவில்லை. கோட்டை புகையிரத நிலையத்தை நோக்கி உருக்குலைந்து மெலிந்த மேனியை ஏதோ யாரோ நகர்த்துவது மட்டும் புலனாகிறது. என் ஆத்மா ஜீவன்களை வாரி அணைத்து மனக்குமுறல்களை கொட்டித்தீர்க்கும் பயணம் அது தம்பி உன்னை வெறுத்தவர்களை நான் கண்டதில்லையே! கோவில்களுக்காக இரவுபகலாக நின்று உழைப்பாயே! சாவீடுகளுக்கு உன்னை அர்ப்பணித்து சேவை புரிவாயே! நல்லவர்களை இறைவன் வாழவிடமாட்டான் இன்னும் நடைபோடும் அநியாயங்களையும் வதைகளையும் பாக்க வேண்டும் என்பதற்காக பலரை விட்டு வைத்திருக்கின்றான். " வீட்டு வேலையை செய்யாமல் ஊரார் வேலை எல்லாம் செய்து திரிகிறான்" என்ற அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அடிக்கடி சண்டை எழுப்பும். பக்கத்துத் தெரிவில் இருக்கும் அம்பாறை அப்பாவின் கடையில் தேவையில்லாமல் போய் நிற்பான். பொறுக்க மாட்டாமல் எத்தனை நாள் அடித்துப் பாத்தேன்- திருந்தினானா தம்பியால் சில வேளைகளில் பல சிரமங்களை அனுபவிக்க நேரிடும் ஆயினும் பொருட்படுத்துவதற்கில்லை. தம்பி இறந்த செய்தி கேட்டு பானுமதி எப்படித்துடித்திருப்பாள்? நான் நினைக்கின்றேன் அவனது முதலும் கடைசியுமான காதலில் பானுதான் தம்பியின் காதல் சமாச்சாரம் கேள்விப்பட்டாலும் முதலில் அவ்வளவாக

https://tamileelamarchive.com/

நான் நம்பவில்லை. ஒருநாள் பக்கத்துவீட்டு பூரணி அக்காவின் வீட்டுக்குள் தம்பியும் பானுவும் கதைத்துக் கொண்டிருந்ததை தற்செயலாக பார்க்க நேரிட்டது. "டேய் இந்த வயசில உனக்கு காதல் கத்தரிக்காய் எல்லாம் தேவைதானா கேட்பது மட்டுமல்லாமல் இரண்டு கன்னத்திலும் இரண்டு அறைவிடுவதுக்கு எண்ணம் தோன்றவில்லை" இளம் உள்ளங்களை புரியாத அண்ணன் மார் மாதிரி "மற்றவங்கட அண்ணன்கள் மாதிரி அல்ல எங்கட அண்ணாச்சி"..... தம்பி சொன்னதாக பிற்காலத்தில் காதில் விழுந்தது நான் தலை மன்னாரில் வேலை செய்யும் போது அம்மாவுக்குத் தெரியாமல் கடிதம் போடுவான். "பானுவுக்கு துணிவாங்கி கொடுக்கணும் கோவிலுக்குப் போக காசு கொடுக்கணும் அனுப்புங்கள் வீட்டுக்குத்தெரியாமல் காசு அனுப்பி நிறைவேற்றப்படுவதில் அவனுக்குச் சந்தோசம் இதை எல்லாம் நினைக்கும் போது பானுவால் எப்படித்தாங்கிக் கொள்ளமுடியும்? வீட்டுக்குத் தெரியாமல் காதலித்தாள் அழுகையை அடக்கமுடியாமல் அவஸ்த்தைப்பட்டிருத்தாள் மனம் வெதும்பி வெடித்திருக்கும் எனது காதலுக்கு தூபமிட்டவன் என்ற வகையில் தம்பியைப் பாராட்டவும் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன் "அண்ணாச்சி... என்ன நடந்தாலும் சிவக்கொழுந்தை நீங்கள் கைவிடக்கூடாது பாவம் அவன்! சந்தர்ப்பம் கிடைக்கின்ற நேரம் எல்லாம் சிவக்கொழுந்தின் சார்பாக எதையாவது சொல்லிக் கொண்டே இருப்பான். தம்பியின் வேண்டுகோளுக்காவது என்காதலியை கலியாணம் பண்ணவேண்டும் என்ற எண்ணம் என்னில் வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. அத்தனை குணம் உள்ளவனுக்கு இப்படி ஒரு தண்டனையா? ஆலம் விழுதுகளும் பனைமட்டைகளும் அவன் உடம்பை பதம் பார்த்து இருக்கும் பூட்ஸ் கால்கள் முகம் எல்லாம் மேய்ந்திருக்கும் எப்படி எல்லாம் அழுது புலம்பியிருப்பான் புழுவாய் துடித்திருப்பான் கோபத்தில் நான் அடிப்பதையே தாங்கமட்டானே! அந்த அரக்கர்களின் கோர இடியை எப்படி?.. "கொழும்பில் இருந்து வந்தவனை சும்மா கொஞ்ச நேரம் இருக்க விடுங்க, சும்மா அதையும் இதையும் கதைத்துக் குழம்பாம" இங்கு வந்து இருந்த பெரியவரின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்க்கின்றேன். கன்னங்களை துடைத்தவனாக... அப்போது என்வீடு மீண்டும் ஒரு சாவீடாக மாறியிருந்தது. வந்தவர்கள் ஒவ்வொரு விதமாகப் பேசிக் கொண்டு இருந்தார்கள். தம்பியின் சம்பவம் ஒரு சிறு கதையாக ஆளாளுக்கு வாய்க்கு வந்த படி கோர்க்கப்பட்டு கொண்டு இருந்தது. அப்பா அழுகையை அடக்கிக் கொண்டு வெளிப்பக்கம் பாலமரத்துக்கு கீழே தன்னை மறந்திருந்தார் சோகம் நிறைந்த வாடலாக முகம் அம்மா ஓய்ந்தாகத் தெரியவில்லை. இளைய தம்பி சுருங்கிய விழிகளோடு என்னருகே... குட்டித் தம்பியின் தங்கையும் விம்மலை அடக்கமுடியாமல் என்மடியில்... "ஏழைகளிட்டை காசு வாங்க விடமாட்டான். நல்லபெடியன்!" " காசுக்காற ஆக்களெண்டா குடுக்கத் தானே வேணும்" வேனுகளில காசு அறவிட்டு கோயிலுக்கு அரைவாசியைக் கொடுத்தாலும் மிச்சம் எல்லாம் அவங்களிட்ட... ம் நல்லவங்களுக்கு காலமில்லை!" "அவங்கட ஆக்கள் செத்தா கொண்டவன தேடிக் கொள்ள வேண்டியது தானே சும்மா புடிச்சுத்துப் போனவங்கள அநியாயமாக டயர் போட்டு... "ஒண்டா இரண்டா பத்தொன்பது பேர்" "பெரியவனுக்கு விடத்தானம் விருப்பம். இடையில் நம்மட வாலுகள் கொஞ்சம் ஒட்டித்துக் கிடக்கே அதுகள் தானாம் இதுக்கு காரணம். நாசமப் போவானுகள் திட்டாதவர் யாரும் இல்லை. அப்பாவும் நானும் வேறுவேறு இடங்களில் வேலை செய்ததால் தம்பியை கண்காணிக்க முடியாத நிலை ஏற்பட்டதால் வந்த வினை இது என்பதை உணர முடியாமல் இல்லை. நடந்து முடிந்த துன்பகரமான நிகழ்வு அசைபோட்டுக் கொண்டிருந்தது ஊருக்காக வாழ்ந்தவன். இன்று ஊரிலை உடலும் ஊருக்கும் சொந்தமில்லாமல். இப்படி எத்தனை ஜீவன்கள் நம் நாட்டில், சுகுணன் அகப்பட்டதால் பெரும்பாலானோர் கலங்கித் தான் போனார்கள் சிலரின் கற்பனைகள் வேறாக இருந்ததுண்டு ஒரு வேளை முகமூடி அணிந்து வந்ததால். அவன் தலை அசைவுகளில் தான் தம்பிள்ளைகளின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் அஞ்சியதோடு தலைமறைவுகளும் இடம் பெற்றன ஆனால் அவன் தியாகி. அவன் தீபம் அவனை யாரும் திட்டித்தீர்த்திருக்க மாட்டார்கள் நிச்சயம் அவன் ஆத்மா சாந்தியடைந்திருக்கும். தம்பி உன்னை நான் அறிந்ததை விட என்னை நீ அறிந்திருந்தாய். பத்துவருடங்கள் மறைந்து விட்டன ஆனாலும் மனம் கனத்துக் கொண்டு தான் இருக்கின்றது. உன்வெற்றிடத்தை நிரப்ப எந்த தம்பிகளாலும் இயலவில்லை நீ இன்னும் என்னில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றாய் உன்னைப் போல இல்லாவிட்டாலும் சிறு துரும்பிலாவது தேசத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் இல்லையேல் நாளைய விடியலின் போது நான் வெட்கித் தலைகுனிய நேரிடும் நீ விடியலின் போது வாழ்ந்து கொண்டு இருப்பாய் பிரகாசமாய். ஒரு சின்ன வேண்டு கோள் (உன்கவனத்துக்கு) உன்பிரிவோடு என்தொழிலுக்கு சல்யூட் அடித்துவிட்டேன் உன்னைக் காப்பாற்ற முடியாத தொழில் அவர்கள் வரிசையில் எனக்குப் பச்சை குத்தப்பட்ட தொழில். இருப்பதை விட இழப்பதே மேல். இத்தனை இழப்பின் சுமைகளோடு பிற்பட்ட கால வேதனைகளும் சுமந்தேன். உனது பானு திருமாலோடு ஒட்டிக் கொண்டாள் எனது சிவக் கொழுந்து யோகனைக் கட்டிக்கொண்டாள் மன்னித்து விடு உன் ஆசையை நிறைவேற்ற முடியாத பாவியாக நான். ஒருவேளை நீ இருந்து இருந்தால் இந்தப் பெண்களே இப்படித்தான் எனச் சலித்திருப்பாய். அங்கே நீயும் இங்கு நானும் இன்னும் தனிமையில்..




இக்கதை திருகோணமலையில் ஒட்டுக்குழுக்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சுகிர்தராஜனால் எழுதப்பட்டது எஸ்.எஸ் ஆர் என்றும் ஊடவியலாளர்களால் அன்பாக அழைக்கப்படும் எஸ்.சுகிர்தராஜன் ஒரு சிறுகதை எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட போது அவர்கள் தலையில் மிக நெருக்கமாக வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதை இவரால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.





https://tamileelamarchive.com/




# ஒரு இன அடையாளத்தின் பரிணாம வளர்ச்சி

## சிறீலங்காவின் தமிழர்கள் கி.மு 300-கி.பி 1200 வரை

ஆக்கியோன்:- பேராசிரியர் கே.இந்திரபால

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

# THE EVOLUTION OF AN ETHNC IDENTITY

THE TAMILS IN SRILANKA 300 .BCE TO C.1200 CE — PROF K.INDIRA PALA



பேராசிரியர் இந்திரபாலா முன்வைக் கும் ஆறு முக்கிய அடிப்படைக்கருத்துக்க ளும் முடிவுகளும் :-

1) தென் இந்தியாவும் இலங்கைத்தீவும் ஒரே கலாச்சாரப் பிராந்தியமாக அமைந்தன கலை, மொழி, தொழில்நுட்பம், மதம் ஆகிய னவற்றின் போக்கும் வரவும் இரு வழியாக நடைபெற்றன. இரு தரைப்பரப்பாக பிரிந்த பின் பாக்குத்தொடுவாயும் மன்னார் வளைகுடாவும் இரு தரைப்பரப்பு மக்களை யும் ஒன்றிணைக்கும் ஊடகங்களாகச் செயற் பட்டன. இலங்கையின் நீர்த்தேக்கத் தொழில் நுட்பத்தை இரு பகுதி மக்களும் ஒன்றி ணைந்து உருவாக்கினர்.

2) வரலாற்றுக்கு முந்திய காலப்பகுதி யின் மெசோலிதிக் எனப்படும் மத்தியபெருங் கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் பிற்சந்ததி யினராகச் சிங்களவர்களும் தமிழர்களும் இடம் பெறுகின்றனர். இலங்கைத் தீவின் எல்லாப் பாகங்களிலும் இந்த மூதாதையர் கள் வாழ்ந்தனர்.

3)மேற்கூறிய மெசோலிதிக் கால மூதா தையர்கள் வேறுபட்ட பல மொழிகளைப் பேசினார்கள். அவை யாவும் தெற்கு மற்றும் மத்திய இலங்கையில் பிராகிருத மொழியா லும் வட மேற்கு, வடக்கு வடகிழக்கு ஆகிய பகுதிகளில் தமிழ் மொழியாலும் மறையச் செயற்பட்டுள்ளன.

4) சிங்கள, தமிழ் அடையாள வளர்ச்சி கி.பி. 1200 அளவில் முற்றுப்பெற்றது. இரு இனங்களும் பல சிறிய இனங்களையும் மொழிகளையும் உள்வாங்கியுள்ளன. இந்த நிகழ்ச்சி இன்று வரை மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலாயினும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இவ்வின அடையாளங்கள் தோன் றிய காலத்தில் இரு இனங்களின் வாழ்விடங் களும் புவியியல் அடிப்படையில் வேறுபடத் தொடங்கின.

5) வரலாற்றுக்கு முந்திய காலந் தொட்டு இலங்கைத் தீவில் நடை பெற்ற மனித குடியேற்றங்களை விளங்கிக் கொள்வதற்கு தென் இந்திய வரலாற்றை விளங்கிக் கொள் வது மிக அவசியம் பலெயோலிதிக எனப் படும் பழைய பெருங் கற்காலத்தில் இலங் கைத் தீவும் தென் இந்தியாவும் ஒரே தரைப் பரப்பாக இருந்தன. கி.மு 5000 ஆண்டளவில் இலங்கைத் தீவும் தென் இந்தியாவும் இறுதி யாக வெவ்வேறாகின. அதற்குப் பின்பும் இடையில் தரைப்பாலங்கள் தோன்றின. அவற்றிற்கு மேலாக மக்களின் இரு வழிப் போக்கு வரவு சாத்தியப்பட்டது.

6) இலங்கைத் தீவின் மெசோலிதிக் கலாச்சாரம் தென் இந்தியாவின் மெசோலி திக் கலாச்சாரத்தின் நீட்சியாக இருந்தது.

https://tamileelamarchive.com/

தென் இந்தியாவில் இருந்து இரும்பின் பாவனை இலங்கைக்கு வரும் வரை இலங்கையில் மெசோலிதிக் கலாச்சாரம் நிலவியது.

## நூலாய்வு

2005ம் ஆண்டு வெளிவந்த பேராசிரியர் இந்திரபாலாவின் 'ஒரு இன் அடையாளத் தின் பரிணாம வளர்ச்சி: ஸ்ரீலங்காவில் தமி ழர்கள் கி.மு300 தொடக்கம் கி.பி 1200வரை' என்ற இந்நூலில் முகவுரை உட்பட ஒன்பது அத்தியாயங்களும் (285பக்கங்கள்) பின் இணைப்புக்கள் மேற்கோள் விளக்கங்கள், துணை நூற்பட்டியல்கள் அடங்கிய பகுதியும் (பக்கம் 285-400) உள்ளடங்கியுள்ளன. தென் கிழக்கு ஆகிய வரலாற்றுக் கற்கைகளில் வல்லவரான இந்திரபாலா நாடும் ஏடும் நன்கறிந்த பன்மொழி அறிஞராவார் இவ ருடைய நூல் முடிவுகள் மிகவும் அவதா னமாகப் பெறப்பட்டுள்ளன. வரலாறு அரசி யலின் கரமாக மாறக் கூடாது என்ற நோக் கில் பேராசிரியர் அவர்கள் நிதானப் போக் கைக் கடைப்பிடித்துள்ளார்.

இந்நூலுக்கு ஆசிரியர் வழங்கும் அறி முகவுரை (INTRODUCTION பக்கம்-01-35) வரலாற்றிற்கு முந்திய காலந்தொட்டு தொடர்ச்சியான குடியேற்றம் நடக்கும் தீவாக இடம் பெறுகிறது நிலவியல் நிபுணர்கள் கருத்துப்படி இலங்கை, இந்தியா ஆகியன ன முன்னொரு காலத்தில் ஒரே தரைப்பரப் பாக இருந்த பின் காலப்போக்கில் வெவ் வேறாகி விட்டன. இந்தியாவும் இலங்கைத் தீவும் நெடுங்காலமாக ஒன்றான தரைப் பரப்பாக இருந்தன. தரைப்பரப்புக்கள் பிரிய நேர்ந்த பின்பும் தொடர்புகள் அறவில்லை இரு பக்க மக்கள் வரலாறு பின்னிப் பிணைந்து இருந்தன இரு முக்கிய இனங் கள் இலங்கைத்தீவில் தோன்றிய பின்பும் புதிய இனங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. முஸ்லீம்கள், மலே, பறங்கி மலை யகத் தமிழர்கள் என்றும் புதிய குழுக்கள் தோன்றியுள்ளன.

தமிழ் என்ற சொற் பிரயோகம் முதன் முறையாகச் சங்க இலக்கியத்தில் (கி.மு 500-கி.பி 200) காணப்படுகிறது தொல்காப்பிய இலக்கண நூலிலும் அது காணப்படுகின் றது. தமிழ் ஒரு மொழி, ஒரு இனம், ஒரு நாடு என்ற அர்த்தங்களில் அப்போது பயன்படுத் தப்பட்டது கிட்டத்தட்ட அதே காலப்பகுதியில் வழங்கிய பிராகிருத மொழியில் திராமிர (TRAMIRA) என்றும் அதற்குச் சற்று முந்திய காலத்தில் தமிலா (DAMIELA) என்ற பிரா கிருத மொழிச் சொற்கள் காணப்படுகின் றன. இலங்கையில் தமிழர் என்று தனித்து வமான இனம் இருப்பதற்கான மிகப் பழமை

ஆனைவிழுந்தான் முது மனிதன்



வாய்ந்த ஆதாரமாக இவ்வகைப் பிரயோகங் கள் அமைகின்றன மிக அண்மைக்காலம் வரை சிங்கள, தமிழ் இனங்கள் பற்றிய ஆராச்சி ஆழமாக மேற் கொள்ளவில்லை வரலாற்றுக் காலந்தொட்டு இலங்கைத் தீவின் ஆதிக் குடிகள் சிங்களவர்கள் என் றும், தமிழர்களும் பிற இனங்களும் காலம் பிந்தி வந்து நாட்டில் பங்குவகிக்கின்றனர் என்றும் கொள்ளப்பட்டு இது வரலாற்றைத் திரிபு படுத்துவதாக அமைகின்றது.

ஐரோப்பிர்களின் வருகைக்குப்பின் இக் கருதுகோள் வலுப்பெற்றது பாலி, சிங்கள மொழிகளில் எழுதப்பட்ட ஏடுகள் கண்டு பிடிக்கப்பட்டு நூல் வடிவமாக்கப்பட்டன. அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள முல் கிரிகல பாறையின் உச்சியிலுள்ள புத்த கோயிலில் ஜோர்ஜ் ரேனர் (GEPRGE TURNER) என்ற பிரிட்டிஷ் அரச நிர்வாகி 1836 இல் மகாவம்ச ஏடுகளைக் கண்டு பிடித்தார். அனுராதபுரம் பொலநறுவை இருபாடு களையும் பிரிட்டிசார் கவனிக்கத் தொடங்கி னர். இதனால் சிங்கள இலக்கியங்களின் கூற்றை அவர்களும் பிற ஆய்வாளர்களும் ஏற்கத் தொடங்கினர் இதனால் சிங்களவர் கள் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு இலங்கையில் வாழும் உரித்தாளர்கள் என்று தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் படையெடுப்புக்கள் மூலம் குடியேறியவர்கள் என்றும் வரலாறு எழுதப்பட்டது அத்தோடு சிங்களவர்களை ஆரியர்கள் என்றும் தமிழர் களைத் திராவிடர்கள் என்றும் வகைப்படுத் தும் வழமையையும் அக்காலப்பகுதியில் தோன்றியது இலங்கை வரலாறு என்பது தனியொரு இனத்தின் வரலாறு என்ற கருத்து

வலுவாக வளர்ச்சியடைந்தது வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வட இந்தியா வாழ் ஆரியர்கள் இலங்கைத்தீவில் பெரும் எண் ணிக்கைகளில் வந்து குடியேறினார்கள் என்ற ஆதாரமற்ற கருத்து சிங்ளத் தேசிய வாதிகளால் வளர்த்தெடுக்கப்பட்டது. முது பெரும் அறிஞரான பேராசிரியர் செனரத் பறனவிதான தொல்லியல் திணைக்களத் தின் ஆணையாளராகப் பதவி வகித்தபின் இளைப்பாறிய காலத்தில் பேராதெனிய பல்கலைக்கழகம் வெளியிட்ட (சிலோன் பல்கலைக்கழகத்தின் சிலோன் வரலாறு (UNIVERSITY OF CEYLON HISTORY OF CEYLON) என்ற தொகுப்பு நூலில் (ஆரியக் குடியேற்றம் சிங்களவர்கள் (ARYAN SETTLEMENTS:THE SINHALESE) என்ற தலைப்பில் ஒரு ஆய்வு. அத் தியாயத்தை எழுதினார் இதில் அவர் ஆரியர்களின் இலங்கைக் குடியேற்றத்தை வலியுறுத்தியுள்ளார். பரனவிதானவின் இக் கூற்றை மறுத்துரைக்கும் வலுவற்ற பிலைந்த ஆய்வாளர்கள் அதே கருத்தை ஒட்டி எழுத ஆரம்பித்தனர். இது வரலாற்று ஆய்வா ளர்கள். இது வரலாற்று ஆய்வுகளுக்கு செய் யப்பட்ட பெருந் தீமையாகும் தமிழர் வரலாற் றைப் புறந்தள்ளும் நடவடிக்கையாகவும் இது அமைந்தது எல்லாளன் துட்டகாமினிப் போரை பறனவிதான ஒரு விடுதலைப் போர் என்று வர்ணித்தது பெருந் தவறாகும்.

சில காலத்தில் சுதாஷன் செனவிரத்தின, லெஸ்லி குணவர்தனா போன்ற அறிஞர்கள் துணிச்சல் பெற்றனர். சுதர்ஷன் செனவிரத் தின வெளியிட்ட 'தென் கிழக்கு இந்தியா மற்றும் ஸ்ரீலங்காவின் தொடக்க கால

https://tamileelamarchive.com/



ஒளிப்படங்கள்: ஈழவிஷன்

ஆனைவிழுந்தான் முது மனிதன்



பௌத்த சமுதாய அடித்தளம்' (SOCIAL BASE OF EARLY BUDDHISM IN SOUTH EAST INDIA AND SRILANKA) என்ற பெரு நூல் இலங்கையின் பழைய வரலாற்றை பெருங் கண்ணோட்டத்தில் பார்க்க உதவுகிறது. இரும்புப் பாவனை இலங்கையில் தொடங்கிய காலம் பற்றிய சுதர்ஷன் செனவிரத்தினவின் ஆய்வு நூல் இத்துறையில் ஒப்பற்று விளங்குகிறது. தென் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே வகைக் கலாச் சாரம் நிலவியதற்கான ஆதாரமாக இந்நூல் விளங்குகிறது.

மறுவளத்தில் தமிழ் நாட்டு ஆய்வாளர்கள், புராதன காலத்தில் இலங்கையில் இருந்து தமிழ் நாட்டிற்கு வந்தடைந்த கலாச் சார விழுமியங்கள் பற்றிய தரவுகளை உறுதி செய்துள்ளனர் பி.ஜெயக்குமார் தனது 'தமிழகத்துறைமுகங்கள் (2001) என்ற நூலில் 'தமிழகத்திற்கு ஸ்ரீலங்காவில் இருந்து கலாச் சார அடையாளங்கள் வந்ததை மறுப்பதற் கில்லை' என்றுள்ளார் பேராசிரியர் ஜராவம் மகாதேவன் தனது பாரிய கல்வெட்டு நூலில் தமிழ் நாட்டின் பிரம் கல்வெட்டுக்களில் இலங்கையில் இருந்து வந்து சேர்ந்த அடையாளம் காணப்படுவதை நிரூபித்துள்ளார். அரிக்கமேடு, ஆலன்குளம், கொருமணல் பூம்புகார் ஆகிய இடங்களில் பெறப்பட்ட மட்பாண்டத் துண்டுகளில் சிங்கள- பிராகிரத் எழுத்துக்கள் காணப்படுகின்றன. எஸ். இராசவேலு என்ற ஆய்வாளர் தனது ' பூம்புகாரில் சிங்கள பிரம்மி எழுத்துப் பொறித்த மட்கலத் துண்டு ஆவணம்' என்ற ஆய்வு நூலில் இது பற்றி எழுதியுள்ளார் இவை எனத் காட்டுகின்றன என்றால் இலங்கைக் கும் தென் இந்தியாவுக்கும் இடையில் இரு வழித் தொடர்பு நிலவியது என்பதாகும். கடந்த மூன்று தசாப்தங்களாக கல்வெட்டு சம்பந்தமான ஆய்வுகள் முன்னேற்றம் கண்டுள்ளன. தென் இந்தியாவின் தமிழ் பிராமி எழுத்துக்களுக்கும் தொடக்ககால இலங்கைப் பிராமி எழுத்துக்களுக்கும் இடையிலான ஒற்றுமையை சதமன்கல் கருணாரத்தின நிரூபித்துள்ளார். இலங்கைப் பிராமி எழுத்துக்களை விளங்கிக் கொள்வதற்கு தமிழ் பிராமி எழுத்துக்களை விளங்கிக் கொள்வதற்கு தமிழ் பிராமி எழுத்துக்கள் பற்றிய அளவின் அவசியத்தை சுதர்ஷன் செனவிரத்தின தனது ஆய்வுகளில் வலியுறுத்தியுள்ளார் இந்தியாவின் தலை சிறந்த கல் வெட்டியலாளரான ஜராவதம் மகாதேவன் தமிழ் பிராமி எழுத்துக்கள் இலங்கையில் ஆதிகாலத்தில் பரவியுள்ளதையும் அதே சமயத்தில் இலங்கைப் பிராமி எழுத்துக்கள் தென் இந்தியா வந்துள்ளதையும் பதிவு செய்துள்ளார்.

அத்தியாயம் - 01 பக்கம் 36-55 வரை- இப்பிராந்திய ஆதி மக்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போல கற்காலம், உலோககாலம் என்று இரு வகைக்காலப் பதிலை மேற்கொள்வது மிகவும் பொருத்தம் கற்காலம் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பழைய பெருங் கற்காலம் - (PALAEO-LITHIC) மத்திய பெருங் கற்காலம் (MESO-LITHIC) புதிய அல்லது நவீன கற்காலம் (NEOLITHIC) LITHIC) அல்லது லிதிக் என்பது கிரேக்க மொழிச் சொல் கல்லினால் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது கற்கால ஆயுதங்கள் பெரும்பாலும் உடைத்துத் தீட்டப்பட்ட கையில் ஏந்தும் சிறிய ஆயுதங்களாகவே அமைந்தன வெட்டுதல், உரித்தல் போன்ற பணிகளுக்கு அவை பயன்பட்டன. விலங்கின என்புகளில் செய்த ஆயுதங்களும் மரத் துண்டுகளும் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

வரலாற்றுக்கு முந்திய காலம், (PRE-HISTORY) எழுத்து உருவாகாத காலத்தைக் குறிப்பிடுகிறது கி.மு 3000 ஆண்டளவில் எழுத்தின் தொடக்ககாலம் ஆரம்பிக்கிறது பழைய கற்காலம் ஒரு மில்லியன் வருடங்களுக்கு முன் ஆரம்பித்திருக்கலாம் என்று 10,000 வருடங்களுக்கு முன் அது முடிவுற்றிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் நம்புகின்றனர் பழைய கற்காலத்திற்கு எழுத்துச் சான்று கிடைக்க வாய்ப்பில்லை பழைய கற்காலத்தை சில விஞ்ஞானிகள் மூன்று உட்பிரிவுகளாக வகுத்துள்ளனர் அது பற்றி ஏற்கனவே பார்த்துள்ளோம். வரலாற்றிற்கு முந்திய காலந்தொட்டு ஆதி மனிதர்கள் கால் நடையாக ஒரே தரைப்பரப்பாக இருந்த தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளனர். கடற் பயணம் தேவையற்றதாக அப்போது இருந்தது இவர்களை தென் இந்தியா, ஸ்ரீலங்கா மக்களின் மூதாதையர்களாகக் கொள்ள வேண்டும் வரலாற்றுக்கு முந்திய காலத்தின் தொல்லியல் ஆய்வில் தலைசிறந்தவரான சிரான் தெரனியகல

https://tamileelamarchive.com/

எது எப்படியிருந்தாலும் இலங்கையில் கி.மு 1000 வரை நிலவிய மத்திய பெருங் கற்காலம் (மெசோலிதிக்) தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பொதுவான பண்பாட்டு ஆதாரங்களைக் கொண்டிருந்தது. அவர்கள் பேசிய மொழியும் ஒன்றாக இருந்திருக்கலாம். ஆனால் இதன் பின் வந்த இரும்பின் பாவனை, பிராகிருத மொழி என்பன வித்தியாசமான இன அடையாளங்கள் தோன்றுவதற்குத் காரணமாக இருந்திருக்கலாம் எனினும் சிங்கள தமிழ் இனங்கள் ஒரே ஆதி மூதாதையர் குடும்பத்தில் இருந்து தோன்றினார்கள் என்பதை மறுக்கமுடியாது.

'பழைய கற்காலம் தொட்டு இந்தியாவின் தெற்கிலிருந்து ஸ்ரீலங்காவுக்கு இரு வழியில் தங்கு தடையற்ற மரபணுப் பரிமாற்றம் இருந் திருக்கலாம் என்று தனது ' ஸ்ரீலங்காவின் வரலாற்றிற்கு முந்திய கால வரலாறு' THE PRETHIS TORY OF SRILANLA (1992) என்ற நூலில் தெரிவிக்கிறார். ஸ்ரீலங்காவின் பழைய கற்கால மனிதர்கள் பற்றிய விரிவான வரலாறு கிடைக்கவில்லை. ஆனால் அவர் கள் பயன் படுத்திய கல்லாயுதங்கள் ஸ்ரீலங் காவின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன.

பழைய கற்காலத்தைத் தொடர்ந்து மத்திய பெருங்கற்காலம் நீண்ட காலம் நிலவியது. இக்காலப்பகுதியிலும் தென் இந்தியாவும் ஸ்ரீலங்காவும் ஒரே தரைப் பரப்பாக இருந்தன. இக்கால மக்கள் இலங் கைத் தீவில் மிகப்பரந்து வாழ்ந்தனர். அவர் கள் வாழ்ந்த குகைகள் சிரான் தெரனியகல அவருடைய தந்தையர் பீ.ஈபீ தெரனியகல கண்டு பிடித்தார் இதன் காரணமாக பலாங் கொடை மனிதன் என்ற பெயர் இந்த எலும்பு க்கூட்டிற்கு வழங்கப்பட்டது. இலங்கைத்தீவு முழுவதும் பலாங்கொடைக் கலாச்சாரம் பரவியிருந்ததாகச் சொல்லப்பட்டது. பொம் பரிப்பில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளும் பலாங்கொடை எலும்புக்கூடும் ஒரே வகை யைச் சேர்ந்தவை பொம்பரிப்புவில் எடுக்கப் பட்ட எலும்புக் கூடுகளை ஆதி மனிதவியல் ஆய்வாளர்கள் கெனத் கெனடி லூக்காஸ் ஆகியோர் மரபணுப் பரிசோதனை செய்த னர் பலாங்கொடை மனிதனும் பொம்பரிப்பு மனிதனும் ஒரே மரபணுக்குடும்பத்தினர் என் பது இவர்களால் நிரூபிக்கப்பட்டது மத்திய பெருங்கற்காலம் தொட்டு இன்று வரையி லான தென் இந்தியா ஸ்ரீலங்கா மக்களின் மரபணுக்கள் இடையறாது தொடர்வதாக மேற்கூறிய பேராசிரியர் கெனத் தெரிவிக் கிறார்.

தென் இந்தியா ஸ்ரீலங்கா பிராந்தியங் களில் வாழ்ந்த ஆதி மக்கள் பேசிய மொழி பற்றிய தகவல் கிடைப்பது அரிது கிடைப்ப தற்கு வாய்ப்பு இல்லை என்பது உறுதி 'ஸ்ரீலங்காவுக்கு இந்தோ ஆரியன் பிராகிருத மொழி வரமுன் பேசப்பட்ட மொழி பற்றிய அறிவு பூச்சியமாக இருக்கிறது. அது திராவிட மொழியாகவோ முண்டா மொழியாகவோ அல்லது வேறொரு மொழியாகவோ இருக்க லாம் என்கிறார், சிரான் தெரனியாகல, இந்தோ ஆரியன் அல்லது திராவிட மொழிக் குடும்பங்களுக்குச் சொந்தமில்லாத சில சொற்கள் சிங்கள மொழியில் இருக்கின்றன. உதாரணத்திற்கு தேங்காயைக் குறிக்கும் 'சு.பொல்' என்ற சிங்கள மொழிக் குடும்பம் இந்தியாவின் வடக்கு கிழக்கு மற்றும் கிழக் குப் பிராந்தியங்களில் பேசப்படுகிறது இந்த மொழிக் குடும்பத்தின் பரப்பல் பற்றிய ஆய் வுகள் முழுமை பெறாமல் இருக்கிறது.

இலங்கைக்கு வழங்கும் 'லங்கா' (LANKA) என்ற பெயர்ச்சொல் திராவிட மற்றும் ஆரிய மொழியாக குடும்பத்தைச் சேர்ந்தல்ல, ஸ்ரீலங்காவுக்குத் தமிழ் இலங் கையாக மாற்றம் பெற்றுள்ளது. லங்கா என்ற சொல் தீவைக் குறிக்கும் ஆசாம் தொட்டு ஆந்திரா வரையிலான இந்திய கிழக்குக் கரையோரங்களில் லங்கா என்ற சொல் பாவனையிலுள்ளது இராவணனின் இலங்கை கோதவரி ஆற்றுப் பிராந்தியத்தில் இருந்தது என்று சில அறிஞர்கள் வாதிடுவ தற்கு இது வாய்ப்பு வழங்குகிறது. இரண்டா யிரம் வருடங்களுக்கு முன்பாக்கத்தமிழ் நாட்டுக் கரையோரத்திலும் லங்கா என்ற சொல் பாவனையில் இருந்து சங்க இலக் கியத்தில் 'இலங்கை' என்று முடியும் இடப் பெயர்கள் காணப்படுகின்றன உதாரணங் கள் மாவிலங்கை, தொன்மாவிலங்கை ' பிற்காலத்தில் தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்கள் இலங்கையை 'உத்தரலங்கா' என்கின்றன பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் தமிழ் நாட்டிற்குத் தெற்கிலுள்ள இலங்கை என்ற அர்த்தத்தில் ஸ்ரீலங்கா முழுவதையும் 'தென் னிலங்கை' என்று கூறப்பட்டுள்ளது. இது பற்றிய ஆய்வுகள் முழுமை பெறும்போது பல வியப்பூட்டும் முடிவுகள் எட்டப்படலாம்.

எது எப்படியிருந்தாலும் இலங்கையில் கி.மு 1000 வரை நிலவிய மத்திய பெருங் கற்காலம் (மெசோலிதிக்) தென் இந்தியா வுக்கும் இலங்கைக்கும் பொதுவான பண் பாட்டு ஆதாரங்களைக் கொண்டிருந்தது. அவர்கள் பேசிய மொழியும் ஒன்றாக இருந்திருக்கலாம். ஆனால் இதன் பின் வந்த இரும்பின் பாவனை, பிராகிருத மொழி என்பன வித்தியாசமான இன அடையாளங் கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந் திருக்கலாம் எனினும் சிங்கள தமிழ் இனங் கள் ஒரே ஆதி மூதாதையர் குடும்பத்தில் இருந்து தோன்றினார்கள் என்பதை மறுக்க முடியாது.

(தொடரும்)

அனைத்துலகத் தொடர்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.



மூதாதையரின் வரிகள்:
திருமலை வெருகல் மாவடிச்சேனை கல்லடி மலை

https://tamileelamarchive.com/



# வழி

அமரர் சந்திரா அற்புதலிங்கம்



கையிலிருந்த நாற்குறிப்பேட்டைத் திறந்தாள் கயல்விழி. அட்டையின் உட்புறம் செருகப்பட்டிருந்த புதிதாகவே இருந்த இருநூறு ரூபாய்த் தாளை மெதுவாக கையிலெடுத்தாள். நெஞ்சு விம்மியது. கண்கள் கலங்கி விடும்போலத் தோன்றிய போது நிமிர்ந்து வானத்தைப்பார்த்தவள் துணுக்குற்றாள்.

ஒற்றைப் பறவையொன்று மேற்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அந்த பறவை துணையிழந்த துயரத்துடன் பறப்பதாகவும் அதனுடைய தனிமைச்சோகம் தன்னைத் தாக்குவதாயும் உணர்ந்தாள். வழி தெரியாத குழந்தையாக மனம் தவித்தது.

ஒரு போராளியாக இயக்கத்தில் இணைந்து கொண்டபோது அவளுக்கு வயது பதினெட்டு. வீட்டில் கடைசிப்பெண். குழந்தைத்தனம் மாறாத குமரியாக, சுதந்திர மனப்பான்மை மிக்கவளாக போராட்ட வாழ்க்கையைத் தொடங்கியபோதோ இல்லை அதற்குப்பிறகு வந்த வருடங்களிலோ தனக்கென்று ஒரு துணை, தனிப்பட்ட வாழ்க்கை என்று எதையும் சிந்திக்கத்தெரியாத ஒரு பிறவியாகத்தான் இருந்தாள்.

தான் ஒரு கடற்புலி என்பதில் பெருமை இருந்தது. கடலைப் படிப்பதில் அதிக ஆர்வம் இருந்தது. கரையைவிட்டுப்புறப்பட்டால் பதுங்குவதற்கு இடமில்லாத கடல் சண்டைகளின் வேகம் பிடித்திருந்தது. அப்போதெல்லாம் பறவைகள் இரட்டையாகப்பறக்கிறது, தனியாக பறக்கிறது என்பதில் எதுவுமில்லாமல் அவளே உவமிக்க ஒரு பறவையாகத்தான் பறந்தாள்.

இடையில் நாவரசன் வந்தான். அவர்களுக்கு அடிக்கடி வகுப்பு எடுக்கும் ஒரு பயிற்சி ஆசிரியன்.

மூன்று வருடங்களின் முன் வழமையான பயிற்சி முடித்து வந்து எல்லோருமாகத் தேநீர் அருந்திக்கொண்டிருந்த ஒரு மாலையில் தான் பொறுப்பாளர் அழைத்து அந்த விசயத்தைச் சொன்னார்.

"சும்மாயிருங்கக்கா"

விசர்க்கதை கதைக்காதைங்கோ....

என்னால ஏலாது.."

https://tamileelamarchive.com/

என்பது போன்ற செல்லமான எதிர்க்கதைகளை புன்னகை மாறாமல் கேட்டுக்கொண்டிருந்த பொறுப்பாளர்,

"இஞ்ச பாருங்கோ கயல்விழி. இது திருமணக்குழு மூலமா உங்களைக் கேட்டிருக்கு. நாவரசனை உங்களுக்கு நல்லாத் தெரியும்தானே. நான் ஒண்டும் உடன சாதகமாவோ பாதகமாவோ முடிவெடுக்கச் சொல்லிச் சொல்லேல்ல. உங்களுக்கு வயசு வந்திட்டுது... முடிவு சொல்லுங்கோ, ரெண்டு கிழமை அவகாசம் தந்திருக்கு"

என்று விட்டு போய் விட்டார்.

வயசென்ன வயசு... இருபத்தாறு வயசானாலும் உளசார்ந்த வாழ்கையை பொறுத்தவரையில் பதினெட்டாகத்தான் இருந்தது. ஒருமுறை வைத்தியரிடம் போனபோது வயது கேட்க பதினெட்டு என்றதும் கூட வந்தவள் "அது நீ இயக்கத்துக்கு வந்த வயது. இப்ப என்ன வயதெண்டு சொல்லு" என்றது நினைவு வந்ததும் சிரித்துவிட்டாள்.

ஒரு கண்ணாடியைத் தேடிப்பிடித்து தன்னைப் பார்த்தாள். எப்போதும் கடலடிப்பதால் ஒட்டிக்கொண்ட கறுப்பு நிறம். ஒட்ட வெட்டிய தலைமுடி. முதன்முதலில் வேறு யாரோவாத் தோன்றி தன் முகத்தை ஆராய்ந்து கொண்டபோது ஒளிகொண்டு மினுங்கிய கண்கள் தாழ்ந்து கொள்ள நெஞ்சுக்குள் கலவையான ஒரு உணர்வு சுழன்றது. நாவரசனை நினைக்கையில் மெல்ல மெல்ல உள்ளத்தில் ஒரு மாற்றம்.

மூன்று வாரங்களின் பின் அவனுடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

அவன் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக்கொண்டிருந்தவளைப் பார்த்து யோசனையாக விருந்தான் நாவரசன்.

"என்னைப் பார்த்துக் கதைக்கமாட்டீங்களா"

ஒருமுறை நிமிர்ந்த பார்வை தாழ்ந்துவிட்டது.

"எனக்குச் சொல்லுறதுக்கு ஒண்டுமேயில்லையா"

"இருக்கு"

"என்னது?"

பேச்சு வரவில்லை. படபடப்பாக இருந்தது அவளுக்கு. ஏன்ரா இதற்கு ஒத்துக்கொண்டோம். என்று கூட இருந்தது.

அவனே தொடர்ந்தான்.

"எனக்கு உங்கள பிடிச்சிருக்கு. உங்களுக்கு..."

அவன் தயங்கியபோது,

சட்டென்று கேட்க நினைத்ததைக் கேட்டுவிட்டாள்.

"கலியாணத்துக்குப்பிறகும் நான் இப்படியே வேலைசெய்யலாமா?"

அவனுக்கு பாரம் குறைந்தமாதிரி இருந்திருக்க வேண்டும்.

"செய்யலாமே"

என்றான் லேசான குரலில்.

"சண்டைக்கு போகக்கூடாது எண்டு சொல்லுவீங்களா....?"

"சொல்ல மாட்டன்"

எனக்குச் சாறி கட்டப்பிடிக்காது

"பிரச்சினையில்ல"

கலியாணத்துக்குப் பிறகு முடி வளர்க்கச் சொல்லக்கூடாது

"சீச்..சீ... சொல்லமாட்டன்"

அவன் உற்சாகமானான்.

பிறகு உங்கட வீட்டுக்காரர் சொன்னா...."

"சீ....சீ.. அவை சொல்ல மாட்டினம். அவைக்கு நான் கலியாணம் கட்டினாலே போதும். அப்படியில்லையெண்டு அவை ஆசைப்பட்டால்"

சற்று நிறுத்தி பரபரப்பாக இருந்த அவளைப் பார்த்தான்.

"அப்படி அவை ஆசைப்பட்டால் நான் வளர்த்துக்கொள்ளுறன்"

சிரிக்காமல் அவன் சொன்னபோது பக்கென்று சிரித்துவிட்டாள். இறுக்கம் தளர்ந்துவிட்டது. அவனை ஏறிட்டுப்பார்த்த அவள் சில வினாடி தாமதித்து அடக்கமாட்டாமல் சிரிக்க அவனும் சிரித்தான்.

"எனக்கு முடிவளர்த்தா எப்படி இருக்கும் எண்டு பாக்கிறீங்களா...."

அவள் பேசவில்லை.

"கயல்விழி உங்கள எனக்கு நெடுகத் தெரியும். உண்மையைச் சொன்னா உங்கள நான் நினைக்கத் தொடங்கி எவ்வளவோ நாளாச்சு.. எனக்காக உங்கட நிலைப்பாடுகளை மாத்திக்கொண்டு என்னை அனுசரிச்சுப் போகவேணும் எண்டதெல்லாம் வேணாம். நீங்க நீங்களா இருக்கிறதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு. நேரான உங்கட பார்வை பிடிச்சிருக்கு. எந்த விசயத்தையும் படக்கென்று விளங்கிக்கொள்ளுற கெட்டித்தனம் பிடிச்சிருக்கு உங்கட சிநேகிதிகளோட நீங்க பழகிற விதம் பிடிச்சிருக்கு..."

அவன் சொல்லச் சொல்ல அவளுக்குள்ளிருந்த பயங்கள் தயக்கங்கள் மெல்ல மெல்ல விலகினவென்றாலும் கலியாணம் என்ற விசயத்துக்குள் இன்னும் அவள் பழகிக்கொள்ளவில்லை.

"கொஞ்சநாள் பொறுத்து கலியாணம் வைக்கலாமா..."

தாழ்ந்த குரலில் அவள் கேட்டபோது அவள் தன்னை ஏற்றுக் கொண்டுவிட்டாள் என்று விளங்கிக்கொண்டான் போலும்.

"கலியாணம் எண்டா பயமா இருக்கே... பிரச்சினையே இல்ல. பொறுத்துச் செய்யலாம். என்னைப் பொறுத்தவரை நிம்மதியா உங்களை நினைச்சுக் கொண்டிருக்கிற உரிமையை இப்ப தந்தால் போதும்".

பிரம்மிப்பாக இருந்தது கயல்விழிக்கு. அவள் இத்தனைத்தூரம் பெறுமதியானவளா... தன்னிடமுள்ள குறைகளெல்லாம் வரிசையாக நினைவுக்கு வந்தன. குழப்பமாக இருந்தது.

"நான்... நான்... நீங்க நினைக்கிற மாதிரி இல்ல. எனக்கு சரியா சமைக்கக்கூடத் தெரியாது..."

தன்னை பற்றி அவன் முழுமையாகத் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்ற

https://tamileelamarchive.com/



கவலை ஏற்பட்டது.

"எனக்கு சமைக்கத் தெரியும். இதெல்லாம் ஒரு பிரச்சினையே இல்ல. இரண்டு பேரும் மனமொத்தா எல்லாத்தையும் சமாளிக்கலாம். எங்களுக்கொரு பிள்ளை என்றதைத் தவிர வேறு எதையும் நீங்க தான் செய்யோணுமென்று நான்..."

சட்டென்று பேச்சு தடைப்பட்டு விட்டது. தன்னை அறியாமல் முதல் சந்திப்பிலேயே வந்து விழுந்து விட்ட பிள்ளை என்ற வார்த்தை அவளை சங்கடப்படுத்திவிட்டதென்றால் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. முகம் சூடாகிச் சிவந்து போவதை அவளால் தடுக்க முடியாமல் போய்விட்டது.

அவர்களின் இணைப்பு உறுதியாகி விட்டது.

எதையும் சமாளிக்கலாமென்று அவன் சொன்னதை நினைத்துக் கொண்டே நாட்கள் கழிந்தன.

அடுத்த சந்திப்பு...!

ஒரு பயிற்சிக்காக வேறிடம் போயிருந்த கயல் விழியும் அவளுடன் இன்னும் அறுவருமாக கடற்கரை முகாம் ஒன்றிலிருந்து பிரதான சாலைக்கு வரவேண்டியிருந்தது. வாகன வசதி இருக்க வில்லை. பாதை தெரிந்த ஒருத்தி குறுக்காக நடந்தால் கொஞ்ச நேரத்தில மெயின் றோட்டுக்கு போயிடலாம் என்றாள்.

நடக்கத் தொடங்கினார்கள்.

நடக்க நடக்கப் பாதை நீண்டது. மழை வேறு! ஒதுங்க இடமுமில்லை. நேரமுமில்லை. பசியும் குளிரும் வாட்டியது. இன்னும் எவ்வளவு தூரமென்று எல்லோரும் கேட்பதும்

இந்தா இன்னும் கொஞ்சந் துரந்தான். என்பதுமாகத் தொடர்ந்து நடந்துக் கொண்டிருந்தார்கள்.

"சீ.. என்ன இது காசிருந்தால் அந்தப்பெட்டிக் கடையிலாவது என்னவும் வேண்டலாம்"

"ச்சு ஆரும் ஒரு பிளேன்ரி சுடச்சுடத் தந்தாப் போதும்"

"நினைக்கிறதுதான் நினைக்கிறாய் கொஞ்சம் மிக்சரும் தாறமாதிரி நினையன்".

சொன்ன கயல்விழிக்கு பொத்துப் பொத்தென்று அடிவிழுந்த போது கடந்துபோன மோட்டார் சைக்கிள் ஒன்று திரும்பி வந்து அவர்கள் அருகில் நின்றது.

நாவரசன்! மழைக்கோட் அணிந்திருந்தான்.

"என்ன இஞ்ச நிக்கிறியள்"

ஆச்சரியமாகக் கேட்டான். கயல்விழி முன்வந்து தாங்கள் போகவேண்டியதைச் சொன்னபோது மழையில் நனைந்த பசியும் களையுமாக அவள் இருந்த கோலத்தை ஏற இறங்கப் பார்த்தான் அவன். சுருசுருவென்று ஆற்றமாட்டாத கோபம் அவன் முகத்தில் தெரிந்தது. மற்றவர்களின் முன்னிலையில் எதையும் கேட்கமுடியாமல்,

"கடைசியா எப்ப சாப்பிட்டனீங்கள்."

என்ற போது கயல்விழியின் முகம் வாடிவிட்டது.

அவர்கள் எந்த வழியால் போவார்கள் என்பதை கேட்டுத் தெரிந்துகொண்டுபோன நாவரசன் விரைவில் திரும்பி வந்தான்.

பின்னால் இருந்த நண்பனின் கையில் இருந்த பையை வாங்கி கயல்விழியிடம் நீட்டினான்.

பெற்றுக்கொண்டாள்.

பணிஸ், வாழைப்பழம், பாண்!

பொக்கற்றிலிருந்து இருநூறு ரூபா தாள் ஒன்றை எடுத்து நீட்டினான். அவள் மறுத்தபோது.

"ச்சு அவசரத்திற்கு இருக்கட்டும்"

என்று கொடுத்துவிட்டுப் போனான்.

அவன் காட்டிய கோபம் அவளுக்கப் பிடித்திருந்தது. சாப்பிடாமலே வயிறு நிறைந்து போயிற்று. அந்த இருநூறு ரூபாயை அவள் செலவழிக்கவே இல்லை.

எப்போதாவது அவள் முகம் வாடிப்போயிருந்தால்,

"கடைசியா எப்ப சாப்பிட்டனீங்கள்"

என்று தோழிகள் அறுப்பது கூட சுகமாய் இருந்தது.

மறுமுறை நாவரசன் சந்திக்கக்கேட்டபோது ஆர்வத்துடன் வந்தாள். அவனில் ஏதோ வித்தியாசமாகப்பட்டது கயல்விழிக்கு. மெதுமெதுவாக விசயத்துக்கு வந்தான். கயல் முக்கிய பயிற்சி முடியுமட்டும் உங்களை சந்திக்கேலாது.

"எவ்வளவு நாள்"

மூண்டு வருசம்

அதிர்ந்து போனாள். அவளது மௌனம் அவனுக்கு வேதனையாக இருந்தது.

"கயல் என்ன யோசிக்கிறீங்கள். போகாமல் விடட்டோ?"

சும்மாதான் கேட்டான்.போகவேண்டாமென்று கூறத்தான் அவளுக்குமாசையாக இருந்தது. ஆனால் அவள் ஒரு போராளி. இன்னொரு போராளி வளருமாற்றலை தடுக்க நினைப்பது கூட இயக்கத்திற்குச் செய்யும் துரோகந்தான்.

இல்லையென்று தலையசைந்தது. அவன் அவளது உணர்வுகளை துல்லியமாய் புரிந்துகொள்வதில் மன்னன்.

காத்திருக்கிறதிலேயும் ஒரு சுகம் இருக்கு கயல். என்றாலும் நான் உங்களுக்கு கடிதங்கூடப் போடேலாது ஏதும் அவசரம் எனக்கு அறிவிக்கோணுமெண்டால் எங்கட பொறுப்பாளருக்குச்சொல்லுங்கோ என்ன.

தலையசைத்தாள்.

"மற்றது கயல்... எதிலேயும் உங்கட எனக்குத் தெரியும். எதையும்

https://tamileelamarchive.com/

செய்யவேண்டாமென்று சொல்லேல்ல. கொஞ்சம் கவனமா இருங்கோ எண்டதை மட்டும் சொல்லுறன்".

அவள் நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் நான்கும் கலந்து இறுகின.

"எனக்காக..."

கெஞ்சும் குரலில் ஆரம்பித்து ஒற்றைச் சொல்லுடன் நிறுத்திக்கொண்டான். ஏனென்றால் அவள் கண்கள் கலங்கியிருந்தன.

"கவனமாயிருப்பன்"

முணுமுணுத்தாள்.

ஒரு குழந்தையை அரவணைத்துக் கொள்வதைப் போல அவன் பார்வை அவளை அள்ளிக்கொண்டது.

அவன் பயிற்சிக்காக வெளிநாடு சென்றான். சுகமாகச் சேர்ந்து விட்டானென்று அவன் பொறுப்பாளர் அறிவித்தார். அவனது பிரிவு தன்னை வேதனைப்படுத்துவதை துளித்துளியாக விரும்பி அனுபவித்தாள்.

சாதாரண பெண்களுக்கு காதல் வந்தால் நளினம் கூடும் என்பார்கள். ஒரு போராளிக்குக் காதல் வந்ததில் பொறுப்புணர்வு கூடியது. அசட்டுத்துணிச்சலோடு எதையும் கையாள்வது குறைந்தது நிதானம் கைவந்தது.

நாவரசனின் அன்பு அல்லது அக்கறை அவளில் ஏற்படுத்தும் தாக்கம் அவளுக்கு சுகமாக இருந்தது. ஏதேனும் ஒரு சண்டையில் வீரச்சாவடைந்தால் தன் உயிர்போய் அவனுடன் ஒட்டிக்கொள்ளும் என்றுகூட நினைத்திருக்கிறாள்.

அழகிய கனவுகள் அடிக்கடி வரும். ஒருபோதும் நாவரசனும் அவளும் தனித்திருப்பதில்லை. ஒருசமயம் ஒரு சின்னஞ்சிறு பெண் குழந்தையுடன் அவன் கொஞ்சி விளையாடுவதாயும் அதனை அவள் ரசிப்பதாகவும் இருக்கும். அல்லது அவனைப் போல கம்பீரமான ஆண் குழந்தை ஒன்றுடன் உலாவருவதாக இருக்கும். விழிக்கையில் நெஞ்சுக்குள் துன்பமான ஒரு இன்பம் சுழன்றடிக்கும்.

அந்த முதல் சந்திப்பும் அவன் எதிர்பாராமல் பிள்ளை என்று கதைத்து விட்டதும்... அடடா யாரிடமும் பகிர்ந்துகொள்ளக் கூட முடியாத ரகசியமான இனிப்பு! பொத்திவைத்து ரசித்துக்கொள்வாள்.

இரண்டாயிரத்தியோராம் ஆண்டு தலைவர் போர்நிறுத்தம் ஒன்றை அறிவித்திருந்த காலப்பகுதி அது.

கடலில் விநியோகத் தொடரொன்றை அரச கடற்படை தாக்கிய செய்தி வெளிவந்தது.

அதில் காயப்பட்டவர்களில் கயல்விழியும் ஒருத்தி. வயிற்றில் பலமான காயம். அதிலிருந்து அவள் மீண்டெழ அதிக காலம் ஆனது. வயிற்றுப்புண்ணின் வலி வேதனை எல்லாவற்றையும் அவனை நினைத்துக்கொண்டே சகித்துக்கொண்டாள்.

ஒவ்வொரு நாளும் முடியும்போதும் அவன் திரும்பி வரும் காலம் நெருங்குகிறது என்று நினைத்துக்கொள்வாள்.

ஆனால் சில மாதங்களில் தன்னைப்பற்றிய அதிர்ச்சிகரமான விசயம் ஒன்றை அறிந்தபோது அவள் நொருங்கிப் போனாள்.

வயிற்றை கிழித்த எதிரியின் குண்டு அவளுடைய குழந்தை பெறும் ஜீவ ஆற்றலையும் அழித்துச்சென்றிருந்தது.

போராட்டத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விலை கொடுப்பார்கள். அவள் கொடுத்தது இதையா....? அவள் கனவுலகம் தலைகீழாகி விட்டது.

பலத்த வேலை செய்ய முடியாது என்ற கட்டத்தில் இடம் மாறிய அவள் பேசாமடந்தை ஆகிவிட்டாள்.

பெருமூச்சுடன் நிகழ்காலத்துக்குத் திரும்பியவள், ரூபாய்த் தாளை இருந்ததுபோல வைத்தாள்.

நாவரசன் வரும் காலம் நெருங்கிவிட்டது. என்பது வேதனையாக இருந்தது.

சந்தித்த முதல் நாளிலேயே குழந்தையைப் பற்றிக் கதைத்தவனுக்கு தான் ஒருபோதும் மனைவியாகப் போவதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டாயிற்று.

அவன் ஊர் திரும்பிவிட்டான். சந்திக்கக்கேட்டபோது ஆயத்தமாக இருந்த கடிதத்தை கொடுத்தனுப்பினாள்.

இந்தத் திருமணத்தில் எனக்கு விருப்பமில்லை. நான் நிம்மதியாக இருப்பதை நீங்கள் விரும்பினால் இந்தத் திருமணத்திலிருந்து எனக்கு விடுதலை தந்துவிடுங்கள்.

என்பது அதன் சாராம்சம். அவனோ விடாமல் முயற்சித்தான். பழைய பொறுப்பாளர் வந்தார். என்ன இது பிரச்சினை என்று பேச்சுவார்த்தை நடத்தினார். திருமணக் குழு உறுப்பினர்கள் வந்து நயமாகப் பேசிப்பார்த்தார்கள். எதற்கும் அவன் மசியவில்லை.

எனக்குத் திருமணம் வேண்டாம்.

என்பதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டேயிருந்தாள். ஆளாளுக்கு பலதும் கதைத்தார்கள். பலனில்லை.

* * *

சக போராளி தரணி அன்று காலையில் முகாமில் இரண்டு அட்டைப்பெட்டிகள் நிறைய தின்பண்டங்களுடன் எங்கோ புறப்பட்டிருந்தாள்.

அவளுடைய தம்பியின் நினைவு நாளுக்கு உணவுப் பொருட்களுடன் ஏதாவதொரு ஆதரவற்றோர் காப்பகத்துக்குச் செல்வது வழக்கமாம்.



https://tamileelamarchive.com/



"கயல்விழி நீரும் போயிட்டு வாரும்"

என்று பொருப்பாளர் சொன்னபோது மறுக்க முடியாமல் மோட்டார்சைக்கிளின் பின்னால் ஏறிக்கொண்டாள்.

அது ஒரு சிறுவர் காப்பகம். முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்கள் போலும். காப்பக பொறுப்பாளர் ஓடிவந்து வரவேற்றார்.

பொறுப்பாளரின் அறையில் இருந்து பார்த்தபோது மண்டபத்தில் குழந்தைகள் ஓடித்திரிவதைக் காணக்கூடியதாகவிருந்தது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுடன் அங்காங்கே சீருடை அணிந்த பணியாளர் உலவினார்கள். தரணி தின்பண்டங்களைப் பொறுப்பாளரிடம் கையளித்தாள். தேநீர் வேளையில் பகிர்ந்தளிப்பதாகக் கூறினார் பொறுப்பாளர்.

தேநீரும் பிஸ்கட்டும் வந்தன. 'சாப்பிடுங்கோ' என்று பொறுப்பாளர் நீட்டிய பிஸ்கட்டைக் கையில் எடுத்தபோது அறை வாசலில் நிழலாடியது.

நாவரசன்!

கயல்விழி துள்ளி எழுந்து நின்றாள். பொறுப்பாளரும் தரணியும் முன்னமே பேசிக்கொண்டவர்கள் போல அறையை விட்டுப் போக, அவர்களுக்கு வழி விட்ட நாவரசன் உள்ளே வந்தான்.

அவன் முன்பு பார்த்ததைவிட மெருகேறியிருந்தான். அவனைக் காண நெஞ்சில் வலியெடுக்கிறதே. இந்தத் துன்பத்தை யாரால் விளங்கிக்கொள்ள முடியும்?

"என்ன"

என்றான் அவன் தாழ்ந்த குரலில். ஒற்றைச் சொல்லில் ஏனிப்படியெல்லாம் செய்கின்றாய்?

என்கின்ற ஆதங்கத்துடன் கூடிய குற்றச்சாட்டு வன்மையாகத்தெரிந்தது.

அவள் இன்னும் திகைப்பிலிருந்து விடுபடவில்லை. வேண்டுமென்றே எல்லோரும் சேர்ந்து மடக்கிவிட்டார்கள்.

"கயல்.... கயல்விழி ஒண்டு சொல்லுறன் எப்ப எனக்கு ஓமெண்டீங்களோ அப்பவே எங்கட திருமணம் முடிஞ்சுது..."

நிறுத்தினான்.

"இல்லை. என்ர பிரச்சினை உங்களுக்குத்தெரியாது"

"தெரியும் நீங்க குழம்பினதோட நான் விசாரிச்சிட்டன்"

அவளுக்கு மனம் நொந்து அழுகை வந்தது. யாருக்கு முன்னால் தன் இழப்பை நினைத்து உடையக்கூடாது என்று நினைத்தாளோ அவன் முன்னாலேயே அழுதாள்.

"பிறகென்ன விளங்கேல்லையோ.... நாங்க சேர்றதில அர்த்தமில்ல"

"யார் சொன்னது"

"நான் சொல்லுறன்..."

அழுத்திச் சொன்னவள் மேலே பேசமுடியாமல் விம்மினாள்

"என்ன கயல் இதுக்குப்போய் இப்படி அழ வேணுமா.... சரி... கலியாணம் முடிஞ்சு எத்தினபேர் குழந்தை இல்லாமல் இருக்கினம்.... அதுபோல நாங்கள் இருக்கலாம்..."

ஆதரவான வார்த்தைகள் அவை. ஆனால் தாங்க முடியாமல் இருந்தன.

"என்னெண்டு தெரியாம இறங்கினா வாறத எதிர்கொள்ளும் தைரியம் வரும். தோல்வியெண்டு தெரிஞ்சுக்கொண்டே இறங்கினா அது சலிப்பா இருக்கும்..."

அவள் சிரித்தாள். அது அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தாத தாகத் தோன்றியது அவளுக்கு.

"அது நாங்கள் இறங்கிற சண்டைகளுக்குச் சரி. வாழ்க்கைக்கு இல்ல. கயல்.... தற்செயலா ஒரு வழி பிழைச்சா இன்னொரு வழி... அது பிழைச்சா இன்னொரு சந்து என்று திட்டம் போட்டு வழிநடத்துகிறவரின்ர வளர்ப்புகள் நாங்கள். ஏன் இதுக்கு ஒரு மாற்று வழியை சிந்திக்கேல்ல நீங்கள்"

அவன் பார்வை ஜன்னலுக்கு வெளியே விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளில் பதிந்திருந்ததைக் கண்டாள்.

"ஓம் கயல்... அங்க பாருங்கோ. எத்தினை பிள்ளையள் இருக்கினம். நான் நேற்றே வந்து பாத்திட்டன். ஆறுமாதப்பிள்ளைகூட இருக்கு"

அவள் கண்களுக்குள் பார்த்தான்.

"யோசியுங்கோ கயல். என்னத்துக்கு இவ்வளவு கவலை.
எனக்கு நீங்கள் தான் முக்கியம்"

என்ன சொல்லுறான் அவளுக்கு மூளை விறுவிறுத்தது. இப்படியும் செய்யலாமா? இருவரும் குழந்தை குட்டிகளோடு வாழப் போகிறார்களா....

அவன் தெளிவாக இருந்தான்.

"கயல்... மற்றவையால முடியாததெல்லாம் நாங்கள் தீர்மானிக்கலாம். உங்களுக்கு வெள்ளைப் பிள்ளை வேணுமா அல்லது என்னை மாதிரி கறுப்பா வேணுமா..."

இதமாக அவன் கேட்ட போது அவளுக்கு அழுகை நின்றுவிட்டது. குறுகுறுவென்று அவனைப் பார்த்தாள். உலகம் மறுபடி அழகாகிவிட்டது. தாயன்பை அழகாக்கிவிட்டது. தாயன்பை இழந்த குழந்தையும் அவளும் சேரும் போது இருவருமே பெற்றுக் கொள்ளப் போகிறார்களே...

நாவரசன் சாய்ந்து கொள்ளத் தோள்தரக் காத்திருக்கும் போது அவர்களுக்கென்ன கவலை.

இருவருமாக வெளியே வந்த போது வெளியே வானம் தெளிவாக இருந்தது. பறவைகள் கூட்டமாகப் பறந்துகொண்டிருந்தன.

https://tamileelamarchive.com/

# எரிமலை
# ERIMALAI

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் மற்றும் தொடர்புகட்கு

- Tel: 01 43 58 11 42
- Fax: (33) 1 43 58 11 91
- e.mail: info@erimalai.info
- ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

www.erimalai.info

https://tamileelamarchive.com/

எரிமலை
ERIMALAI





## என்னிடம் மகிழ்ச்சியின் சொற்கள் தானுமில்லை..

என்னால்
உலர்ந்துபோன
இரத்தத்தின்
அடியில்
ரோஜாவின் இதழ்களை
கற்பனைசெய்ய
முடிகிறது.

பூக்களிடம் தொலைந்துபோன
இயல்பைப்போல..
நேற்றுப்பிடுங்கியெறியப்பட்ட
பெருமரத்தின்
மொட்டுக்களையும்
பிஞ்சுகளையும் குறித்த
துயர்மிகும்
சொற்கள் மட்டுமே
இப்போது
என்னிடமுண்டு

அழகுதிர்ந்த கவிதை
துயரமும்
பிணமும் நாறிக்கிடக்கும்
தெருவழியே
அழுதலைகிறது

குருதியூறிய சிங்கத்தின்
வேட்டைப்பல்லிடுக்கில்
அழுகிநாறும்
எம் குழந்தைகளின்
இளந்தசை

கேள்விகளற்ற
நிலத்தில்
துயர்மிகும்
சொற்களைத்தவிரவும்
வேறென்னதான்
இருக்கமுடியும்...

● த.அகிலன்

